

# இந்து தருமம் 2012

ॐ

இந்து மாணவர் சங்கம் 2012 / 2013

பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. சிவதரன், 3ம் வருடம், பொறியியற் பீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

# இந்து தருமம் 2012

இந்து மாணவர் சங்கம் - 2012 / 2013
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.

# Hindu Dharmam 2012





*Hindu Students Union - 2012 / 2013*
*University of Peradeniya,*
*Peradeniya.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | - | இந்து தருமம் - 2012 |
| இதழாசிரியர்கள் | - | க. தர்ஷன்<br>லோ.தக்ஷாயினி |
| வெளியீடு | - | இந்து மாணவர் சங்கம் 2012 / 2013<br>பேராதனைப் பல்கலைக்கழகம்,<br>பேராதனை. |
| பிரதிகள் | - | 250 |
| அட்டைப்படம் | - | க.ஜெய்றோஷன் |
| கனணி வடிவமைப்பு | - | செனித் அச்சகம் - கண்டி |
| அச்சுப்பதிவு | - | ருச்சிர பதிப்பகத்தார் |

| | | |
|---|---|---|
| **Title** | - | **Hindu Dharmam - 2012** |
| **Editors** | - | **G. Tharsan**<br>**L. Thakshajini** |
| **Published By** | - | **Hindu Student's Union 2012 / 2013**<br>**University Of Peradeniya,**<br>**Peradeniya.** |
| **Copies** | - | **250** |
| **Cover Design** | - | **K. Jeiroshan** |
| **Page Layout** | - | **Zenith Line - Kandy.** |
| **Printed By** | - | **Ruchira Offset Printers** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காப்பு

திருவிளக்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்றா னீன்றருளு மைந்தா - முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பேராதனை உறைந்து
பேணி நம்மைக் காப்பதற்குக்
கூரான வேல் தாங்கும்
குறிஞ்சிக் குமாரனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'

மாணவர்களால் உருவாக்கப்பட்டு, மாணவர்களால் பரிபாலனம் செய்யப்படுகின்ற குறிஞ்சிக் குமரன், ஆலயத்தில் வருடந்தோறும் சிவராத்திரி, நவராத்திரி கந்தசஷ்டி வரதம், திருகார்த்திகை, தைப்பூசம், திருக்கல்யாணம் என சமயம் சார்ந்த பல்வேறு நிகழ்வுகள் பேராதனை மாணவர்களால் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன.

மனித குல மேம்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது கல்வியும், வாசிப்பு பழக்கவழக்கங்களும், கல்விசார் ஆய்வுகளும் ஆகும். இப்படியான பழக்க வழக்கங்களை இளைஞர்கள் மத்தியில் விதைப்பதற்காகவும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் சங்கத்தினால் வருடந்தோறும் **இந்து தருமம்** என்னும் சமயசார் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது. இந்து தருமத்தின் **56வது** இதழைச் சிவராத்திரி நன்நாளில் வெளியிடுவதில் பெருமை அடைகின்றோம்.

இந்து தருமம் என்ற நூலின் மூலமாக இந்து சமயத்தின் பண்பாடுகளை உலகறிய செய்வதும், விஞ்ஞான, சமூகவியல் மாற்றங்களுக்கும் ஏற்றவாறு பயணித்து இந்து பாரம்பரியத்தின் பண்பாடுகளை காப்பதற்காக எழுத்து மூலமான யுத்தம் ஒன்றை செய்வதே எமது நோக்கம் ஆகும்.

இந்த எழுத்து மூலமான யுத்தத்தில் சமயசார் ஆக்கங்களையும் ஆராய்ச்சிசார் கட்டுரைகளையும், கவிதைகளையும் வழங்கி யுத்தகளத்தில் பயணிக்கின்ற அனைத்து வீரர்களுக்கும் இந்த சஞ்சிகையின் இதழாசிரியர்கள் என்ற வகையில் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த சஞ்சிகையில் உள்ள சிறப்புக்களை குமரன் பாதத்தில் சமர்பித்து, வாசகர்களாகிய நீங்கள் குறைகளை சுட்டிக்காட்டியும் கலாசாரம் சார் எழுத்து யுத்தத்தில் எம்முடன் பயணிப்பீராக .......................

இதழாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


*1. வாழ்த்தியல்*

இந்து தருமம் 2012ற்கு பெரியோர்கள் வழங்கிய வாழ்த்துக்கள் இவ்வியலில் அடங்கியுள்ளது.

*2. வாழ்வியல்*

1. உண்மைத் தொண்டன் 01
2. விநாயகரின் மகத்துவம் 03
3. மனிதன் மதம் மாறலாம் ஆனால் இந்து மதமோ, மனித விழுமியங்களோ மரணித்துப் போவதில்லை 05
4. இந்து அறிவியல் 08
5. வேலும் மயிலும் 10
6. எங்கும் எதிலும் இறைவன் 12
7. பகவத் கீதை உபதேசம் 16
8. முருகப்பெருமான் தோன்றினார் 18
9. இந்து சமயமும் விஞ்ஞானமும் 22
10. நம்பினால்தான் கடவுள் 25
11. திருவுருவ வழிபாடு 26
12. சிவதாண்டவ தோத்திரம் அருளிய இராவணன் 29
13. இன்பம் எது? 31
14. சின்மயானந்த சுவாமிகளும் சின்மயா மிசனும் 32
15. இறை வழிபாடும் பாகுபாடு பார்க்கும் சமுதாயமும் 36
16. வைகாசி விசாகமும் முருகப் பெருமானும் 39
17. நடராஜர் தத்துவம் 41

*03. ஆய்வியல்*

01. ஈழத்து கைலாயம் திருக்கேதீச்சரம் 44
02. ஹரே கிருஷ்ண இயக்கம் 56
03. சோக்கிரட்டீஸின் ஒழுக்கவியல் சிந்தனைகள் 60
04. காலத்தால் அழியாத காவியம் – திருக்கேதீச்சரம் 65
05. ஈழத்தில் அரவான் களப்பலி சடங்கு 69
06. சிந்துவெளி நாகரீகம் 75

*04. படைப்பியல்*

01. எம்மை இரட்சிப்பீர் 78
02. அன்பே கடவுள் 79
03. நீயிருக்க பயமேன் முருகா 80
04. சீதாவனத் திருக்கோயில் 81
05. குமரன் பெருமை 82
06. குறிஞ்சிக்குமரா 83
07. வரந்தர வா வேலவா 84

*05. பதிவியல்*

01. இந்து மாணவர் சங்க பெருந்தலைவர்கள், தலைவர்கள்
02. குறிஞ்சிக் குமரன் ஆலய சமய நிகழ்வுத் தொகுப்புகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஆலய பிரதம குருவின் ஆசியுரை

*ஓம் ஹ்ராம் கிருஷ்ண ராஜ கணேசான சிவபுத்ர விநாயகாய நமஹா*

*ஓம் சாம் ஸ்கந்தாய கார்த்திகேயாய பார்வதி நந்தி – மகாதேவ குமாரய*

*வள்ளித்தேவ சேனா சமேத குறிஞ்சிக் குமாராயதே நமஹ!!*

இவ்வுலக வாழ்வுக்கு தேவைப்படுகின்ற உடற்பலம், அறிவுப்பலம், பண பலம், அதிகார பலம் போன்ற இவ்வகையான பலங்களை பெற்றிருந்தாலும் ஒரு மனிதன் ஆன்மீக பலம் தாம் அவனை வழிப்படுத்துகின்றது.

மனிதன் இவ்வகையான துறைகளில் முன்னேரிய போதும் ஆன்மீக பலத்தை வெளிக்கொணரும் போது தான் மன நிறைவுடன் வாழ்வாங்கு வாழ்கின்றான்.

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமும் சமூதா நலன் கருதி உருவாகி குறிஞ்சிக் குமரன் ஆலயத்தை மையமாகக் கொண்டு ஆன்மீகத் தொண்டுகளை ஆற்றிவருகின்றது. இக்கால சமுதாயத்தின் சரியான செயற்பாடுகளும் பிழையான நடவடிக்கைகளுக்கும் நற்போக்குகளுக்கும் பற்றுதியான நலன்களுக்கும் வழிகாட்டிய முன்னோர்களே பொறுப்பாளிகளாவர். வருங்கால சந்ததியினர் நலன்களுக்கும் இக்கால மக்கள் வழிகாட்டிகளாக வாழ்ந்து காட்டி நன்நிலைபெற எல்லாம் வல்ல குறிஞ்கிக் குமரன் திருவருள் பாலிப்பாராக.

மாணவர்களின் சிந்தனைகளை வெளிக்கொணரும் இந்து தருமம் நூலில் வெளியீடுகளும் பல நன்மை பயக்க வேண்டும். வாய் மொழியாக வளர்ந்த அறிவானது கல்வெட்டுகள், ஏடுகள், புத்தகங்கள் என வளர்ச்சியடைந்து கணணி உலகம் என சென்று கொண்டிருக்கும் வேளையில் இந்து தருமம் நூலும் இணையத்தளம் செல்லுதல் நன்மை பயக்கும்.

இந்து மாணவர் சங்கத்தினரின் அனைத்து நடவடிக்கைகளும் எல்லோருக்கும் முன்னுதாரணமாக அமைய எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரன் திருவருள் பாலிப்பாராக என்று பிரார்த்தித்து ஆசி கூறுவதுடன் 26 வருடங்கள் குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் பணியாயற்றிய போது சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் அன்பும் ஆதரவும் நல்கிய அனைத்து அன்பான இனிய உள்ளங்களுக்கு மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

*க்ஷுயன ஆலவ குமரா சுவர்ண வள்ளீக குமரா*
*பஜன க்ஷுஹத குமரா பார்வதீ ஆன குமரா*
*அஜ சிவகுரு குமரா ச்சாப்துதாஹார குமரா*
*துவஜ கணருத குமரா ச்சிந்தையேத் குறிஞ்சிக் குமரா*

பா. நித்தியானந்தக் குருக்கள்
குறிஞ்சிக்குமரன் கோயில் பேராானைப் பல்கலைக்கழகம்,
பேராதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய பிரதம குருவின் ஆசியுரை

கலியில் கண்கண்ட தெய்வமான பகவான் ஸ்கந்தர் ஸச்சிதானந்த ஸ்வரூபமான பரப்ரஹ்மமே என்பதே ஸ்கந்த புராணத்தின் ஸித்தமாகும். ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியான சங்கர ஸம்ஹிதை முருகனைப்பரப்ரம்ஹம் என்றே உறுதியாகக் கூறுகின்றது. பரமன் பார்வதிக்கு ஸ்கந்தருடைய விபூதிகளைக் கூறுமிடத்து.

ஸர்வதேவாத்மக: ஸ்கந்த: ஸ்ர்வ லோகாத்மக ஸ்ததா!
ஸர்வ பூதாத்மகாச்சைவ "ஸாஷாத் பிரம்ஹ ஸனாதனம்"
என்று வர்ணிக்கப்படுகின்றார் வ்யாஸமஹரிஷி.

ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அவதாரமாகிய ஸ்ரீ ராமபிரானின் திருப்பாதங்களும், கதிர்காமக் கந்தனின் புனித பாதங்களும் இந்த இலங்கை மண்ணிலே பட்டிருக்கின்றன. நாடெங்கிலும் ஆயிரக்கணக்கான இந்துக் கோயில்கள் நீண்ட நெடுங்காலமாக நிலைபெற்று நிற்கின்றன. இவ்வகையில் மூலமூர்த்தியாக சுப்ரமணியர் தேவியர் சமேதராய் மயில் வாகனத்தில் காட்சி அளிப்பவராக பேராதனைப் பல்கலைகழக குறிஞ்சிக்குமரன் ஆலயம் அமைந்துள்ளது. அலங்கார உற்சவம் நடைபெறும் இவ்வாலயத்தில் எல்லா விஷேட தினங்களிலும் விஷேட பூசைகளும், வழிபாடுகளும் நடாத்தப்படுகின்றன. "இந்து தருமம்" என்னும் சஞ்சிகையை வருடந்தோறும் வெளியிடும் இப்பல்கலைக்கழக மாணவர்கள், பெரியோர்கள் ஆசிரியர்கள் அனைத்து பெரும் உள்ளங்களிலும் இந்து சமய பணி மேலும் வளர்ச்சியடைய ஸ்கந்த பெருமானின் அருள் என்றும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

ஆலய பிரதம குரு
க. வரதராஜசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM VICE CHANCELLOR

I have great pleasure in sending my greetings to Hindu Student's Union of the University of Peradeniya on the event of launching of its annual publication "Hindu Dharmam" to mark the occasion of Maha Shivarathri festival.

The varied cultural activities of the Hindu Student's Union offer its members to exchange views and opinions on matters of shared interest that leads to foster peace and harmony. I appreciate the articles and creative writings by those who have publish in "Hindu Dharmam" that contributes to develop the organizational culture and society as a whole.

I earnestly believe that participation of students in social and cultural activities would facilitate them to broaden their vision of life and society.

I congratulate the members of the Hindu Student's Union for their efforts and achievements towards success of this event and wish them every success in their future endeavors.

**Professor Atula Senaratne**
Vice - Chancellor
University of Peradeniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமாணவர் சங்கப் பெருந்தலைவரின் வாழ்த்துரை

நீலமயிலின் மீது ஞாலவலம் வந்து குறிஞ்சி மலையில் வீற்றிருக்கும் குமரனின் ஆசியுடன் இவ்வாழ்த்துரையைத் தொடங்குகின்றேன். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் இந்துமாணவர் சங்கமானது ஆலயத்தின் நித்தியபூசை உட்பட ஆலயத்தின் நிர்வாகக் கடமைகளோடு நீண்டகால வரலாற்றுத் தொடர்பு உடையது. கடந்த இரண்டு வருடங்களாக இச் சங்கத்தினரோடு இணைந்து கடமையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தினை முருகன் அருளியுள்ளார். இருந்தும் கடந்த வருடம் பல்கலைக்கழக ஆசிரியர்களின் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டம் அதன் காரணமாக மாணவர்களின் விடுதிகள் மூடப்பட்டமையால் விடுதிகளிலிருந்த மாணவர்கள் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் எனப் பல்வேறு சவால்களை எதிர் நோக்க வேண்டியிருந்த போதிலும் விசேட பூசைக் காலங்களில் ஊரில் இருந்து வந்து பூசைக் கருமங்களில் எந்தவிதமான தடங்கலும் ஏற்படாமல் உதவியிருந்தமை பாராட்டுதற்குரியது. மேலும் சங்கத்தின் பெரும்பான்மையான அங்கத்தவர்கள் பொறியியல் பீடத்தினைச் சேர்ந்தவர்களாக இருப்பதினால் கற்றலோடு களவேலை, வெளிக்களப் பயிற்சி என பல்வேறு மேலதிகப் பாட நெறிகளும் உள்ளன. இருந்தும் தங்களுடைய கனமான கல்விப் பணிகளுக்கு மத்தியிலும் ஆலயத்தின் கருமங்களையும் தமது பிரதான கருமங்களில் ஒன்றாகக் கருதிச் செயற்படும் மாணவர்களை நெஞ்சார வாழ்த்துவதோடு வருடாவருடம் அவர்களால் வெளியிடப்படும் இதழான இந்துதர்மம் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் எனவும் அவர்களின் ஆலயப் பணிகள் தொடர்ச்சியாக இடம் பெற முருகன் அவர்களுக்கு அருள் வழங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

புழுவாய்ப் பிறக்கினும்
புண்ணியா உன்னடி வழுவாதிருக்க
வரம்தர வேண்டும் குமரா

வே. சிவயோகலிங்கம்
தலைவர்/ அரசியல் விஞ்ஞானத் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் சங்கத்துக்கும், குறிஞ்சிக் குமரன் ஆலயத்துக்கும் மிக நீண்ட வரலாறு உண்டு. பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்குத் துறைசார் அறிவு புகட்டி, தொழில்துறைக்குப் பொருத்தமுடையவர்களாக அவர்களை வெளியேற்றுகின்ற பணியைச் செய்யும் அதே வேளை அவர்களுடைய பல்துறை ஆற்றலை வளர்ப்பதிலும், அவர்களது ஆத்மீகத் தேடல்களுக்கு வழி சமைப்பதிலும் நெகிழ்ச்சித் தன்மையுடைய நிறுவனமாக இயங்கி, அவர்களைச் சமூகப் பொருத்தப்பாடுடையவர்களாகவும் உருவாக்கி அனுப்புகின்றது. இந்தப் பின்னணியிலேதான் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தையும், இந்து மாணவர் சங்கத்தையும் நோக்க வேண்டியுள்ளது. சங்கம் என்பது கூடிக் கலைந்து, விழாக்கள் வெளியீடுகள் செய்வது மட்டுமல்ல, அது தொழிற்படு அலகாக இயங்க வேண்டுமென்பதும் விதி.

அந்தத் தொழிற்பாடு குறிஞ்சிக் குமரன் ஆலயத்தில் அவர்கள் ஆற்றும் பணியினூடாக வெளிப்படுகின்றது. இது தான் இந்துமாணவர் சங்கத்தின் சிறப்பு. மாணவர் சங்கத்தின் அங்கத்தவர்கள் காலந்தோறும் வருவர், செயலாற்றுவர், செல்வர். எனினும் அவர்கள் பதித்த சுவடுகள் பெறுமதியானவை. கடந்த காலங்களில் அவர்களுடன் இணைந்து செயலாற்றியமையால் இதனை எம்மால் நன்கு உணர முடிந்தது. பட்டதாரி மாணவர்கள் என்ற களத்தைத் தாண்டி மெய்யடியாராயும் அவர்கள் கருமம் ஆற்றியதையும் நன்கறிவேன். அவர்கள் யாவருக்கும் எனது நன்றி கலந்த வாழ்த்துக்கள். இந்து தருமம் காலங்களை வென்று, வரலாற்றில் நிலைபெற, குறிஞ்சியான் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

கலாநிதி எஸ். சிவானந்தவேள்
பெரும் பொருளாளர்
இந்து மாணவர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழுத்தலைவரின் ஆசியுரை

சிவபூமியாகிய இலங்கையின் மத்தியில் கற்றோடும் கற்போடும் நிறைந்த பேராதனைப் பல்கலைக்கழகத்தில், கூரான வேல் தாங்கும் குறிஞ்சிக் குமரன் எழுந்தருளி அடியார் இதயம் குறிஞ்சிக் குமரன் எழுந்தருளி அடியார் இதயம் களிப்புற அருள்பாலித்து வருகின்றார். அவரருளால் இவ்வாலயத்தில் ஆன்மீகச் செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இங்கு நடைபெறும் வருடாந்த உற்சவங்கள் இந்துக்களை இணைத்து சமய ஆசார அனுட்டானங்களைப் பேணி, பண்பாட்டைப் பாதுகாத்து ஆத்மீகப் பலம் பெறுவதற்கு வழிகாட்டுகின்றன.

நமது குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் நிர்வாகத்திலும், பணிகளிலும் பல்கலைக்கழக இந்து மாணவர்கள் ஆற்றிவரும் பங்களிப்புகள் அளவிடற்கரியன. இளைய தலைமுறையினர் சமயத்தை வளர்ப்பதில் கொண்டுள்ள ஆர்வமானது எதிர்காலத்தில் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்குப் பக்கபலமாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழக இந்துப்பட்டதாரிகள் மன்றம், ஆகியவற்றைத் தம்முடன் இணைத்தவாறு பொறுப்பாண்மைக் குழுவின் செயற்பாடுகள் நிறைவேறி வருகின்றன. இச் சங்கத்தின் பணிகளை வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்டுவதாக அமைவது "இந்து தருமம்" நூல் வெளியீடாகும். வருடந்தோறும் வெளிவரும் இந்நூல் இவ்வருடமும் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் சமயப்பெரியார்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவருவது கண்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். தமது கற்றல் செயற்பாடுகளின் வேலைகளுக்கு மத்தியில், இத்தகைய அழகிய மலராக இந்து தருமத்தை வெளியிடுவது கண்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலின் உருவாக்குவதற்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதில் பெரும் மனநிறைவு காண்கின்றேன்.

கடந்த வருடங்கள் போன்று இவ்வருடமும் இந்து மாணவர் சங்கம், பொறுப்பாண்மைக் குழுவுடன் இணைந்து குறிஞ்சிக் குமரன் ஆலய வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வருகின்றமைக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இந்து தருமம்" இந்துக்களின் கலாசார பண்பாட்டு வளர்ச்சிக்கு ஏற்ற கருத்துக்களைத் தாங்கி, வாசகர் இதயங்களுக்கு நல்விருந்தாக வருடந்தோறும் வெளிவரவும், இம் மன்றத்தின் பணிகள் மேன் மேலும் சிறக்கவும், குறிஞ்சிக் குமரனின் திருவருளைப் பரவி வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர். வை. நந்தகுமார்
தலைவர், பொறுப்பாண்மைக்குழு
குறிஞ்சிக் குமரன் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப்பட்டதாரிகள் மன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் சங்கம் வருடாந்தம் வெளியிடும் "இந்து தருமம்" சஞ்சிகைக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்து தருமத்தின் மூலவேராக அமைவது அருள் மிகு குறிஞ்சிக் குமரன் ஆலயம். குறிஞ்சிக்குமரன் ஆலய இயங்குதளத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட நியமச் செற்பாடுகளின் வெளிப்பாடே இந்து தருமம்.

இங்கு இந்து தருமத்தை பட்டதாரி மாணவர்கள் செயல்வடிவமாக்குகின்றனர். ஒரு ஆத்மீக நிறுவனத்தை இயங்கச் செய்வது என்பது சாதாரண விடயமல்ல. இங்கு கல்விச் செல்வம் தேடிவரும் இளஞ்சமூகத்தினர் இந்த நிறுவனத்துடன் இணைந்து ஆத்ம சேவை புரிகின்றனர். பொறுப்பாண்மைக் குழுவில் மூத்தோராகிய ஆசிரியர்கள் வழி நடத்தலில், முன்னோடிகளான இந்துப் பட்டதாரிகளின் அனுசரணையில் அவர்கள் தம் செயலைச் செவ்வனே நிறை வேற்றுகின்றனர். இது பாராட்டுக்குரியது. அவர்கள் தமது செயற்பாட்டின் பதிவாக இன்று வெளிகொணரும் ஆவணமான இந்து தருமம் காலங்களையும் கடினங்களையும் முருகன் அருளால் வெற்றி கொண்டு நிலைத்த புகழுடன் வாழ்க.

பேராசிரியர் வ. மகேஸ்வரன்
தலைவர் தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.
*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

Glad to know that the 'Hindu Students' Union of University of Peradeniya launches "Hindu Dharmam" magazine annually on 'Maha Sivaratri' festival and this year also you are going to publish this magazine.

For the last few years you are bringing out this magazine with good articles in different topics, which are useful for students as well as for others who read the magazine.

Swami Vivekananda said "Religion is the idea which is raising the brute unto man, and man unto God. The secret of religion lies not in theories but in practice. To be good and to do good – that is the whole of religion.

My idea indeed can be put into a few words and that is: to preach unto mankind their divinity and how to make it manifest in every movement of life. Purity, patience and perseverance are the three essentials to success and, above all – love. "

I pray to the lord to shower His choicest blessing on those who are connected with bringing out this magazine.

02.03.2013

With love and best wishes,

Swami Sarvarupananda

(Swami Sarvarupananda)
Vice – president/ Chairman

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கத் தலைவரின் வாழ்த்துரை

வான் தொடும் குறிஞ்சி மலை உச்சியில்
வேலுடன் அமர்ந்து பேரருள் பொழியும்
வேலா உன் திருவடி தொட்டு இம்மடலை
வரைகிறேன்.

கண்டி மாநகரில் குறிஞ்சிப்பகுதியிலே குமரனாக அமர்ந்து எம்மையெல்லாம் ஆன்மீக பாதையிலே சென்று ஈடேற்றமடைய அருள்பாலித்துக் கொண்டிருக்கின்ற குறிஞ்சிக்குமரன் புகழ் உலகமெல்லம் பரவச்செய்ய வேண்டியது எங்கள் ஒவ்வொருவருடையதும் தலையாய கடமையாகும்.

ஆறுகள் பல இடங்களில் ஆரம்பித்து பல பாதைகளில் பயணம் சொய்தாலும் இறுதியில் கடலையே சென்றடைகின்றன. அவ்வாறு தான் மனித வாழ்வும், இதனை வள்ளுவர் பெருமான் அழகாக விபரிக்கிறார்.

"அறத்தூற்றின் இல்வாழ்க்கையாற்றின் புறத்தாறிற்
போ தய்ப் பெறுவது எவன்"

ஆகவே நாங்கள் செல்லும் பாதை சிறப்பானதாக அமைய எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரனை வணங்கி, குமரனின் சமய, சமூக பணிகள் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கின்ற அனைவருக்கும் குமரனின் திருவருள் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து கொள்கின்றேன். புதிய செயற்குழுவை அன்புடன் வரவேற்று, இந்து மாணவர் சங்கத்தால் வருடந்தோறும் மேற்கொள்ளப்படும் முக்கிய செயற்பாடுகளில் மணிமகுடமாக திகழ்வது "இந்து தருமம்" மலர் வெளியீடாகும். அந்த வகையில் 56வது இதழுக்கு இந்து மாணவர் சங்கத்தலைவராக இருப்பது இறை தந்த பேறு என கருதுகின்றேன்.

இவ் இதழ் சிறப்புற எல்லாம் வல்ல குறிஞ்சிக் குமரனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

கு. ஜெயமோகன்
தலைவர் - இந்து மாணவர் சங்கம்
இறுதி வருடம், பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைத் தொண்டன்

வே. சிவயோகலிங்கம்
அரசியல் விஞ்ஞானத் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

மக்கள் வரிப்பணத்தில் போடும் திட்டங்களுக்கு கூட தங்கள் பெயரை சூட்டிக் கொள்பவரைத்தான் இன்றைய உலகில் காண்கிறோம். ஆனால் அக்காலத்தில் தன் செலவில் செய்த தொண்டுகளுக்கு ஒரு சிவனடியாரின் பெயரை இட்டார் ஒரு அன்பர். அவர்தான் அப்பூதியடிகள்.

தஞ்சாவூர் அருகிலுள்ள திங்களூரில் வசித்தவர் அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் மீது அன்பு கொண்டவர். ஆனால் அவரைப் பார்த்ததில்லை என்றாலும் அவரது சிவ பக்தியால் ஈர்க்கப்பட்டு தன் பிள்ளைகளுக்குக் கூட மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு என்று பெயர் சூட்டியவர்.

ஒரு சமயம் கோடை காலத்தில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து அதற்கு திருநாவுக்கரசர் பெயரை சூட்டியிருந்தார். அவ்வழியாக வெயிலில் களைத்து வந்த மக்கள் தண்ணீர் குடித்து பந்தலடியில் இளைப்பாறிச் சென்றனர். அவ்வூரில் கைலாச நாதர் கோவில் உள்ளது. ஒரு முறை திருநாவுக்கரசர் அந்தத் தலத்தை வழிபடுவதற்காக வந்தார் தன் பெயரில் தண்ணீர்ப் பந்தல், சத்திரங்கள் என இருந்ததைப் பார்த்தார். அப்பூதியடிகள்தான் அவற்றை நிறுவியிருப்பதாக கேள்விப்பட்டு அவரைக் காணச்சென்றார்.

வந்திருப்பது நாவுக்கரசர் எனத் தெரியாமலே அப்பூதியடிகள் அவரை வரவேற்றார். அவரிடம் "ஐயா தொண்டு செய்யும் உங்கள் பெயரில் தண்ணீர் பந்தல், சத்திரம் அமைக்காமல் யாரோ ஒருவர் பெயரில் வைத்துள்ளீர்களே" ஏன் என்று கேட்டார். இதைக்கேட்டு அப்பூதியடிகளுக்கு கோபம் வந்துவிட்டது. பெரியவரே நாவுக்கரசர் எவ்வளவு பெரிய அடியார் தெரியுமா கல்லைக்கட்டிக் கடலில் இறக்கியும் கூட மிதந்து வந்தவர் அவர். "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்று எமனுக்கே சவால் விட்ட சிவப்பழம். அவரது அருமை தெரியாதவராக இருக்கிறீரே நீங்கள் ஒரு அடியவர் என்பதால் இத்துடன் விட்டேன் என்று ஆவேசமாக பேசினார்.

நாவுக்கரசர் சிரித்தபடியே ஐயா கோபம் வேண்டாம் தாங்கள் குறிப்பிட்ட நாவுக்கரசன் நான்தான் என்று பணிவோடு கூறினார். உடனே நெடுஞ்சான்கிடையாக காலில் விழுந்து அறியாமல் செய்த தவறுக்கு மன்னிப்பு கோரினார் அப்பூதியடிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் தன் வீட்டில் சாப்பிடுமாறு அவரைக் கேட்டுக்கொண்டார். நாவுக்கரசரும் சம்மதிக்கவே அறுசுவை விருந்து தயாரானது. தன் மகன் மூத்த நாவுக்கரசுவை தோட்டத்திற்கு சென்று இலை அறுத்து வருமாறு அனுப்பினார். அங்கே அவன் சென்ற போது பாம்பு தீண்டி இறந்து போனான்.

இந்த தகவல் அப்பூதியடிகளுக்கும் அவரது மனைவிக்கும் தெரிந்தாலும் அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. துக்கத்தை மறைத்து நாவுக்கரசருக்கு உணவு பரிமாற தயாராயினர். அப்போது நாவுக்கரசர் உங்கள் மூத்த மகன் எங்கே என்று கேட்டபோது உண்மையைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார் அப்பூதியடிகள். நாவுக்கரசர் கலங்கிவிட்டார். "இறந்த வீட்டில் விருந்தா உங்கள் கருணைக்கு அளவில்லையா கொண்டு வாருங்கள் சிறுவனின் உடலை எல்லாரும் கைலாசநாதர் கோவிலுக்குச் செல்வோம்" என்றார்.

சிறுவனின் உடலுடன் எல்லாரும் அங்கு சென்றனர். ஊரே கூடியிருந்தது. "கைலாசநாதரே, தன்னலம் கருதாமல் பிறருக்காக அரும்பணிகள் செய்யும் ஒருவரை இப்படி சோதிக்கலாமா அதிலும் எனக்காக இலை கொண்டு வரச் சென்ற நேரத்தில் இப்படி நிகழச்செய்து விட்டாயே" என்று கூறிப் பதிகம் பாடினார். விழுந்தது போல் எழுந்தான் முத்த திருநாவுக்கரசு ஊரே மகிழ்ந்தது. சில நாட்கள் அங்கு தங்கிய நாவுக்கரசர் திருப்பாழனம் எனும் தலத்துக்குச் சென்று இறைவனைப் பாடும்போது அப்பூதியடிகளின் சிறப்பையும் பாடினார்.

அப்பூதியடிகளின் குருபூஜை தை மாத சதய நட்சத்திரத்தில் நிகழும். சிவாலயங்களில் நாயன்மார் சந்நிதியில் இவர் இருப்பார். சுய தம்பட்டமில்லாமல் தொண்டு செய்த அந்த அடியவருக்கு அந்நாளில் பூஜைசெய்வோம். சுயநலமற்ற தொண்டு செய்ய உறுதி எடுப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரின் மகத்துவம்

நிர்விகலா.பா,
2ம் வருடம்,
பொறியியற்பீடம்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர் புஜம்
பிரசன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே.

எம்மில் பலருக்கு இஷ்ட தெய்வம் விநாயகர். விநாயகரின் வாகனம் மூர்ஷிகம். மோதகம் அவருக்கு பிடித்த உணவு. வினை தீர்ப்பான் விக்கின விநாயகன். அவருக்கு வாகனமாகிய மூர்ஷிகம், அசுர பிரதிநிதியாகிய முஷிகாசூரனை சத்துவ சக்தியின் வெளித்தோற்றமாகிய விநாயகர் அடக்கி ஆளும்போது அந்த அசுர சக்தியே அவருக்கு வாகனமாகியது. ஆற்றல் அறிவுக்கு கட்டுப்பட்டிருக்கும் வரை நலன்களையே தரும். பெருத்த உருவம் உடைய விநாயகர் சின்னஞ்சிறிய உருவம் படைத்த மூர்ஷிகத்தின் மீது அமர்ந்திருப்பது எங்கும் பரவியுள்ள பரம்பொருள் சிறு துரும்பிலும் இருக்க முடியும் என்பதையே காட்டுகிறது. விநாயகர் தடைகளை நீக்குகின்ற அறிவு சக்தி, முர்ஷிகம் சுறுசுறுப்புக்கு எடுத்துக்காட்டு, சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் துணை இருக்க தடைகளை உடைத்தெறிய அறிவால் முடியும் என்பதே விநாயகரும் மூர்ஷிகமும் இணைந்த காட்சித் தத்துவமாகும். தந்திர நூல்களில் பூமியில் மறைந்து கிடக்கின்ற நெருப்பை மூர்ஷிகனாகவும் மூலாதாரத்தில் உறைந்து கிடக்கின்ற சக்தியை கணேசனாகவும் குறிப்பிட்டுள்ளனர். இந்த இரண்டு சக்திகளின் சேர்க்கை தந்திர சாதகனுக்கு அவனின் வழிபாட்டுக்கு எல்லையற்ற ஆற்றலைப் பூமியிலிருந்து பெற வழிவகுக்கிறது.

மனிதர்களின் வாழ்வில் கஷ்டங்களும் துன்பங்களும் அவரவரின் கிரகசஞ்சாரப்படிதான் ஏற்படுகின்றன என்று ஆன்மிக நூல்கள் கூறுகின்றன. அவ்வாறு கிரக சஞ்சாரப்படி நடக்கும் செயல்கள் நமக்கு மொத்தமாக பாதிப்பை ஏற்படுத்தாமல் விக்கினங்களை கட்டுப்படுத்தி நம்மைக் காத்து அருள் புரிபவராக கணநாதனாகிய விக்கினேஸ்வரன் உள்ளார் என்பது உண்மைத்தத்துவம். "பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்தது" என்று ஒரு பழமொழி உண்டு. இதன் உண்மைப்பொருள் என்ன? எந்தக் காரியத்தை செய்ய ஆரம்பிக்கும் போதும் பிள்ளையார் பூஜையுடன் ஆரம்பிக்க வேண்டும் என்று பெரியோர்கள் விளக்கம் தந்துள்ளனர். நாம் செய்யும் செயல் பிள்ளையார் பூஜையில் ஆரம்பித்து அனுமார் பூஜையில் முடிவதாக இருத்தல் வேண்டும். அவ்விதம் முடிந்த கதைதான் மஹாபாரதம். மஹாபாரதக் கதை எப்படித் தொடங்குகிறது? பிள்ளையாருடன் தான், எவ்வாறு? வியாசகரின் மனதிற்குள் மஹாபாரத சுலோகங்கள் இருந்தன. இதனை எழுதுவதற்கு யாரை அணுகலாம் என யோசித்தார். வியாசகர் பின்னர் பிள்ளையாரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகினார். "நான் சொல்லும் வேகத்திற்கு உங்களால் எழுத முடியமா?" என்று விநாயகரிடம் கேட்டார் வியாசர். "நான் எழுதும் வேகத்திற்கு உங்களால் சொல்ல முடியுமா?" என்றார் விநாயகர். இப்படி இவர்கள் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு நமக்கு கொடுத்ததுதான் மகாபாரதம். அது சரி பிள்ளையாருடன் ஆரம்பித்தாகிவிட்டது. யாருடன் முடிந்தது? போர் முடிந்ததும் ஸ்ரீகிருஷ்ணர் முதலில் அர்ஜுனனை ரதத்தில் இருந்து இறங்குமாறு கூறினார் அவனும் இறங்கினான். பின் ஸ்ரீகிருஷ்ணரும் ரதத்தை விட்டு இறங்கினார். அவர் இறங்கியவுடனேயே ரதத்தில் இருந்த கொடியில் இருந்த அனுமான் மறைந்து விட்டார். உடனேயே ரதம் தீப்பிடித்தது. எனவேதான் மஹாபாரதம் பிள்ளையாருடன் ஆரம்பித்து அனுமாருடன் முடிகிறது எனக் கூறப்படுகிறது. நாம் எந்த செயலைச் செய்யமுன்பும் விநாயகர் வழிபாடு செய்வது சாலச்சிறந்தது.

உலகத்தை பல்வேறு கணங்கள் காத்து கட்டுப்பாட்டோடு இயங்கச்செய்கிறது. அந்தக் கணங்களை சற்றும் கோணாமல் பிசகாமல் இயக்கி வருவது கணபதி தான். கணபதி என்றதும் உங்களுக்கு தலையில் குட்டி தோப்புக்கரணம் போடுவது ஞாபகம் வருகிறதல்லவா. அதுசரி தோப்புக்கரணம் என்றால் என்ன? பிள்ளையாருக்கு மட்டும் ஏன் தோப்புக்கரணம் போடுகின்றோம்? இது எல்லோர் மனதிலும் இருக்கும் கேள்வி. தேவகணங்கள் யாவரும் பிள்ளையாருக்கு உட்பட்டவர்கள் என்பதால் மகாவிஷ்ணுவும் அதற்கு விதிவிலக்கு அல்ல அவர் ஒருநாள் பார்வதி பரமேஸ்வரனை தரிசனம் செய்ய திருக்கைலாயத்திற்கு சென்றார். அப்போது அங்கே விளையாடிக் கொண்டிருந்த கணபதியிடம் தனது சக்கரத்தை கொடுத்தார் மகாவிஷ்ணு. விளையாட்டினூடே இந்த சக்கரத்தை வாயில் போட்டுக்கொண்டு வாயையும் அழுத்தமாக மூடிக்கொண்டு விட்டார் எங்கள் குட்டிக்கணபதி. காக்கும் கடவுளோ தவித்துப்போனார். அவர் என்னதான் கெஞ்சினாலும் கொஞ்சினாலும் அது கணபதியிடம் எடுபடவில்லை. அதனால் திருமால் தனது இரு கைகளாலும் தன் இரு காதுகளையும் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தும் எழுந்தும் விளையாட்டுக்காட்டினார். இதனால் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த கணேசன் வாய்விட்டுச் சிரிக்கவும் அவர் வாயிலிருந்து சக்கரம் வெளியே வந்து விட்டது. திருமாலும் நிம்மதி அடைந்தார். வடமொழியில் "தோப்பி" என்றால் கைகள் என்றும் "கரணம்" என்றால் காதுகள் என்றும் பொருள். கைகளால் காதுகளைப் பிடித்துச் செய்யும் முறை "தோப்புக்கரணம்" என்று வழக்கமாயிற்று. மற்றும் விநாயகப்பெருமானுக்கு சிதறு தேங்காய் உடைப்பது ஏனெனில், மனிதனுக்கு "தான்" என்ற அகம்பாவ உணர்ச்சி இலகுவில் விலகாது. தேங்காயின் ஓட்டைப்போல் உறுதியாக நிற்கிறது. ஆனால் அது உடைந்து சிதறிப்போய்விட்டால் உள்ளே இனிய நீரும் வெண்மையான தேங்காயும் கிடைப்பதைப் போல் பக்குவமான ஞான உணர்வு நமக்கு கிடைக்கிறது. ஓங்கார வடிவத்தை கொண்ட விநாயகரின் முன் தேங்காயை உடைப்பதன் மூலம் நாம் இவ்வாறு பக்குவமடைய முயலுவதே இந்தச்செயலின் அடையாளம். விக்கினம் தீர்க்கும் விநாயகரை நம்பிக்கையுடன் ஒரு கணம் நினைத்தாலே அவர் நமக்கு வேண்டிய அருள் புரிவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனிதன் மதம் மாறலாம் ஆனால் இந்துமதமோ மனித விழுமியங்களோ மரணித்துப் போவதில்லை."

சி.விக்கினேஸ்வரன்
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இந்து மதம் ஆலய வழிபாடு என்றவுடன் நகைப்பவர்களே அதிகம் ஏனெனில் தற்காலத்துவிஞ்ஞான வளர்ச்சியில் மெஞ்ஞானம் முடங்கிப்போயிற்று எனலாம். ஆனால் விஞ்ஞானத்தின் முடிவு தான் மெஞ்ஞானம் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். இந்து மதமும் ஆலயங்களும் அவற்றினால் கடைப்பிடிக்கப்படும் மனித விழுமியங்களும் பற்றி ஆராய்வோம்.

முதலில் மதம் என்பது என்ன? காட்டில் வேட்டையாடித் திரிந்த மனிதன் முதலில் கல்லை வழிபட்டான், மரத்தை வழிபட்டான். கொடிய விலங்குகளிற்கு பயந்தான். இதனால் அவன் கூரிய ஆயுதங்களோடும் கத்தி, ஈட்டி, வேல் போன்ற போர் கருவிகளோடும் காட்டில் அலைந்து திரிந்தான். இந்த மனிதனை நெறிப்படுத்துவதற்காக தோன்றியதே மதம். இம் மதங்களில் ஒன்றே இந்து மதம் எனும் நன் மதம். ஆனால் இன்று பல்வேறு மதங்களும் தோன்றியதால் மனிதர்கள் மதம் பிடித்து திரிகிறார்கள். இதனால் மதம் என்று சொல்லி மனிதர்கள் மதச்சண்டையிட்டு மண்ணோடு மண்ணாய் போகிறார்கள்.

இனி "ஆலயம்" எதற்காக கட்டப்பட்டது என சிந்திப்போமாயின் விஞ்ஞானம் ஒன்று சொல்லும், மெஞ்ஞானம் பிறிதொன்று சொல்லும் ஆனாலும் நற்பண்புகளை வளர்க்கும் இடமாகவும் எந்த செயலை செய்வதற்கு முன்னரும் கடவுள் இருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்தும் முகமாக ஆலயம் கட்டப்பட்டது. அத்துடன் தீயவை செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதை உணர்த்துகிறது. ஆனால் இன்று ஆலயம் பக்தி மயமாக இல்லாமல் பொழுதுபோக்கு இடமாக இருப்பதே வருந்தத்தக்கது.

ஆனால் தற்போது ஆலயத்திற்கு வருபவர்கள் சிலர் அரட்டை அடிப்பதற்காகவும் இன்னும் சிலர் தோழர் தோழிகளை சந்தித்து சுகம் விசாரிப்பதற்காகவும் வேறு சிலர் பிரசாதம் சாப்பிடுவதற்காகவும் பலர் ஏதோ ஒரு வகையில் நேரத்தை கழிப்பதற்காகவும் வருகிறார்கள். ஆனால் ஆலயங்கள் பிரசாதம் கொடுப்பதன் நோக்கம் விருந்தோம்பற் பண்பை வளர்த்தல், பகிர்ந்து உண்ணல், ஆசைகள் மட்டுப்படுத்தப்படல் போன்ற நற்பண்புகளை வளர்ப்பதே ஆகும்.

அன்புள்ளம் கொண்டவர்களிடத்தில் ஆண்டவன் இருக்கிறார் என்பார்கள் ஆனால் ஏழைகளை உதாசீனப்படுத்துவார்கள், உயிர்கள் இடத்தில் அன்பு செலுத்த வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பார்கள் ஆனால் எச்சில் கையால் காகம் திரத்த மாட்டார்கள். இப்படி சுயநலம் மிக்கவர்களே அதிகம் நம்மதத்தில் இருக்கிறார்கள். மேலும் கோயிலில் பொங்கல் வடை வைப்பார்கள் பூசை முடிந்தவுடன் அவ்வளவு பிரசாத்தினையும் வீட்டிற்கு கொண்டு சென்று விடுவார்கள். இப்படி ஏன் நீங்கள் கடவுள் என்று சொல்லி பொங்கல் மடை செய்ய வேண்டும்? வீட்டிலேயே செய்து சாப்பிடுவது தானே' ஊருக்கு தம்மட்டம் அடிப்பதற்காகவா புரியவில்லை!!!

ஆலயத்திற்கு மாமிசம் சாப்பிட்டு வருபவர்களே அதிகம். சில ஆலயங்களில் தற்போது மாமிசம் படைப்பதற்கு அனுமதித்திருக்கிறார்கள். அங்கு இவர்கள் செல்வதில் தப்பில்லை ஆனால் பெரும்பாலான ஆலயங்கள் ஆகமவிதிப்படி கட்டப்பட்டு இருப்பதால் இவ் ஆலயங்களுக்கு மாமிசம் சாப்பிட்டு விட்டு செல்லுதல் தவறாகும்.

கோயிலிற்கு செல்லும் போது ஆண்கள் வேட்டியுடன் செல்ல வேண்டும் என்று சமயம் சொல்லவில்லை பண்பாடு தான் சொல்கிறது. பண்பாடு இடத்திற்கு இடம் வேறுபடும். உதாரணமாக கொழும்பில் ஆண்கள் வேட்டியுடன் மேல் சட்டை அணிந்தவாறு சுவாமி தூக்குகிறார்கள். எனினும் மற்றைய இடங்களில் இவ்வாறில்லை. எனவே பண்பாடு கலாச்சாரம் இடத்திற்கு இடம் மாறினாலும் இந்துமதம் ஒன்று தான்.

எல்லோரும் நினைப்பது போல ஊருக்கு நல்லது செய்வது என்றால் புதிதாக ஆலயம் கட்டுவது தான் என சிந்திப்பது தவறில்லை. ஆனால் இப்படிக் கட்டப்பட்டு பல ஆலயங்கள் கவனிப்போர் அற்று இருப்பது வேதனையை தருகிறது. எனவே புது ஆலயங்கள் கட்டுவதை தவிர்த்து இருக்கின்ற ஆலயங்களை புனரமைக்கலாம். அநாதை ஆச்சிரமங்களுக்கு, உதவியற்றோருக்கு, நலிவுற்றோருக்கு, உதவலாம். இதனை விடுத்து சுயலாபத்திற்காக கோயில் கட்டி பெரிய புண்ணியம் செய்ததாக இறுமாப்பு கொள்ளாதீர்கள்.

இன்றைக்கும் சில ஆலயங்களில் இரத்தபலியிடல், வேள்விகள், நடக்கின்றன. இதனை ஒரு போதும் நிறுத்த முடியாது. ஏனெனில் நாங்கள் எப்பொழுது மாமிசம் சாப்பிடாது விடுவமோ அப்போது தான் நிறுத்த முடியும். உதாரணமாக கீரிமலைக்கு அண்மிய பிரதேசம் ஒன்றில் இரத்தபலி நடப்பது வழமை. சென்ற வருடம் இதனை அரசாங்கம் சட்டரீதியாக தடை செய்தது. இதன் பிரதிபலிப்பாக ஆலயத்தின் பக்கத்து காணியில் இரத்தபலியிடல் நடந்தது, என்ன செய்ய முடிந்தது அரசாங்க சட்டத்தால்?

சில பேர் கோயிலுக்கு கஷ்டங்கள் வரும் போதும் அல்லது சில தேவைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றிக்கொள்ளவும் செல்வார்கள். தமது கஷ்டங்கள் நீங்கி தேவைகள் நிறைவேறிய பின்னர் கோயிலுக்கு செல்லாமல் இருப்பவர்களே நம் இந்துமதத்தில் அதிகம். சரியை தொண்டு, கிரியை தொண்டு என்று புத்தகத்தில் படிப்பார்கள் ஆனால் கோயிலுக்கு சிரமதானம் என்றால் வரமாட்டார்கள்.

சில ஆலயங்களில் உற்சவ காலங்களில் பலவிதமான மின்குமிழ்களை ஒளிர விடுவார்கள், ஒலிபெருக்கியில் பாட்டு போடுவார்கள், இசை கச்சேரிகள், இசைநிகழ்ச்சிகள் என்று பலவிதமாக நடத்துவார்கள். இதற்காக செலவிடும் பணத்தில் குறிப்பிட்ட தொகையையாவது ஏழை எளியவர்களுக்கு உதவினால் புண்ணியம் கிடைக்கும். ஒலி பெருக்கியில் சத்தமாக இரவுவேளைகளில் பாட்டு போடுவதால் சில வயோதிபர்களின் இரவுத்தூக்கம் கெடுகிறது. அது மட்டுமல்ல இருதய நோய் உள்ளவர்கள் இக்கட்டான நிலைக்கு உள்ளாவார்கள். அத்துடன் பகல் வேளைகளில் பாட்டு போடுவதால் பாடசாலை, வைத்தியசாலை ஏனைய நிறுவனங்களும் பாதிப்புக்குள்ளாகும். பகல் வேளைகளில் ஒலிபெருக்கியில் பாட்டு போடுவது தடைசெய்தும் இதனைப்பற்றி கவலைப்படாமல் தமது சந்தோசத்தை மட்டும் பார்ப்பவர்களே அதிகம்.

இறுதியாக மதம் மாறுவது பற்றி சிந்திப்போமாயின் 15ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வந்த வெள்ளையர் வருகையினால் தோன்றியதே கிறிஸ்தவ மதம். அன்று இந்துமதத்திலிருந்து மாறியவர்களே இன்றைய கிறிதஸ்வர்கள். ஆனால் சுயதேவைகளை நிறைவேற்றிக்கொள்ள புதிய புதிய மதங்களை தேடுகிறார்கள். தற்காலத்தில் இந்துமதத்தில் இருந்து வேறு மதத்திற்கு மாறியவர்களில் சிலர் தமது வறுமைச்சூழலை நீக்கவும் தொழில் வாய்ப்பை பெறுவதற்கும் மாறியவர்களே அதிகம். இது அவர்களுடைய சுய விருப்பமாக இருப்பதனால் அவர்களை ஒன்றும் சொல்ல முடியாது. நம்முடைய இந்துமதத்தில் குறையாக கருதுவது என்ன எனில் நம்முடைய மதத்திற்குரிய சரியான தலமையகம் இல்லை இருந்தாலும் அவற்றின் நம்பிக்கைத்தன்மை குறைவு ஏனெனில் கள்ளச்சாமியார்களின் அடாவடி அதிகம்.

மேலுள்ள குறைகளை நிவர்த்தி செய்து பிழைகளை திருத்தி உண்மையான ஒற்றுமையின் கீழ் சிறந்த உன்னதமான இந்துமதத்தை கட்டி எழுப்பும் போது நாம் இந்து என்பதை நினைத்து பெருமை அடைவோம்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அறிவியல்

ச.ரகுராஜ்
4ம் வருடம்
மருத்துவபீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

உலகத்தின் பழம்பெரும் நாகரீகம் வழிவந்த மதங்களில் ஒன்றாக சிறந்து விளங்குவது இந்துமதம். எம்மதத்தில் பண்டைய காலத்தில் சமயச்சடங்குகள், சம்பிரதாயங்கள் மூலம் கூறப்பட்ட பல கருத்துக்களும் தற்போது நடைமுறையிலுள்ள பல கிரியைகளுக்கும் விஞ்ஞான ரீதியிலான அடிப்படை இருப்பதென்பது பல அறிஞர்களின் வாதம். இதிலிருந்து இந்துமதம் ஒரு அறிவியல் வளர்ச்சியுடன் கூடிய மதம் என்பது உறுதியாகின்றது. குறிப்பாக இந்துமதத்தில் நடைமுறையிலுள்ள தீ மிதித்தல் (firewalk), தூக்குக்காவடி, செடில்காவடி என்பவற்றின் விஞ்ஞானவியல் அடிப்படை பற்றியதே இக்கட்டுரையாகும்.

நோ (Pain) என்னும் துலங்கல் மனிதனால் உரைக்கப்படும் மனிதப்புலன் அங்கங்களினூடாக கடத்தப்படும் போது அவனுடைய இயல்புநிலையை மாற்றுகின்ற மன எழுச்சியுடன் கூடிய தூண்டலுக்குரிய ஒரு துலங்கலாகும். இந்நோவினை ஒருவர் உணரும், வெளிப்படுத்தும் தன்மை அவரிற்கே தனித்துவமானது. அதாவது நபருக்கு நபர் வேறுபடும். அத்துடன் நோவை உணர்வதற்கான அடிப்படை உளவியல் ஆளுமைகளினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

தற்கால ஆய்வுகளிலிருந்து வெளிப்படுவது நோ, குளிர், வெப்பம் போன்ற புலன் உணர்வுகள் உயர் உளவியல் ஆளுமைகளினால் (higher function) ஆளப்படுகின்றன. அதாவது புலன் அங்கங்களினால் (receptors) உணரப்பட்ட செய்திகள் மின்செய்திகளாக மாற்றப்பட்டு நரம்புகளினூடாக மூளைய மேற்பட்டையிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு உணரப்படுகின்றது. இவ்வாறு கொண்டு செல்லப்படும் இடைவழியில் மூளையில் அடி (Brain stem) எனும் இடத்தில் இக்கணத்தாக்கங்கள் மாறுதலிற்கு உட்படுத்தப்படலாம். அதாவது மிகப்பலமான ஒரு உளவியல் பின்னணி இருக்குமிடத்தில் மூளையில் உயர் தொழிநுட்ப அலகினால் (limbic system) பிறப்பிக்கப்படும் எதிர்விசையான கணத்தாக்கங்கள் மூளையின் அடிப்பகுதியில் நரம்பு இரசாயனப் பதார்த்தங்கள் (Neuro transmitters) மூலம் செயற்பட்டு நோ எனும் உணர்வை அமைப்பழிவடையச் செய்வதுடன் நோவை மேற்பட்டை உணரும் தகவையும் குறைக்கின்றது. இதனால் நோவை வெளிப்படுத்தும் துலங்கலும் குறைக்கப்படுகின்றது.

இதனடிப்படையிலான நிகழ்வே எம்மதத்திலும் இடம்பெறுகின்றது. அதாவது கடவுளின் மீது நாம் கொண்ட நம்பிக்கையின் விளைவாக ஏற்படுத்திய நேர்த்தியானது, எமது உயிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணயம் வைக்கும் அளவிற்கு எம்மை இட்டுச்செல்கின்றது. இதனால் ஏற்படுத்தப்படும் எதிர்விசை உயர் உளவியல் தூண்டல் தீ மிதித்தலின் போது உணரப்படும் வெப்ப உணர்ச்சியை உணரக்கூடிய அளவிற்கு எம்மை புலனடையச் செய்வதில்லை.

இதையொத்த நிகழ்வுகளாக விளையாட்டில் ஈடுபடும் ஒரு விளையாட்டுவீரன் களத்தில் ஏற்படும் காயங்கள், நோக்களைப் பொருட்படுத்தாமல் விளையாட்டு முடியும் வரை விளையாடுகின்றான். யுத்தமுனைகளில் போராளிகள் தம்மீது ஏற்படுத்தப்பட்ட காயங்கள், நோ என்பவற்றைப் பொருட்படுத்தாமல் செயற்பட்டு போர் முடிவின் போதே அதனது தாக்கத்தை உணர்கின்றனர்.

இவற்றை விட நாம் ஓடும் பயிற்சியின் போது வெறுமனே ஓடாமல் பாட்டினைச் செவிமடுத்து பயிற்சி செய்யின் நீண்டநேரம் எம்மால் உடற்பயிற்சி செய்யமுடியும். இதனை விட ஒலிம்பிக் சாதனைகளின் போது சுழியோடிகளிற்கான பயிற்சியில் 1000 அடிவரை சென்று 10 நிமிடம் வரை எதுவித கவசமும் அணியாமல் இருக்க இதே போன்ற யுக்தியையே உபயோகிக்கின்றனர். அதாவது அங்கே சென்று புலனுணர்வை மாற்ற கைவினைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதன் மூலம் ஒரு புலனை இன்னொன்றாக மாற்றி தம் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர்.

வைத்திய நடைமுறைகளில் சத்திரசிகிச்சைகளிற்கு செல்லும் முன் பயத்தன்மையை எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துவதால் நோயாளி சிகிச்சையின் பின்பு ஒப்பீட்டளவில் குறைந்தளவு நோவையே உணர்கின்றான். ஒட்டுமொத்தமாக நோக்கில் உயர் உளவியல் ஆளுமைகளின் மூலம் எத்தனை சவால்களையும் சமாளிக்கக்கூடிய விஞ்ஞானவியல் அடிப்படையை எம்மதம் அன்றிலிருந்தே எமக்குப் புகட்டுவதற்கு இச்சமய சடங்குகளின் மூலம் வழிசமைத்துள்ளதென்றால் அது மிகையாகாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலும் மயிலும்

சி. மதுரா
இரண்டாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தமிழ்த்தெய்வமாக விளங்குபவன் முருகப் பெருமான். முத்தமிழால் "வைதாரையும் இங்கு வாழவைப்பான்" என்று அருணகிரிநாதர் குறிப்படுகின்றார். எல்லா உலகங்களுக்கும் பொதுவாக விளங்கும் தெய்வம். இளம் புரணன் முரகன். அப்பரமபதி தன்னிகரில்லாத தனிப்பெருந் தலைவன். கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு உலகம் உய்யத் திருமேனி கொண்ட அருள் தெய்வம்.

அவர் ஏந்துவது அயில் (வேல்)
அவரை ஏந்துவது மயில்

வேலும் மயிலும் ஆன்மாக்களாக்கிய தமக்கு எப்போதும் எக்காலத்திலும் அருந்துணையாய் நின்று அருளுவனவாகும்.

வேல்: இது "வேல்" என்ற முதனிலை நீண்ட தொழிற்பெயர். எல்லாவற்றையும் வேல்லுவது வேல். எல்லாவற்றையும் வெல்லுவது ஞானமேயாகும். ஞானம் என்பதும் அறிவு என்பதும் ஒரு பொருளைக் குறிக்கும் சொற்கள். ஞானம் வடசொல் ஒரு அறிவு தென் சொல். எனவே அறிவின் முழு உருவம் வேலாயுதம். அறிவு ஆழமாகவும், அகலமாகவும் இடைப்பகுதி அகலாகவும் நுனிப்பகுதி கூர்மையாகவும் விளங்குவதைக் காண்க. அறிவு ஒன்றே எல்லாவற்றையும் வெல்லும். எனவே ஞானமே வேல் என்பதை உணர்க.

"ஞான புரண சக்தி தரித்தருள் பெருமாளே"

என்று திருப்புகழ் குறிப்பிடுகின்றது. வேல் ஞானத்தை அகற்றும். வினையை வேரறுக்கும்.

"வினையோட விடுங் கதிர் வேல் மறவேன்" என்பது கந்தரனுபூதியின் திருவாக்கு. வேலுண்டு வினை இல்லை என்ற ஆன்றோர் மொழியையும் காண்க. ஆணவ மலமாகிய சூரபன்மனையும், கன்மமலமான சிங்க முகனையும், மாயா மலமாகிய தாரகா சூரனையும், வினைத்தொகுதியாகிய கிரவுஞ்ச மலையையும் பிறவியாகிய கடலையும் அழித்தது முருகனது வேல்.

முருகனுக்கு ஆறுமுகங்கள் இருப்பது போல் வேலுக்கும் ஆறுமுகங்கள் உண்டு. ஏனைய ஆயுதங்களின் பெயரை மக்களுக்கு இடுகின்ற வழக்கம் இல்லை. வேற்படையின் பெயரை தனியே பலவாறாக இடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கதிர்வேல்," "வடிவேல்," "வஜ்ரவேல்", "சக்திவேல்," "முத்துவேல்," "வேலாயுதம்," என பல திருநாமங்களை வடிவத்திற்கு போற்றி சொல்ல வந்த கச்சியப்பர் "திருக்கை வேல் போற்றி போற்றி" என்று வேலுக்கு மட்டும் இரண்டு தடவை போற்றி சொல்லி இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மயில்: முருகப்பெருமானைத் தாங்கும் பேறு பெற்றது. மயில் தேவரும் மூவரும் காணத முருகப் பெருமானின் திருவடிகளை எப்பொழுதும் கண்டு மகிழும் அளவற்ற தவம் புரிந்தது மயில். மயிலை நினைத்து வாழ்த்தி வழிப்படுகின்றவர்களுக்கு விஷபயம் இராது. ஆலகால விடத்தை உடைய சிவபெருமானுடைய கண்டத்திற்கு நீலகண்டம் என்று பெயர். "நீலகண்டம்" என்பவர்களுக்கு விஷபயம் உண்டாகாது. விஷபுரம் நீங்க திருஞானசம்பந்தர் பாடிய திருநீலகண்ட பதிகம் சிறப்பானது. மயிலுக்கும் நீலகண்டம் உண்டு. "நீலக் கிரீப ரத்ன கலாப மயிலே" என்பார் அருணகிரியார். மயிலும் கொடிய விஷப் பாம்புகளை அடக்கும் வன்மை உடையது.

மயில் தோகையை விரித்து ஆடுகின்ற போது அது ஓம் என்ற பிரணவ சொரூபமாக விளங்குவதைக் காணலாம். "ஆன தனிமந்ர ரூப நிலை கொண்டதாய மயிலென்ப தறியேனே" என்று திருப்புகள் குறிப்பிடுகின்றது. மயிலுண்டு பயமில்லை என்ற பழைய உரையையும் உணர்க. மயிலின் பார்வைபடுகின்ற இடம் நனைமையடையும். "துங்க அனுகூல பார்வை தீர செம்பொன்மயில்" என்பர் அருணகிரியர் உமையம்மையார் மயிலுக்கு கொண்டு சிவனை வழிப்பட்டார் எனின் மயிலின் பெருமையை யார் அளவிடவல்லர் மயிலின் பெருமையை நன்கு உணர்ந்த கண்ணபிரான் தன்தலையில் மயிலிறகை சூடியிருக்கின்றார்.

கூற்றவன் பாசக் கயிற்றைக் கட்டி எயிரைக் கொண்டு போகும் பொழுது அந்த நேரத்தில் வந்த யமபயத்தை நீக்கி உதவிபுரிவன வேலும் மயிலும்.

"பயந்த தனி வழிக்குத் துணை வடிவேலும் செவ் கோட்டான் மயூரமுமே"

என்று கந்தரலங்காரம் குறிப்பிடுகின்றது. எனவே வேலும் மயிலும் என்று எப்பொழுதும் ஒருவர்க்கு மரணபயம் வராது என்பது ஒருதலை.

எனவே ஆன்மாக்களாகிய நாம் வேலையும் மயிலையும் இடையறாது வழிபட்டு இக பர சௌபாக்கியங்களைப் பெற்று பேரின்ப பெருநிலையை அடைவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கும் எதிலும் இறைவன்

க.கனகதுர்க்கா
1ம் வருடம்
கலைப்பிரிவு
பேராதனைப் பல்கலைக்கழகம்.

எங்கும் எதிலும் நிறைந்திருக்கும் பரம்பொருளை போற்றி "அன்பே சிவம்" என்னும் நெறியைத் துணையாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர்கள் இந்துக்கள். நம் முன்னவர் போற்றிய சைவத்தின் தொன்மையை தொல்லியல் ஆராய்ச்சியாளர்களாலும் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. இது எம் சைவத்துக்கு கிடைத்த பெருமை என்று தான் கூறவேண்டும். "சிவம்" எனும் பரம்பொருள் தோன்றுவதுமில்லை அழிவதும் இல்லை, தோன்றாத் துணையாய் இருந்து பஞ்சகிருத்திய நடனத்தால் இவ்வுலகையே இயங்கச்செய்து ஈற்றில் எல்லா உயிர்க்கும் புகலிடமாக விளங்குகிறது. இத்தகைய இறைவனுக்கு இணையாக நாம் எதனையும் கூறிவிட முடியாது. அவன் எங்கும் நிறைந்தவன். எல்லாம் அறிபவன். இதனால் தான் சிவஞானசித்தியார்

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினுமில்லை
அவனோடு ஒப்பர் இங்கு யாவருமில்லை........."

என்கிறது. "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி" எனப்புகழும் திருவாசக செய்யுளும் "உலகெலாமுணர்ந்து ஓதற்கரியவன்" எனப்போற்றும் பெரியபுராணமும் இறைவனின் சர்வவியாபகத் தன்மையையே எடுத்துக்காட்டுகின்றன.

வேதகாலம் தொடக்கம் இன்றையகாலம் வரை இயற்கை சக்திகளை இறைசக்தியாக எண்ணும் மரபு நம் சைவமக்களிடையே காணப்படுவதை நாம் அவதானிக்க முடியும். வேத காலத்தில் இயற்கையை இயற்கையாகவே வழிபடும் மரபு காணப்பட்டது. அதாவது நீர் என்றால் அதற்கு வேறொரு பெயர் வழங்காமல் நீரையே தெய்வமாக வழிபடும் மரபு காணப்பட்டது. அத்தகைய இயற்கை வழிபாட்டை இன்றும் நாம் காணலாம். இந்துக்கள் மட்டுமன்றி சகல மக்களும் சூரியனை தெய்வமாக வணங்கும் மரபு இன்றும் காணப்படுவது நோக்கத்தக்கது. இறைவன் எங்கும் வியாபித்துள்ளான் என்பதை வேதகால இலக்கியங்கள் தொடக்கம் நவீனகால இலக்கியங்கள் வரை நயமாகக் கூறுகின்றன. புராணக்கதைகளுள் ஒன்றான பிரகலாதன் "எங்கே இருக்கின்றான் உன் கடவுள்?" என்று ஹிரண்யனான அசுரத் தந்தை கேட்ட கேள்விக்கு "தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்" எனப்பதில் உரைக்கும் பிரகலாதனின் கூற்றிலிருந்து இறைவன் எங்கும் எதிலும் பரந்து வியாபகமாய் உள்ளான் என்பதனை நாம் உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களில் காணப்படும் உத்தாலகர் சுவேதகேதுவிற்கு இடையிலான உரையாடல் விசாரணைகளில் நுண்ணிய ஆலம் வித்திலிருந்து தோன்றும் ஆல்விருட்சமும், நீரில் கரைந்த உப்பின் வியாபகமும் இறைவனின் இத்தன்மையை கூறுகின்றன.

இறைவன் எங்கும் எதிலும் நிறைந்துள்ளான் அவன் இல்லாத இடமே இல்லை என்பதை பாரதியார்

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா-நின்றன்
கரிய நிறந் தோன்றுதடா நந்தலாலா
பார்க்கும் இடங்களில் எல்லாம் நந்தலாலா-நின்றன்
பச்சை நிறந் தோன்றுதடா நந்தலாலா
கேட்கும்மிசை எல்லாம் நந்தலாலா-நின்றன்
கீதமிசைக்குதடா - நந்தலாலா"

என்று பாடுகிறார். பாரதியார் மட்டுமல்ல இறைவனின் அடியார்கள் அனைவரும் இப்படி எல்லாவற்றிலும் இறைவனை தரிசித்துள்ளனர். "எல்லா உலகமும் ஆனாய் நீயே" எனப்பாடிய அப்பர் சுவாமிகள் "மாதர்பிறை கண்ணியானை" என ஆரம்பிக்கும் திருப்பதிகத்திலே தாம் கண்ட இயற்கை காட்சிகளனைத்திலும் இறைவனைக் கண்டதாக பாடியுள்ளார்.

"காதன் மடப்பிடியோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்"

என ஜீவராசிகள் வடிவிலே இறைவனை கண்டதாக பாடுகிறார். ஆனால் காரைக்கால் அம்மையார் எல்லா பொழுதுகளிலும் இறைவனை காண்பதாக

"காலையே போன்றிலங்கும் மேனி கரும்பகலில்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு ___ மாலையின்
தாங்குருவே பொலுஞ் சடைக்கற்றை மற்றவிற்கு
வீங்குருளே போலும் மிடறு."

என்று இறைவனின் திருவுருவை ஒவ்வொரு பொழுதிலும் காண்பதாகப் பாட மாணிக்கவாசகரோ இவற்றுக்கும் ஒருபடி மேலே போய்,

"பாரோடு விண்ணாய்பட பரந்த எம்பரனே......"

என்று பாடுகிறார். இதன் மூலம் இறைவன் எங்கும் எதிலும் உறைபவன் என்பதை நாம் உணரமுடிகிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இயற்கையின் ஒவ்வொரு அசைவிலும் நாம் இறைவனை காணமுடியும் என்கிற சிந்தனையை உருவாக்கி அதன் மூலம் இறைபக்தியை மேம்படுத்துவதாகவே அடியவர்களின் உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது இறைவனை எங்கும் காணமுடியும் என்கின்ற பக்குவநிலையை அடைந்திருந்தால் அவர்கள் இயற்கையிலே இறைவனைக் கண்டு வழிபட்டார்கள். இத்தகைய பக்குவம் எம்மிடம் இல்லாததால் தான் நாம் அவரை கோயிலில் குடியிருக்கச்செய்து வழிபடுகிறோம். ஆனாலும் படிப்படியாக நாம் இந்நிலையை அடையவேண்டும் என்பதால் தான் எமது சமயம் எதைக்கண்டாலும் இறைவனை எண்ணச்செய்ய வழி செய்திருக்கிறது.

உதாரணமாக ஒரு விடயத்தை இங்கே நோக்குவோம், எமது வீட்டிலுள்ள உறவினரோ, அல்லது நெருக்கமான ஒரு நபரோ இப்போது எம்மோடு இல்லை என்று வைத்துக்கொள்வோம். இதேசமயம் அவர் இருந்த இடம், பாவித்த பொருட்கள், அவர்களின் சில வித்தியாசமான பழக்கவழக்கங்கள் என்பன அவரில்லா விடினும் அவரை நினைவூட்டும். சில சமயங்களில் வேறு யாராவது ஒருவர் அவரின் பாணியில் நடந்து கொண்டால், அல்லது அதே திறமையை வெளிப்படுத்தினால் கூட அவரைப் போலவே இவனும் இருக்கிறான் என்று இல்லாத ஒருவரை நினைத்து கொள்வோம். அதே போல தான் இறைவனின் தோற்றம், நிறம், குணம், அவர் உபயோகிப்பவை என நாம் கற்பனை செய்து வைத்திருப்பவை யாவும் எமக்கு இறை எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு தான் எல்லாவற்றிலும் நாம் இறைவனைக் காண வழியமைக்கப்பட்டிருக்கிறது.

"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே"

என்கிறார் அப்பர் சுவாமிகள். எனவே ஆலயத்தில் ஒலிக்கும் மணியோசையிலிருந்து எங்கோ தூரத்தில் கேட்கும் இசை வரை எமக்கு இறைவனை நினைவுபடுத்துகின்றது. ஆலயம் செல்லாது விடினும் ஆலய மணியோசை ஆண்டவனின் நினைவை வரவழைக்கிறது. இதே போல இயற்கையின் இடி, மின்னல், கடலலை போன்ற நிகழ்வுகள் அனைத்தும் சக்தியின் தோற்றத்தை உணர்த்துவதாக பாரதிதாசன் பாடுகிறார்.

எங்கெங்கு காணிலும் சக்தியடா தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா
தங்கும் வெளியினிற் கோடியண்டம் - எங்கள்
தாயின் கைப்பந்தென வோடுமடா
கங்குலின் ஏழு முகிலினமும் வந்து
கர்ச்சனை செய்தது கேட்டதுண்டோ
மங்கை நகைத்த ஒலியதுவாம் - அவள்
வாயிற் குறுநகை மின்னலடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இயற்கையின் பிரதிபலிப்பு ஒவ்வொன்றையும் இறையுருவாக உருவகித்து வழிபடும் நிலையை அல்லது இறைவனை நினைக்கும் வகையை ஏற்படுத்தியது இந்துமதம். எனவே ஒவ்வொரு உணர்விலும் அசைவிலும் இறைவனைக் கண்டு அவனை வழிபட வேண்டும்.

"தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா - நின்னைத்
தீண்டு மின்பம் தோன்றுதடா நந்தலாலா......"

என்று பாரதி பாடுவதைப் போல தீயின் வெம்மையிலும் இறைவனை உணரலாம். பஞ்ச பூதங்களிலும் இறைவனைக் காண வகை செய்தது எமது இந்துமதம், அதையும் தாண்டி

"அண்டம் கடந்து பொருளளவிலதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்னும் என்றும் உள்ள பொருள்......"

என்று சேந்தனார் இறைவனின் வியாபகத்தையும் அவன் ஆனந்த மயமானவன் என்பதையும் ஊழிக்காலத்திலும் நிலையான பொருள் அவனே தான் என்றும் தெளிவாகக் கூறுகின்றார்.

இத்தகைய இறைவன்

"ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி......"

உள்ளவர். அவருக்கென்று நாமம், ரூபம், வடிவம், இயல்பு இல்லாவிடினும் எம்மை ஈடேற்ற தன்னிலையில் இருந்து இறங்கி வந்து எமக்கு அருள்பாலிக்கின்றான். அத்தகைய

"தாயிற்சிறந்த தயவான தத்துவனை......
"பால் நினைந்தூட்டும் தாயினும் மேலானவனை........"

நாம் நினைந்து வணங்கி அவன் அருளாலே அவன் தாள் வணங்கி இன்புற்றிருக்க வேண்டும்.

அப்பர் சுவாமிகள் திருவங்க மாலையில் பாடுவது போல் இறைவனை எம் அவயங்கள் ஒவ்வொன்றாலும் துதித்துப்போற்றி எங்கும் எதிலும் நிறைந்துள்ள அவன் கருணையைப்பெற்று வாழ வேண்டும். இந்த சரீரம் எமக்குக்கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும். எனவே இறைவனை வணங்கி ஈடேற்றம் பெற்றுய்வோமாக.

*"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதை உபதேசம்

ப.தினேஸ்குமார்
3ம் வருடம்
பொறியியற்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

பகவத்கீதையை பற்றி அறியாதோர் இருக்க முடியாது என்றே கூறலாம் ஆனால் அதன் தோற்றத்தினையும் அதன் உட்கருத்தினையும் யாரும் சிந்திப்பது இல்லை. பகவான் கிருஷ்ணர் பகவத்கீதையை உபதேசம் செய்தார் என்பது எல்லோரும் அறிந்ததே. இதை யாருக்கு உபதேசம் செய்தார் என்று கேட்டால் அனைவரும் அர்ச்சுனனுக்குத் தான் என்பார்கள். ஆனால் இந்த பகவத்கீதை சூரியபகவானுக்குத்தான் உபதேசம் செய்யப்பட்டது என்பதே உண்மை. ராமாயணமும் பாரததேசத்தின் ஒப்பற்ற இதிகாசங்கள் கதை என்றோ காப்பியம் என்றோ சொல்லாமல் வட மொழியில் இதிகாசங்கள் என்று சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. வான்மீகியும் வியாசரும் எழுதிய இவை நம் தேசத்தில் உண்மையாக நடந்தவை. இதிகாசம் என்றால் இது நடந்தது என்று பொருள் உண்டு. வால்மீகிக்கும் வியாசகருக்கு பின்னால் வந்த வர்கள் அவர்கள் வாழ்ந்த நடமுறையை கொண்டு சில மாற்றங்களை மூலக்கதையை சிதைக்காமல் சிறப்பாக எழுதித்தொகுத்தார்கள். ராமனை ஆரம்பத்திலிருந்து இறுதி வரை கடவுளாகவே கருதினார் வால்மீகி. ஆனால் மானுடனாகவே கருதி முடிவில் கடவுளாக்குகிறார்.

இப்படித்தான் எமது காவியங்கள் காலத்தின் தன்மை அறிந்தும் எழுதியவர்களின் கற்பனைக்கு ஏற்றால் போலவும் எமது காவியங்கள் மாற்றப்பட்டு இருக்கின்றன. ஆனால் தர்மத்தை நிலைநாட்டவேண்டும் என்ற கருத்தே காவியங்களில் ஓங்கி ஒலிப்பதை காணமுடிகிறது. காவியங்கள் எமக்கு செல்லுவதெல்லாம் நாம் காவியத்தலைவர்களின் வழியை பின்பற்றி வாழ்வில் உய்வடைய வேண்டும். ப்ருவாக்ய பரிபாலனம் என்னும் தாய்-தந்தை சொல் கேளல், அனைவரையும் சகோதரனாக ஏற்றல், மனையாளனேயானாலும் மற்றவரால் குறை சொல்லப்பட்டால் அவள் மாசற்றவள் என்பதை உணர்த்த தீக்குளிக்க வைப்பது ராமனுடைய தர்மம். தாத்தா விஷ்மர் குலகுரு கிருபர் ஆசிரியர் துரோணர் சகோதரர்களான துரியோதனாதியர்கள் அனைவரும் அதர்மத்தின் பக்கத்தில் நின்றதால் அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்றான் கிருஷ்ணன். முடிவில் இரு காப்பியங்களும் தர்மத்தை நிலைநாட்டவே எழுதப்பட்டு இன்றளவும் பேசப்படுகின்றன. ஆனால் மகாபாரதத்திற்கு மட்டும் தனிச் சிறப்பு உண்டு.

மகாபாரதம் எனும் இதிகாசத்திலிருந்து விதுர நதி என்கின்ற தர்மசாஸ்திர நூலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவத்கீதை எனும் அதி அற்புதமான வாக்கினையும் பின்பு விஷ்ணு சகஸ்ர நாமத்தையும் நாம் படிக்க நேர்கிறது. குறிப்பாக பகவத்கீதையில் சொல்லப்பட்ட விடயங்கள் மானுட வாழ்க்கைக்கு மிகவும் தேவையானதாகும். இந்த பகவத்கீதை மகாபாரதத்தில் வெகுவாக சொல்லப்பட்டாலும் பகவானான மகாவிஷ்ணுவால் அல்லது ஸ்ரீகிருஷ்ணரால் சூரிய பகவனுக்கு போதிக்கப்பட்டது. பின் சூரியபகவானின் சீடர்கள் மூலம் பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்பட்டது.

"இமம் விஸ்வதே யோகம் ப்ரோக்வநனான் அஹம் அவயயம்
விவஸ்வான் மனமே ப்ராஹ மனுர் இசஷ்வாகுவே அப்ரவீத்"

இதில் விவஸ்வான் என்பது சூரிய தேவனை குறிக்கும். பகவானே இந்த கீதையை சூரியன் மூலமாக மனித குலத்தின் தந்தையான மனுவிற்கும் மனு இஷ்வாகுவிற்கும் உபதேசம் செய்தார். இதில் இஷ்வாகு என்பவர் ஸ்ரீராமனுக்கு மூதாதையராவர். இப்படி சில யுகங்களில் ஓதப்பட்ட அல்லது உணர்த்தப்பட்ட பகவத்கீதை பல காலங்களில் தவறாக புரிந்து கொள்ளப்பட்டதாலும் உண்மையான கருத்தக்கள் சிதைவுண்டதாலும் மீண்டும் ஸ்ரீகிருஷ்ணர் போர்களத்தில் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததாக கிருஷ்ணபரமாத்மாவே கூறுகிறார். இதுவே கடைசி வரை நஜலைத்துக் கொண்டிருக்கிறது. இன்று கூட பகவத்கீதையின் உள்ளர்த்தம் உணராத பண்டிதர்களும் நம்மிடத்தே உண்டு. இப்படித்தான் சூரிய பகவானுக்கு ஆதிகாலத்தில் உபதேசிக்கப்பட்ட பகவத்கீதை பலரால் கற்கப்பட்டாலும் பல சமயங்களில் சரியான பதில் சொல்லப்படாததாலும் ஸ்ரீகிருஷ்ணர் இரண்டாவது முறையாக அர்ச்சுனன் மூலமாக நமக்கு உபதேசித்தார். இப்படித்தான் கீதை பிறந்தது.

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகப்பெருமான் தோன்றினார்...

இ.ரோகினி
3ம் வருடம்
பொறியியற்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

முருக பெருமானின் அவதாரம் தீமையை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்கு என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.அந்த அவதாரத்தின் வரலாறு பற்றி தெரிந்து கொள்வோம் .

அசுரர்கள் தேவர்களை தம் விரோதிகளாக நினைத்து அவர்களுடன் எப்போதும் போர் புரிந்த படி இருந்தனர் .இருப்பினும் தேவர்களை வெல்லும் ஆற்றல் அசுரர்களுக்கு இல்லை.ஆகவே தேவர், அசுரர் இடையேயான போரின் இறுதியில் அசுரர் அழிந்தனர் ,மீண்டும் தோன்றினர்.இவ்வாறு அசுரர்கள் தோன்றுவதும் அழிவதுமாக இருந்தனர் .

இது அசுர குருவான சுக்கிராச்சாரியாருக்கு வேதனை அளித்தது.அவர் அசுரர்களுக்கு நிலையான வாழ்வை அளிக்க விரும்பினார்.அவர் அசுரர் குல தலைவனின் மகளான சரசை என்பவளுக்கு கல்வியோடு,மாயவித்தை பற்றிய சகல சாஸ்திரங்களையும் போதித்து மாயை என்ற பெயரையும் சூட்டினார்.

மாயையைக் கொண்டு அசுரர் இனத்தை பன்மடங்கு பெருக்க உறுதி பூண்டார் சுக்கிராச்சாரியார்.அவருடைய அறிவுரைப்படி பிரம்மனின் புதல்வரான காசிபர் என்ற மகாஞானி தவமிருந்த இடத்துக்கு சென்றாள்.தன்னுடைய அழகாலும் கவர்ச்சியாலும் காசிபரின் தவத்தை கலைத்தாள்.இருவரின் சேர்க்கையாலும் சூரபன்மன்,ஆயிரம் முகம் கொண்ட சிங்கமுகாசூரன்,யானை முகத்தை உடைய தாரகாசூரன்,ஆட்டு முகத்தை உடைய அசமுகி என்ற அரக்கி மற்றும் இருவரின் வியர்வையாலும் பல்லாயிரக்கணக்கான அசுரர்கள் தோன்றினர்.

மாயை தனது புதல்வர்களிடம் சிவபெருமானை நோக்கி மாபெரும் வேள்வி புரிந்து பெறுதற்கரிய வரங்களை பெறுமாறு அறிவுறுத்தி வடதிசை நோக்கி அனுப்பி வைத்தாள்.சூரபன்மன் பல ஆண்டுகள் இடைவிடாது யாகம் புரிந்தும் சிவபெருமான் காட்சி தரவில்லை.அதனால் மனமுடைந்த சூரபன்மன் தனது தசைகளை சிதைத்து ஓமகுண்டத்தில் போட்டு உதிரத்தை நெய் போல் சொரிந்தான்.அனால் அவனது தசைகள் குறையாமல் வளர்ந்து வந்ததேயொழிய சிவபெருமான் காட்சி தரவில்லை.அதனால் சூரபன்மன் தானே ஓமகுண்டத்தில் விழுந்து சாம்பலானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து சிங்கமுகாசுரனும்,தாரகாசுரனும் கடுமையான வேள்வி புரிந்தனர்.அவர்கள் தமது தலைகளை ஒவ்வொன்றாக அறுத்து ஓம குண்டத்தில் இட தலைகள் வளர்ந்து கொண்டேயிருந்தன.இறுதியில் சிங்கமுகாசுரனும் ஓம குண்டத்தில் விழத் தயாரான பொது சிவபெருமான் பிராமணர் உருவில் வந்து தடுத்தார்.அவர் கங்கையை அழைக்க அது ஓம குண்டத்தில் புக சூரபன்மன் உயிர்த்து எழுந்தான்.சிவபெருமான் சுய உருவில் உமாதேவியாரோடு காட்சி கொடுத்தார்.அசுரர்கள் அவரை வணங்கினர்.

சிவபெருமான் "சூரபன்மா! உன் கடுமையான தவத்திற்கு மகிழ்ந்தோம்.உனக்கு தேவையான வரத்தைக் கேள்" என்றார்.சூரனும் அவரை வணங்கி "ஈசனே ! எனக்கு எப்போதும் அழியாதிருக்கும் உடலையும்,அனைத்து தேவர்களையும் வென்று அடக்க கூடிய வல்லமையையும்,அதற்கான படைகலன்களையும்,நினைத்த பொது நினைத்த இடத்துக்கு செல்லக்கூடிய வாகனத்தையும்,இந்த உலகமனைத்தையும் ஆளும் நிலையையும் தர வேண்டும்" என்று கேட்டான்.சிவபெருமானும் அவற்றை எல்லாம் அளித்து "உங்களை எம் சக்தியை தவிர வேறு எந்த சக்தியாலும் வெல்லவோ அழிக்கவோ முடியாது" என்று வரமளித்து மறைந்தார்.அதன் பின் சூரபன்மன் தன் சகோதரர்களுடன் சுக்கிராச்சரியாரிடம் சென்றான்.அவர் தேவர்களுக்கு எதிரான உபதேசங்களை புரிந்து தேவர்களையும் முனிவர்களையும் அடக்கி ஆளுமாறு போதனை புரிந்தார்.

சூரபன்மன் சிவபெருமானிடம் பெற்ற இந்திரஜாலத்தேரில் ஏறி அமர்ந்து தன் அசுரபடைகளுடன் விண்ணுலகை நோக்கி புறப்பட்டான்.தேவலோகமே ஆட்டம் கண்டது. குபேரனின் அளகாபுரி, இந்திரனின் அமராவதி எல்லாம் சூறையாடபட்டது .தேவகன்னிகள் சிறைபிடிக்கபட்டனர்.அக்கினி தேவன், எமன் போன்றோர் அடிபணிந்தனர்.மகாவிஷ்ணுவும் நீண்ட போரின் பின்னர் சமாதானம் செய்து கொண்டார்.பிரம்மதேவனும் வாழ்த்தி அனுப்பினர்.

தேவர்களை எல்லாம் வெற்றி கொண்ட பின் அவர்களையெல்லாம் தமக்கு ஏவல் புரிய பணித்தான்.தேவதச்சன் சூரபன்மனுக்காக தென்கடலில் வீரமகேந்திரபுரம் என்ற அழகிய நகரத்தை நிர்மானித்தான். வாடா கடலில் ஆசுரம் என்னும் நகர் சிங்கமுகனுக்ககவும் நாவலந்தீவில் மாயபுரம் என்னும் நகர் தாரகாசுரனுக்ககவும் நிர்மாணிக்கபட்டது.தேவர்கள் அனைவரும் சூரபன்மனுக்கு பட்டாபிசேகம் செய்து வைத்து அவன் சபையில் ஏவல் பணிகளை புரிந்து வந்தனர். இவ்வாறு சூரபன்மன் ஆட்சியில் தேவர்களும் முனிவர்களும் பல தொல்லைகளுக்கு உள்ளானார்கள்.அவனை எதிர்த்தவர்களெல்லாம் சிறையில் அடைக்கபட்டனர்.கால போக்கில் சூரபன்மனின் தொல்லைகள் மிகுதியாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் பிரம்மா விஷ்ணு முதலான தேவர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர்.சிவபெருமான் யோக நிஷ்டையில் கயிலையில் இருக்கிறார்.பார்வதி தேவியோ பர்வதராஜன் மகளாக இமயமலைச்சாரலில் தவமிருந்து வருகிறார்.அதனால் மன்மதனை அனுப்பி சிவன் நிஷ்டையை கலைக்க மலர்க்கணை தொடுக்க செய்தனர்.சிவன் சினம் கொண்டு நெற்றிக்கண்ணை திறக்க மன்மதன் எரிந்து சாம்பலானான்.

உடனே தேவர்கள் வந்து "ஈசனே தங்கள் வரத்தால் சூரன் தொல்லை தாங்க முடியவில்லை,அருள் புரியுங்கள்" என்று வேண்டினர் .அதன்படி சிவபெருமான் பார்வதி தேவியை முறைப்படி மணந்து கொண்டார்.

ஒரு சமயம் கயிலையில் சிவபெருமான் பார்வதி சமேதராய் அமர்ந்திருந்த போது பிரம்மா, விஷ்ணு முதலான தேவர்கள் மீண்டும் தங்கள் துயரை எடுத்துக் கூறினார்.சிவபெருமான் அவர்களின் கோரிக்கையை ஏற்றார். அவர் ஆறு திருமுகங்களோடு பிரகாசிக்கும் தோற்றத்தில் இருந்தார்.ஆறு நெற்றிக் கண்ணிலிருந்தும் தீப்பொறி உண்டாகுமாறு அருளினார்.அத் தீப்பொறிகளின் வெப்பம் தாங்கமாட்டாததாக இருந்தது.தேவர்களும் பார்வதியும் கலங்கி ஓடினர்.அப்போது பார்வதியின் திருவடியில் இருந்து சிலம்புகள் சிதறின.

அவற்றின் வெம்மையினால் தேவலோகம், பூலோகம், பாதளலோகம் எல்லாம் கலங்கின.எனவே ஈசன் ஆறு திருமுகங்களை ஒருமுகமாக மாற்றி தணிவுடன் காட்சி கொடுத்தார்.பின் அக்கினியையும்,வாயுவையும் அழைத்து ஆறு பொறிகளையும் கங்கையில் விடுமாறு கட்டளையிட்டார்.கங்கையும் வெம்மை தாங்காது வற்றியது,தாமதிக்காது கங்கை அவற்றை சரவணப் பொய்கையில் சேர்ப்பித்தது.

சரவணபொய்கை வற்றவில்லை.அந்த தீப்பொறிகள் ஆறு திருமுகங்களும்,பன்னிரு திருக்கரங்களும்,இரண்டு திருவடிகளும் கொண்டு ஆறுமுகப்பெருமானாக விளங்கியது .அப்போது கார்த்திகை பெண்கள் அறுவர் சரவணப்பொய்கைக்கு வந்தனர்.முருகன் அறுவருக்கும் ஆறு குழந்தைகளாக பிரிந்தருளினார்.அவர்கள் குழந்தைகளுக்கு பாலூட்டி,சீராட்டி,தாலாட்டி வளர்த்து வந்தனர்.

முன்பு பார்வதி தேவியின் சிலம்பிலிருந்து சிதறிய நவரத்தினங்கள் ஒன்பது தேவியராக வெளிப்பட்டனர்.அவர்கள் சிவனின் ஆற்றலினால் கருவுற்றனர்.அவர்கள் வீரவாகுதேவர், வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேசுரர், வீரபுரந்தர், வீரக்கதர், வீரமார்த்தாண்டர், வீரந்தகர், வீரதீரர் ஆகிய ஒன்பது வீரர்களை பெற்றனர்.அவர்களையும் தம் புத்திரர்களாக ஏற்ற சிவன் அவர்களை முருகனுக்கு உதவி புரியுமாறு அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் சரவணப்பொய்கையில் சிலகாலம் கார்த்திகைப்பெண்களிடம் வளர்ந்த பின் திருக்கயிலைக்கு சிவனும் உமையும் அழைத்துச் சென்றனர்.இதுவே திருமுருகனின் அவதாரமாகும்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் முருகப்பெருமான் தன்னைத் தஞ்சமடைந்தவர்களின் துயரங்களை துடைத்துக் காக்கும் கருணைக் கடவுள்.அவர் தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காக்கவும்,உலக மேன்மைக்காகவுமே அவதாரம் எடுத்தார். ஆறுமுகன், குகன், குமரன், கார்த்திகேயன், கந்தன், சரவணபவன், சுப்பிரமணியன், வடிவேலன், சண்முகன், சேயோன் போன்ற பல திருநாமங்களை கொண்ட முருகப்பெருமானின் திருஅவதாரம் பற்றி அறிந்து அவரின் அருளுக்கு பாத்திரமாவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயமும் விஞ்ஞானமும்

A. அருணசுபா
பல்மருத்துவம்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இந்துக்கள் ஆன்மா ஈடேற்றங்கருதிச் செய்யும் சாதனைகளில் ஒன்று விரதம். இவ் விரதம் என்னும் சொல் உண்ணும் உணவைச் சுருக்குதல் அல்லது விடுத்தல் எனப்பொருள்படும். உபவாசம், நோன்பு என்பன விரதத்துடன் தொடர்புடைய சொற்களாகும். உபவாசம் என்னும் சொல் இறைவனின் அருகே வசித்தல் என்ற பொருளைத் தரும். விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஐம்புலன்களையும் அடக்கி திரிகண சுத்தியுடன் இருத்தல் வேண்டும். இதன் மூலம் மன அடக்கத்தை மேம்படுத்த முடியும். விரதம் அனுஷ்டிப்பதால் மனம், புத்தி முதலிய உட்கருவினுள் தூய்மையடையும். இதனால் ஞானம், நல்லறிவு கூடும்.

மனம் பொறி வழி போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும். பாவத்தினால் உண்டான பிணியை தலைதூக்கவிடாமல் செய்வதற்கு நோன்பு முறைகள் பலவற்றை தந்திருக்கின்றது. தர்மசாஸ்த்திரம், நாள், திதி, நட்சத்திரம் முதலானவற்றை மையமாகக்கொண்டு கிருத்திகை, ஏகாதசி, சஷ்டி, போன்ற விரதங்களை பரிந்துரைத்தது. உணவு கட்டுப்பாட்டுடன் தெய்வத்தை மனதில் இருத்தி வழிபட பாவம் அகலும். வரலட்சுமி நோன்பு காரடையான் நோன்பு, துளசி பூஜை, பஞ்சாட்சர ஜபம் முதலானவை ஒட்டிக்கொண்டிருக்கும் பாவங்களைத் துடைக்கவல்லது.

விரதம் என்பதை எம் முன்னோர்கள் காலம் காலமாக பின்பற்றி வந்தனர். விரதம் இருந்தால் நம் பிரச்சனைகள் தீரும் என்பது நம்பிக்கை. விரதம் அனுஷ்டிக்க பல முறைகள் உள்ளன. ஒரு வேளை மட்டும் உணவு அருந்தி இருப்பது, நாள் .முழுவதும் எதுவும் சாப்பிடாமல் இருத்தல், அசைவ உணவுகளை மட்டும் தவிர்த்து சைவ உணவுகளை மட்டும் உண்ணுவது, நீர், பழங்கள், பால், மட்டும் அருந்தி விரதம் இருப்பது என பல முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. எந்த முறையில் விரதம் இருந்தாலும் பலன் கிடைப்பது நிச்சயம்.

மேலும் இந்த விரதங்களுக்குப் பின்னால் மாபெரும் மருத்துவப்பலன்கள் உள்ளன என தற்போது விஞ்ஞானிகளின் ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும் வாரம் ஒரு முறை விரதம் இருந்தால் இதயம் சம்பந்தமான பிரச்சனைகள் வராது என மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன. விரதம் இருப்பதன் காரணமாக உடலின் அனுசேபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்பிக்கப்படுகிறது. உடல் தனது பணிகளை புத்துணர்வுடன் செய்வதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். விரதம் இருக்கும் நாட்களில் உடலியக்கம் சீராகுவதாகவும், இரத்தஓட்டம் சீராகுவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாதம் ஒரு முறை விரதம் அனுஷ்டிப்பதால் மாரடைப்பிற்கான சாத்தியத்தை தவிர்க்கலாம் என இங்கிலாந்து விஞ்ஞானிகளின் ஆய்வுகள் கூறுகின்றன. விரதம் பிடிப்பதால் நினைத்த காரியங்கள் நடக்கிறதோ? இல்லையோ மனம் அமைதி பெறும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். வாரத்தில் ஒரு நாளோ அல்லது இரு நாளோ உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கு மூளையில் பாதிப்பு ஏற்படுவது இல்லை என தெரியவந்துள்ளது. சாப்பாடு அதிகம் இருந்தால் ஏராளமான கலோரி உடலுக்குள் செல்கிறது. இதை ஜீரணிக்க செரிமான உறுப்புக்கள் தான் உதவுகின்றன. அதாவது சாப்பிடாமல் இருக்கும் போது மூளையில் சுரக்கும் ஒரு திரவம் மூளையின் செயற்திறனை கூட்டுகின்றது. இதனால் மூளையில் ஏற்படும் பாதிப்புக்கள் குறைக்கப்படுகின்றன. முதலில் விஞ்ஞானிகள் எலிகளிடத்தில் மேற்கொண்ட ஆய்வின் பிறகு சில முதியவர்களிடமும் பரிசோதித்ததில் உறுதிசெய்துள்ளனர்.

மேலும் இந்துசமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் மிகவும் நெருங்கிய தொடர்புள்ளது. ஆலயம் என்பது மிகவும் சக்திவாய்ந்த மருத்துவமனை, ஆலயம் உடல்நிலையையும் மனநிலையையும் சமப்படுத்தி அழுக்குகளை வெளியேற்றி சக்தி கொடுக்கும் தலமாக இருக்கிறது. நாம் வீட்டில் இருந்தபடியே வழிபாடு செய்தால் பலன் பெருமளவில் கிடைக்குமெனக் கூறமுடியாது. ஏனெனில் நாம் ஒருவர் என்பதால் நமக்குள் இருக்கும் சக்தி சிறியதே. ஆனால் ஆலயத்தில் பக்தர்கள் கூட்டமாக சேரும்போது ஆலயத்தில் உள்ள பல சக்திக்கலங்களின் மூலமாக சக்தியை உள்வாங்கி அதை வெளிப்படும் போது அந்த சக்தி அலை நம்மை சமன்செய்கிறது. எனவே தான் ஆலயம் தொழுவது சாலச் சிறந்தது எனச் சொல்லப்படுகிறது.

ஆலயத்தின் கோபுரம் மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகும். கோபுரத்தின் ஏழு நிலைகளும் நம் உடலில் உள்ள ஏழு சக்திச்சக்கரங்களைக் குறிக்கும். கோபுரத்தின் உச்சியில் தங்கத்தினால் அல்லது வெள்ளியினால் அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக்கலசங்களும் அதன் அடியில் வைக்கப்படும் தானியங்களும் உலோகங்களும் மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை கலசங்களுக்கு கொடுக்கின்றன. இத்தானியங்களும் உலோகங்களும் 12 வருடங்களுக்கு ஒரு முறை மாற்றுவது வழக்கம். ஏனெனில் இவை 12வருடங்களில் தமது சக்தியை இழந்து விடுகின்றன. இதனால் தான் 12 வருடங்களுக்கு ஒரு முறை கும்பாவிஷேகம் செய்வது வழக்கம். இதன் மூலம் கலசங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. இக்கலசங்கள் மின்னலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கும் சக்தியுடையவை. ஆதி காலத்தில் வீடுகளில் மின்னலை எதிர்க்கும் சாதனங்கள் இல்லாத காரணத்தால் மழைக்காலங்களில் இடி மின்னலை தாங்குவதற்கு கோயில்கள் மிகவும் தேவையாக இருந்தன. எனவே தான் முன்னோர்கள் "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனக்கூறுகின்றனர்.

கோயிலின் பிரதான வாசலாகிய கோபுரவாசலானது ஊடுருவிக்கதிர் ஆய்வுக்கருவிப் போல் அமைக்கப்பட்டுள்ளது. நாம் கோபுர வாயிலினூடாக செல்லும் போது கண்ணுக்குப் புலப்படாத ஊடுருவிக்கதிர்கள் (காந்த அலைகள்) நம் உடல் மீது செல்கின்றன. இதனால் தான் நாம் கோயிலுக்குள் செல்லும் முன் கை கால்களை சுத்தம் செய்வது வழக்கம். குதிக்கால்களை மேலிருந்து கழுவுவதால் ஏற்படும் விஞ்ஞான பூர்வமான காரணம் என்னவென்றால் குதிக்காலின் தான் நமது மூளையில் அமைந்துள்ள "பீட்யூட்டரி" சுரப்பியுடன் முக்கியநரம்பு அமைந்துள்ளது. நாம் உட்பிரகாரத்தில் செல்லும் போது வேகத்தை குறைத்து நிதானமாக நடுவில் வைக்கப்பட்டிருக்கும் வாயில்படிகளை ஈரக்கால்களுடன் குனிந்து தொட்டு செல்லுதல் வேண்டும். அப்படி குனிந்து தொடும் போது ஏற்கனவே கோபுரக்கலசங்களின் ஊடாக சேர்க்கப்பட்ட மின்கதிர்களின் முழுப்பயனையும் அடையமுடியும்.

எனவே விரதங்களை அனுஷ்டித்து கோயிலுக்குச் சென்று முழுப்பயனைப் பெற்று வாழ்வில் முன்னேறுவோம்.

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பினால்தான் கடவுள்

பெ.ரஜித்குமார்
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இந்து மதம் என்பது அனைத்து மதங்களின் மதம். ஆகவே அந்த மதத்தின் கடவுளை நம்பிக்கையோடு உணர வேண்டும். கடவுளின் மீதுள்ள நம்பிக்கையே கடவுளின் மகிமையின் கொடை. ஆகவே கடவுள் நம்பிக்கை என்பது கடவளை உணர்வதற்கான ஆயுதம். இல்லையெனில் கடவுள் என்பது கற்பனையாகவே தோன்றும்.

அதாவது $\sqrt{(-1)}$ என்பது ஒரு கற்பனை எண். அதில் உள்ள (-1) என்பது ஒரு மெய் எண்.

$\sqrt{(-1)}$ இதற்கு வர்க்கம் எடுக்கம்போதே மெய்யாகிறது. கணிதத்திலேயே கற்பனைக்கு நிரந்தரம் இல்லை. எனவே நம்பிக்கை வைத்தாலே கடவுளின் உண்மை விளங்கும்.

இலகுவாக ஆங்கிலத்தில் சொன்னால்

God no where கடவுள் எங்கும் இல்லை
God now here கடவுள் இப்பொழுது இங்கு உள்ளார்.

**இங்கும் பாருங்கள்**
இங்கு ஓர் "W" இடம்மாறும் போது அதன் பொருள் மாறுகின்றது.
அதே போல் "O" என்பது கணிதத்தில் உள்ள "ZERO" வின் ஒரு வடிவம் "W" என்பது கடவுள் ஆளும் உலகத்தின் ("WORLD") ஆங்கில முதல் எழுத்து. இங்கு "O" உடன் "W" இணைவதே தேவை.

'0' (zero) என்பது கணிதக் கருத்துப்படி கடவுள்.
அதாவது
எடுகோள்: மெய்யெண்கள்; (Z)= மக்கள்

0/Z=0 ....................❋
கடவுளை எத்தனை மனிதர்கள் பிரித்தாலும் கடவுள் ஒருவன்தான். அதாவது மதம் பல இருக்கலாம். அவை தமது இறைவனை வெவ்வேறு பெயர்களால் அழைக்கலாம்.ஆனால் கடவுள் ஒருவனே.

Z/0= தேராக்கணியம் ...................❋
இதன் அர்த்தம் கடவுள் மனிதர்களை பிரித்துப் பார்ப்பதில்லை.

"God No where" இங்கு "O" உடன் "W' சேரும் போதே (OW),
கடவுளுக்கு உலகம் அடிபணியுமாயின் கடவுள் இப்போது இங்கே
"God now Here"

இப்போது புரிகிறதா நாம் நோக்கும் விதத்திலேயே கடவுளின் மகிமை எமக்கு புரியும். நம்பிக்கை வைத்தாலே கடவுளின் உண்மையும் புரியும்.

**"இந்து என்று சொல்வதில் பெருமிதம் கொள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவுருவ வழிபாடு

S. உமாயினி
1ம் வருடம்
பல்மருத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தன்னை விரும்பி வழிபடுவோருக்கு தன்னருட் காட்சியைக் கொடுக்கும் பொருட்டு இறைவன் உறையும் இடம் திருக்கோயிலாகும். சைவசமயத்தில் திருக்கோயில் வழிபாடு என்பது சமய ஒழுக்கத்துக்கு நிறைவு தரும் ஓர் அங்கமாகும். "வழிபாடு" என்ற சொல் "தொழுதல் " என்ற பொருளிலேயே பெரும்பாலும் இன்று வழங்கப்படுகிறது. காட்டிய வழியிலேயே பின்பற்றி நடத்தலே "வழிபடுதல்" எனப்படும். அதனால் ஆலயங்கள் தூலமாயும், சூக்குமமாயும் காட்டும் வழிகளில் நடப்பதும் ஒழுகுவதுமே உண்மை வழிபாடு என்று பெயர் பெறும்.

மனிதனுக்கு ஆன்மீக அறிவை ஊட்டி வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட ஆலயங்களில், அவனது அறிவு, இச்சை, செயல் ஆகிய மூன்றிற்கும் நிறைவு தரும் மூவகை முறைகள் இருப்பதை காணலாம். ஆலய அமைப்பு முறை, ஆராதனை முறை, தரிசன முறை என்பனவே அவையாகும்.

ஆலயக்கட்டடங்கள் அதன் பல அங்கங்கள், மண்டபங்கள், பிரகாரங்கள் முதலியனவும் அங்குள்ள திருவுருவங்கள் (விக்கிரகங்கள்) அவற்றிற்குரிய இடங்கள், யந்திரங்கள், பிரதிட்டைகள் முதலியனவும் அவை அமைக்கப்பட்டிருக்கும் விதங்களும் ஆலய அமைப்பு முறையை சார்ந்தனவாம். அர்ச்சகர் ஆலயங்களில் செய்யும் பூசை முறைகள், கிரியைகள் என்பன ஆராதனை முறையாகும். ஆலயத்தில் அடியார்கள் சென்று வழிபடும் முறை தரிசனம் எனப்படும்.

திருக்கோயில் திருவுருவ வழிபாடு தனியொரு மனிதனுக்கென உருவாகவில்லை. மக்கள் அனைவரும் சென்று வழிபடுவதற்கு தோன்றியவையே அவையாகும். மக்களின் எண்ணிக்கை தொகை பெரிது. ஆயினும் அவர்களுள் பெரும்பாலானோர் அறிவு நிலையின் அடித்தளத்தை அணுகாத, அறியாத நிலையில் உள்ளனர். இந்நிலையில் உள்ளோர் எளிதாய் விளங்கி வழிபடும் முறைக்கேற்ப அமைந்த சாதனங்களே சைவ கோவிற் திருவுருவங்களாகும்.

குணங்குறியற்ற இறைவனை குணங்குறிகளால் வகுக்கும் எல்லைகள் வைத்து புறத்தோற்றம் கொடுத்து எமது கட்புலனுக்குள் அடங்கச்செய்யும் முயற்சியின் விளைவே நாம் காணும், வழிபடும் திருவுருவங்கள். உருவமற்ற இறைவன் ஆன்மாக்களை உய்யும் பொருட்டு அவர்கள் மீதான கருணை மேலீட்டால் அருள்பாலிப்பதற்காக அவன் பல வடிவங்களில் வந்து நின்று அருள்பாலிப்பதனால் திருவுருவங்கள் பல சிறந்தனவாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மனித அறிவால் உணர்ந்து கொள்ள முடியாத இறைவனை அறிய வகையறியாது தடுமாறும் ஆன்மாக்களுள் விவேகமும்,பக்குவமும் உடையவர்களினது வழிபாட்டிற்கு உரியது சிவலிங்கத் திருமேனியாகும். இப்படியான சிவலிங்கத் திருமேனியானது உணரும் பக்குவம் இல்லாதவர்களது வழிபாட்டிற்குரிய திருவுருவமானது கை, கால் முதலிய உறுப்புக்களுடன் கூடிய உருவத்திருமேனியாகும் என்பது ஞானநூல் வல்ல பெரியோர் கருத்து.

தொன்று தொட்டே இந்த திருவுருவ வழிபாடு நம் சைவசமயத்தில் நிலவி வருகிறது. பழம்பெரும் நாகரீக நகரங்களாக விளங்கி இன்று அழிந்திருக்கும் மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகர அகழ்வாராய்வின் போது சிற்சில இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தெய்வத் திருவுருவ சிலைகளே இதற்குச் சான்றாகும்.

திருவுருவங்கள் இறைவன் நினைவுகூர்ந்து, மனதால் உணர்ந்து கொள்வதற்கு துணை நிற்பதோடமையாது, அவன் பெருமையினை அறிவதற்கும் உதவியாய் விளங்குகின்றன. நாம் திருவுருவ வழிபாடு செய்கிறோம் என்றால் அவ்வழிபாடு நம் உள்ளத்திலிருந்து எழுந்து காணும் உருவத்தையும் கடந்து அறியமுடியாத ஒரு பொருளைச் சென்று பற்றுகிறது என்பதை நாம் பூரணமாக நம்பி உணர வேண்டும். இன்னும் திருவுருவத்தில் இறைவன் எழுந்தருளி இருப்பதாய் ஆரம்ப முதல் நினைத்து வழிபாடாற்றி வர வர திருவுருவமே இறைவனாயும் அதன் மேல் திருவுருவத்தை காணாது இறைவனையே அங்கு நேருக்கு நேராகக் காணுவதாயும் அனுபவம் பிறக்கும் என்பது தெளிவாம்.

ஆலயத்திலுள்ள திருவுருவச்சிலை பிம்பம், மூர்த்தி, பேரம், பிரதிமை போன்ற பல்வேறு சொற்களால் சிற்ப நூல்களில் குறிப்பிடப்படுகிறது. இவற்றுள் "விக்கிரகம்" என்ற சொல்லில் வரும் "வி" விசேடம் என்றும் "கிரகம்" இடம் என்றும் பொருள்படும். அதாவது கடவுள் விசேடமாக விளங்கும் இடம் என்பது இதன் பொருளாகும். அண்டம் முழுவதிலும் பொதுவாக வியாபகமுடைய இறைவன், ஆலயங்களில் விசேடமாகவும் அதிலும் விக்கிரகங்களில் இன்னும் அதி விசேடமாகவும் விளங்குவான் எனச் சமய நூல்கள் கூறுகின்றன. ஆலயங்களில் கல்லினால் அல்லது தாமிரத்தால் (உலோகத்தால்) செய்யப்பட்ட திருவுருவ சிலைகள் வைக்கப்பட்டிருப்பதை காணலாம். கல்லால் அமைந்தவை "கற்சிலை" அல்லது "சிலாவிக்கிரகம்" எனப்படும். இவை ஒவ்வொன்றும் ஆகம முறையில் அமைந்த அவற்றுக்குரிய கருவறைகளில் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்படும். இத்திருவுருவங்களுக்குத் தான் நித்திய திருமஞ்சனமும் பூசையும் நடைபெறும். நைமித்திய பூசை வழிபாடும் இவற்றுக்குத்தான் நடைபெறும். தாமிரத்தால் வார்க்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் திருவுருவங்களுக்கு நாள்தோறும் திருமஞ்சனம் நிகழ்வதில்லை, பூசை மட்டுமே நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவங்களை அமைக்கும் சிற்பி அவற்றின் பிரமாணங்களுக்கு அமையவே சிலைகளை அமைக்க வேண்டும். இவற்றில் தவறுகள் ஏதேனும் நேரின் சிற்பி முதலாக அந்நாடு முழுவதற்குமே பெருங்கேடுகள் சூழும் எனச் சிற்ப ஆகமங்களும், சிற்ப நூல்களும், புராணங்களும் கூறுகின்றன.

திருவுருவங்களின் உயரம் : பேரங்குலம், மானாங்குலம், மாத்திராங்குலம், தேகலபதாங்குலம் என்ற நால்வகை விக்கிரக அளவு நூற் பிரமாணங்களுக்கு அமைந்ததாக இருக்கும். இதே போன்று இவற்றின் சுற்றளவு அளக்கும் முறை : மானம், பிரமானம், உன்மானம், பரிமானம், உபமானம், இலம்பமானம் என ஆறு வகையாகும்.

இங்ஙனம் "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மில்லார்கு ஆயிரந்திருநாமம் பாடி நாம் தெள்ளேனல் கொட்டாமோ" என்ற திருவாசக வாக்குப்படி, உருவம் ஒன்றின்றி எல்குமாய், எல்லாமாய் நிற்கும் பரமசிவத்திற்குச் சிவாலயங்களில் முதலுருவாக சிவலிங்கத்தையும் வழி உருவங்களாக நடேசர், தேவியார், தட்சணாமூர்த்தி ஆகிய மூவரையும் சார்புருவங்களாக விநாயகர், சுப்பிரமணியர், காலவைரவர் போன்ற மூர்த்திகளையும் வகுத்து வைத்திருக்கின்றனர். இவற்றுள் சிவம் அருவம் அல்லது அரூபம் என்றும் சிவலிங்கம் அருவுருவம் அல்லது ரூபாரூபம் என்றும் மற்றைய இரு மூவரும் ரூபம் அல்லது உருவம் என்றும் கூறப்படுகிறது.

சிவாகம விதிப்படி கட்டடங்கள் அமைக்கப்பட்டு, மகாகும்பாபிஷேகத்தில் தெய்வ பிரதிட்டை செய்யப்பட்டு நித்திய நைமித்தியக் கிரியைகள் செய்யப்பட்டு வருகின்ற ஆலயங்களில் வேத பாடம் செய்து வைக்கப்பட்டுள்ள யந்திரங்களெல்லாம் அருட்கருவிகளாகும். அவற்றை தம்மிடத்தில் கொள்ளாத உருவங்களெல்லாம் வெறுஞ் சிலைகளாம். அவை ஆராதனைக்கேற்ற மூர்த்திகள் ஆகமாட்டா. ஆலயங்களில் யந்திரமே உயிர்நாடியாக உள்ளது. ஆகவே பூசைக்கு இன்றியமையாதது. அதன் மேலுள்ள விக்கிரகம் அருவப்பொருளை அறியமாட்டாத மனத்தின் கவர்ச்சிக்காகவும் மக்கள் மனதை ஒருமுனைப்படுத்துவதற்கும் உதவுவது. அதனால் தான் ஆன்மார்த்த பூசையில் பலர் சிலையின்றி வெறும் யந்திரத்தை மாத்திரம் வைத்து பூசை செய்யும் வழக்கம் இருந்து வருகிறது.

யந்திரம் முதலில் வரையப்படும் போது அது ஓர் உலோகத்துண்டாய் வெறும் சடப்பொருளாகவே இருக்கும். பின் மந்திரம் முத்திரை பாவனைகளாலும், உரிய கிரியைகளாலும் அது பாடம் பண்ணப்படும் போது இரும்புத்துண்டு காந்தமாவது போல அச்சடப்பொருள் சிறிது சிறிதாக அருட் கருவியாவதற்குரிய பக்குவம் பெற்றுக்கொண்டு வரும். இது சிதபிரகாச ஆவாகணம் எனப்படும். முடிவில் இத்தகட்டில் பூரண உருவேறி யந்திரதாபனமும் பிராணப் பிரதிட்டையும் செய்யப்படும் போது அது முழுவதும் இறைவனது அருட்கருவியாக மாறிக் கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய அனுக்கிரக சக்தியை நாற்புறமும் இரவும் பகலும் இடைவிடாது வீசிக்கொண்டே இருக்கும் என்று பெரியோர் கூறுவர்.

இத்தகைய கோயில்களுக்கு நாள்தோறும் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். மானிடப்பிறவியில் இறைவனை அடையும் வழிகளில் ஒன்றாக கோயில் மற்றும் திருவுருவ வழிபாடு கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதாண்டவ தோத்திரம் அருளிய இராவணன்

சு.சிவப்பிரியன்
3ம் வருடம்
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தேவார திருமுறைகளில் விதந்துரைக்கப்பட்ட பெருமைகளை எல்லாம் தனதாக்கி இசையாளனாக, இறைவனாக வாழ்ந்த இராவணன் சிவனை மட்டுமன்றி பார்வதியையும், துர்க்கையையும் வழிபட்டவன். அதற்கான ஆதாரமாக இருப்பது அவன் பாடிய சிவதாண்டவ தோத்திரமே. இதில் ஐந்து பாடல்களில் பார்வதியை இராவணன் குறிப்பிட்டுள்ளான்.

நதிக்கரையில் வசிப்பவனாகவும் கெட்ட எண்ணம் நீங்கியவனாகவும் தலைமேல் கைகூப்பிய வண்ணம் அசையும் கண்களையுடைய பார்வதி தேவியின் தலையில் எழுதப்பட்ட "ஷசிவ" என்னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு எப்பொழுதும் நன்மையுடையவனாக ஆவேன் என்று பாடியுள்ளான் இராவணன். (தென்னிலங்கை கோமான் தமிழரசி) (பக்கம் 44, 1999)

"ஷகதா நிலிப்ப நிர்ஜரீ நிருஞ்ச கோடரே வாய்த
விழுக்த துர்மதி : ஸதா சிரஸ்தமஞ்ஜரிம் வஹந்
விலோல லோல லோசனா வலாம பால வக்னகம்
சிவேதி மந்திர முச்சரன் சதா சுகீ பவான் யஹம்"

(சிவதாண்டவ தோத்திரம் - 13)

மேலும் இராவணன் தனது சிவதாண்டவத்தில் அசுரர்கள் தேவர்களை துன்புறுத்திய நேரத்தில் தக்கனின் யாகத்தினை அழித்த சிவன், பார்வதியை பிரிந்து தவம் செய்தான். இதனால் வருந்திய தேவர்கள் மன்மதனை அணுகி சிவனின் தவத்தைக் கலைத்து பார்வதியின் மேல் மோகம் கொள்ளச்செய்யுமாறு வேண்டினார்கள். மன்மதனும் சிவன் மேல் காமக்கணைகளை தொடுத்தான். சிவனும் தனது தவநிலை கலைந்து காமனை தனது நெற்றிக்கண்ணை சிறிது திறந்து நோக்கினார். இதனால் அவன் எரிந்து சாம்பலானான் எனப்பாடுகிறார் என லண்டனிலிருந்து வெளியாகும் கலசம் இதழுக்காக தமிழரசி அவர்கள் 1996ல் எழுதிய "மனைவி என்னும் அருளமுதம்" என்னும் கட்டுரையில் (பக்கம் 25) குறிப்பிட்டுள்ளார். இதனை இராவணன் தனது சிவதாண்டவ தோத்திரத்தில் பாடும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கராளபால பட்டிகா தகக் தகக் தகக் ஜவலத்
தநஞ் ஜயாதுர்க்ருத ப்ரசண்ட் பஞ்ச சாயகே......"

அதாவது விழித்த நெற்றிக் கண்ணின் தகதக எனப்பிரகாசிக்கும் அக்கினியால் மன்மதனை எரித்தவர் என்கிறான் இது இராவணனால் அன்று பாடப்பட்டதா? அல்லது இடைச்செருக்கலா? என்பது ஆய்வுக்குரியது. அத்துடன் தமிழகத்தைச் சேர்ந்த கு.வே.சச்சிதானந்தம் குருக்கள் "இலங்காபுரியில் இருந்து அழகாபுரி வரை" என்ற நூலிலும் இராவணன் சிவதாண்டவ தோத்திரத்தினை ஆக்கிய பெருமை உடையவன் என்று போற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தென்னகத்திற்கு தெற்கே வாழ்ந்த இராவணன் , சமஸ்கிருத மொழியில் பாடுவதற்கு சாத்தியம் அறவே இல்லை. அத்தோடு சிவதாண்டவ தோத்திரத்தை இராவணன் பாடியிருப்பதற்கான சாத்தியங்களும் இல்லை. ஏனெனில் கடவுளுக்கு வடிவம் கொடுக்கின்ற முறைமை ரவிவர்மாவுக்கு பின்னரே வழக்கத்திற்கு வந்திருக்கிறது. ஆகவே நெற்றிக்கண், பார்வதியின் தலையில் சிவமந்திரம் என்பவை அன்று இருந்திருக்க முடியாதல்லவா? ஆகவே இராவணன் பாடியதாக சமஸ்கிருதத்தில் சிவதாண்டவ தோத்திரம் பாடப்பட்டிருக்கிறதே அன்றி இராவணனால் பாடப்படவில்லை.

இராவணன் பரதநாட்டியத்திலும் வல்லவனாக திகழ்ந்தான் என அறிகின்றோம். நாட்டிய வேதத்தினை உருவாக்கிய பிரமா அவ்வேதத்தினை பரத முனிவருக்கு உபதேசிக்க, அவர் காந்தவர்களினதும், அப்சரஸ் பெண்களினதும் உதவியுடன் நாட்டியம், நிருத்தியம், நிருத்தம் ஆகிய அங்கங்கள் அடக்கிய ஆடல் வடிவத்தை சிவன் முன்னிலையில் அரங்கேற்றினார். இதைப்பார்த்த சிவன் அவரின் பிரதான கணங்களில் ஒன்றான தண்டுவ முனிவரை பார்த்து பரத முனிவருக்கு தாண்டவ வகை உட்பட நடனத்தை போதிக்குமாறு பணித்தார்.

அந்நாட்டிய கலைகளில் ஒன்று இராவணன் அருளிய நாட்டிய முத்திரைகளும் அடங்கும் என்று கூறப்படுகின்றது. இராவணன் பரதநாட்டியம் உட்பட முத்தமிழ்களிலும் சிறந்து விளங்கினான் என கிருபானந்த வாரியார் அவர்களும் கூறியுள்ளமை நினைவில் கொள்ளத்தக்கது. ஆனால் பரதமுனிவர் வாழ்ந்த காலம் கி.மு 2ம் நூற்றாண்டாகும். பரதவர் குலத்தை சேர்ந்த இவர் நாட்டிய சாஸ்திரம் எனும் நூலை தந்ததன் பின்னர் தான் இந்நடனம் பரதநாட்டியம் என பெயர் வந்திருக்க முடியும். பரதவர் குலப்பெண்களே இந்த நாட்டியத்தை ஆடியிருக்கிறார்கள். பரதவர் எனப்படுபவர்கள், கடற்கரையோர நிலப்பரப்பில் வாழ்ந்த மக்களே இன்று பரவையார் என மருவி கடற்கரையோரங்களில் கடற்தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு சமூகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தென்னிலங்கையில் கதிர்காமம் உட்பட சிங்களபகுதிகளில் இராவணனுடைய ஞாபகார்த்தமான "தென்னா அதந்தனா" என்று பாடல்களைப் பாடி ஆடும் பாரம்பரிய நடனங்கள் இன்னும் வழக்கத்தில் உள்ளது. அவ்வாறே சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாண்டிய நாட்டிலிருந்து வந்த நாட்டியம் பெளத்த விழாவாக மாற்றமடைந்திருப்பதனை நோக்குமிடத்து, பல்லாயிரம் ஆண்டிற்கு முற்பட்ட இராவணன் பற்றிய கருத்துக்களும் அவனுடைய சிறப்புக்களும் எப்படியும் மாற்றமடைந்து வழக்கிழந்து போய், பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாய் போயிருக்கலாமல்லவா?



# இன்பம் எது?

ச.ரகுதரன்
மூன்றாம் வருடம்
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இன்பம் என்பதற்கு எந்த அளவுகோலும் இல்லை. மற்றும் இந்த இன்பம் என்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளித்து விடுவதும் இல்லை. பொன்னும் பொருளும் பலருக்கு இன்பம் அளிக்கலாம். ஆனால் அவையே வேறு சிலரின் துன்பத்திற்கு காரணமாகவும் அமைகின்றன. விருப்பு, வெறுப்புக்கு ஏற்ற படிதான் இன்ப-துன்ப உணவுர்கள் அமைகின்றன. எனவே இன்ப-துன்பத்திற்கு அடிப்படைக் காரணமே நாம் தான், நம் மனம் தான்.

ஒருவரது அறிவின் ஆற்றலைப் பொறுத்தே இன்ப துன்ப உணர்வுகள் வேறுபடுகின்றன. நல்ல சிந்தனை ஆற்றல் உள்ளவர்கள் துன்பத்திலும் இன்பம் காண முடியும் என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் சிந்தனை ஆற்றல் அற்றவர்கள் சாதாரண சம்பவங்களையும் பெரும் துன்பமாக எண்ணி சோர்வுற்றுப் போவார்கள். நல்ல உணர்வுகள் பெறுவதற்கு நல்ல சிந்தனையே விதை. நல்ல விதையும் நல்ல நிலமும் தான் நல்ல விளைச்சலைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்மயானந்த சுவாமிகளும் சின்மயா மிசனும்

சி.துவாரகா
3ம் வருடம்,
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இந்துமதம் உலகின் மிகத்தொன்மையான மதமாகவும் பாரம்பரிய சிறப்புக்களை கொண்ட மதமாகவும் விளங்குகிறது. இம்மதம் காலத்திற்கு காலம் மாறிவரும் உலக ஒழுங்கிற்கேற்ப புறத்தேயிருந்து வந்து சேர்ந்த புதிய அம்சங்களை எல்லாம் உள்வாங்கிக் கொண்டாலும், தனது தனித்தன்மையை சிறிதும் இழக்காது, இன்றுவரை அதன் விழுமியங்களை அப்படியே பேணிப்பாதுகாத்து வருகிறது. இதற்கு காரணம் அவ்வக்காலத்திலே தோன்றிய ஆன்மீகவாதிகள் இந்துதர்மங்களை தெளிவாக உணர்ந்து, அக்காலத்திற்கேற்ப மக்களிற்கு அவற்றை விளக்கியமையே ஆகும். இவ்வாறு இந்துமதத்தை பேணிக்காத்த சான்றோர் வரிசையில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த **சின்மயானந்த சுவாமிகளும்** குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

சுவாமி விவேகானந்தர் முத்தியடைந்து பதினான்கு ஆண்டுகளின் பின் பிறந்த பாலகிருஸ்ணமேனன் என்ற குழந்தை வளர்ந்து, பக்குவமடைந்து சுவாமி சின்மயானந்தராக தீட்சாநாமம் பெற்றது. இக்குழந்தையே இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் உலகம் முழுதும் பயணம்செய்து, இந்துதர்ம விழுமியங்களை தனது சொல்லாற்றல் மூலம் பரப்பி, இந்தியாவின் சிறந்த ஆன்மீகவாதியாக விளங்கியவர் என்பது உலகறிந்த உண்மை. **கிழக்கையும் மேற்கையும், அறிவியலையும் ஆன்மீகத்தையும், பண்டிதனையும் பாமரனையும்** இணைக்கும் பாலமாக இருந்த சுவாமிகள் அறிவியல் மற்றும் வாழ்வியல் கண்ணோட்டத்தில் ஆன்மீகத்தை அணுகி, அலசி, ஆய்வுசெய்து வெற்றி பெற்ற முதல் ஆன்மீகவாதியாவார்.

இந்தியாவின் **கேரள மாநிலத்தில் எர்ணாகுளம்** நகரில் **குட்டன்மேனன் பாருகுட்டி** தம்பதியினரிற்கு மகனாக **1916** ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி **பாலகிருஸ்ண மேனன்** பிறந்தார். இவரிற்கு "அட்சராப்யாசம்" (ஏடு தொடக்குதல்) செய்த சிட்டம்பி சுவாமிகள், **"இக்குழந்தையின் வாழ்க்கை முதல் சில வருடங்களிற்கு வித்தியாசமானதாக இருக்கும் ஆனால் பிற்காலத்தில் உலகமே மெச்சும் வகையிலே அமையும்"** என கூறியிருந்தார். ஐந்தாவது வயதில் தாயை இழந்த இவரிற்கு, சிற்றன்னை வளர்ப்பில் புராண, இதிகாச கதைகளை கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போதெல்லாம் **கடவுள் என்றால் என்ன? கடவுள் யார்? அவர் எங்கே இருக்கிறார்? கடவுள் என்பது கற்பனையா? உண்மையா?** போன்ற கேள்விகள் அவர் மனதில் எழுந்தன. ஆனாலும் விடைதேடி புரிந்துகொள்ளமுடியாத வயதாக அது இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பள்ளிக்காலம் பிரித்தானியர் ஆட்சியின் கீழான அரசியல், சமூக, கலாசார சூழலில் அமைந்தது. விடலைப்பருவம் வந்ததும் சகாக்களின் கூட்டால் தீயபழக்கங்களும் இவருடன் ஒட்டிக்கொண்டன. ஆனாலும் தந்தையாரின் சிரத்தையினால் எம்.ஏ.ஆங்கில இலக்கியம் படிக்க லட்சுமணபுரி சென்று அங்கு பல்கலைக்கழக டென்னஸ் குழுவில் பங்கு, இலக்கிய குழவில் உறுப்பினர், விவாத மேடையின் முக்கிய பங்காளி, நாடக நடிகன் என்றவாறு பன்முக தகுதிகளை பெற்றார். லக்னோ பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து வெளியேறியவர் ஊடகவியல் துறையில் நுழைந்து அரசியல், சமூக, பொருளாதார பணிகளை ஆற்ற முனைந்தார்.

பத்திரிகை துறையிலிருந்தபோது தான் ஆன்மீக சான்றோரின் வரலாறுகளை முழுமையாக அறியும் வாய்ப்பு அவரிற்கு கிட்டியது. அதன் பின்பே **வாழ்க்கையின் பொருளையும் இறைவனின் சிருஸ்டியையும்** கொஞ்சமாவது புரிந்துகொண்டார். **எழுத்து துறையில் நுழைந்ததும் ஆன்மீக சான்றோரை சந்திக்க நேர்ந்ததுமே** இவரது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி ஆன்மீகத்துறைக்கு செல்ல முக்கிய தூண்டுதலாய் இருந்தன.

1948 ஆம் ஆண்டு தனது முப்பத்தியிரண்டாவது வயதில் கல்வி ஞானத்தை தன்னை அறிந்து கொள்வதற்கான தேடலில் பயன்படுத்த தொடங்கினார். **"சேவை செய், அன்பு செலுத்து, தூய்மைப்படுத்திக்கொள், உன்னை நீயே அறிந்துகொள்ள முயற்சி செய்"** என தனக்கே ஏவல் விடுத்து, சிவானந்த ஆச்சிரமத்தை தனது வாசஸ்தலம் ஆக்கிக்கொண்டு, சிவானந்த சுவாமிகளின் நெறிப்படுத்தலின் கீழ் ஆன்மீக விடயங்களில் தெளிவுபெற்று, தன்னை முழுமையான ஆன்மீகவாதியாக மாற்றிக்கொண்டார்.

**1949 ஆம் ஆண்டு சிவராத்திரி** தினத்தன்று சுவாமி **சிவானந்தரின்** தெய்வீக திருக்கரத்தால் சன்னியாசம் வழங்கப்பட்டு, **"சுவாமி சின்மயானந்த சரஸ்வதி"** என்ற தீட்சாநாமமும் சூட்டப்பட்டது. இதன் பின்னர் **இமயமலையில் சுவாமி தபோவன மகாராஜ்** என்பவரிடம் எட்டு ஆண்டுகள் இந்து தத்துவத்தை பயின்று வேதாந்தத்தை முறையாக கற்றுத்தேர்ந்த சின்மயானந்தர் பிற்காலத்தில் உலகம் முழுவதும் புகழ்பெற்ற சொற்பொழிவாளராக வலம்வந்தார்.

ஆன்மீக, வேதாந்த கருத்துக்களை பரப்பும் சின்மயானந்தரின் இலட்சியங்களை நிறைவேற்றும் பொருட்டு **"சின்மயா மிசன்"** என்ற நாமத்துடன் ஒரு ஆன்மீக அமைப்பு **1953** ஆம் ஆண்டு உருவாகியது. இந்தியாவின் மும்பாயை அமைப்பின் நிர்வாக தலைமையகமாக கொண்டு உலகில் 300 இற்கும் மேற்பட்ட கிளைகள் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கெல்லாம்

- **பாலாவிகார் (5-18 வயது சிறுவர்கள்)**
- **சின்மயா யுவ கேந்திரா (15-28 வயது இளையோர், யுவதிகள்)**
- **வளர்ந்தவர்களிற்கான கல்விக்குழுக்கள்**

எனும் அடிப்படையில் சேவைகள் வழங்கப்படுகின்றன. ஆன்மீக சொற்பொழிவுகள், தியானம், கீத பாராயணம், இந்து தர்மம், இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் போன்றவற்றையும் இவர்கள் முன்னின்று நடத்துகின்றனர். அத்துடன் சின்மயா மிசன் இந்தியாவில் 24 கோயில்களையும், ஏனைய நாடுகளில் 7 கோயில்களையும் கொண்டுள்ளது. இவ் அமைப்புகளின் செயற்பாடுகளில் உத்வேகத்தை ஏற்படுத்தும் பொருட்டு சுவாமிஜிகளே முன்வந்து குடும்ப பெண்கள், தாய்மார், இளைஞர், குழந்தைகள் என அனைத்து பிரிவினரையும் இவ் அமைப்பின் செயற்பாட்டு வட்டத்திற்குள் கொண்டுவந்தார். ஆன்மீகப்பணி மட்டுமன்றி

- **மருத்துவத்துறை**
- **பொருளாதார துறை**
- **கல்வித்துறை**
- **பண்பாடு**
- **சமூகம்**

போன்றவற்றின் முன்னேற்றத்திற்காகவும் பல பணிகளை சின்மயா மிசன் செய்துவருகின்றது. **மருத்துவ துறை** சார்ந்ததாக வைத்தியசாலைகள், தாதியர் பயிற்சி நிலையம், சிகிச்சை நிலையங்கள், கிராமப்புற கண் பராமரிப்பு நிலையங்கள் போன்றவற்றினூடாக தனது சேவையினை வழங்குகின்றது. **சமூகத்தை முன்னேற்றும் பொருட்டு** வயதில் மூத்தோரிற்கான வீடுகள், கிராமப்புற அபிவிருத்தி திட்டங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், தாழ்த்தப்பட்ட பெண்களிற்கான வேலைவாய்ப்பு திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துகின்றது.

**கல்வி மேம்பாட்டிற்காக** தினப்பாடசாலை, கல்லூரிகள், சின்மயா பாரம்பரிய நிலையம், பட்டப்படிப்பு கல்லூரிகள், சின்மயா தங்கியிருந்து கற்கும் பாடசாலை போன்றவற்றையும் நிறுவியுள்ளது. **பண்பாடு** தொடர்பாக வேதாகம கொள்கைகளை பரப்புதல், இளைஞரிற்கான ஆளுமை முன்னெடுப்பு பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவற்றையும் நடத்துகின்றனர். அத்துடன் **பாலவிகார், தபோவன் பிரசாத், சின்மயா உட்கோஸ்** போன்ற மாதாந்த சஞ்சிகைகளையும் இவர்கள் வெளியிடுகின்றனர்.

இவ்வாறு இவரின் ஆன்மீக பணிகளும் வழிகாட்டல்களும் இந்திய தேசத்தில் மட்டுமன்றி உலகம் முழுவதும் பரவிற்று. இதனால் சுவாமிஜிகளிற்கு உலகிலிருந்து பல அழைப்புகள் வந்தவண்ணமேயிருந்தன. அவற்றை தட்டிக்கழிக்க முடியாது. உலக சுற்றப்பயணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு, மேலைத்தேயம் உட்பட்ட பல நாடுகளில் ஆன்மீகப்பணியாற்றினார். இதன் விளைவாக பெரும்பாலான நாடுகளில் சின்மயா மிசனின் கிளைகள் காணப்படுகின்ற போதும், இந்திய, இலங்கை தமிழர் அதிகமாக வாழும் **அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இலங்கை** போன்ற நாடுகளில் அதிக ஆதிக்கத்தினை அவை செலுத்தி வருகின்றன.

சுவாமிஜிகளின் சொற்பொழிவின் சாராம்சம் பெரும்பாலும் **"மனம்"** பற்றியதாகவே இருக்கும். ஒரு தடவை அமெரிக்காவில் நிகழ்ந்த சொற்பொழிவின்போது மனித மனத்தைப்பற்றி அவர் கூறியதை இங்கு காணலாம்.

**"இன்றைய மனிதனால் தன்னையே கட்டுப்படுத்தி வாழ முடியவில்லை. அவனின் ஆசை கட்டுப்பாடின்றி, கடிவாளமில்லா குதிரை போன்று திமிறித் திரிகின்றது. இதனாலே மனிதன் நிறைய விசமங்கள் செய்கின்றான். மனம் போனபடியெல்லாம் உடலை, உணர்ச்சிகளை அலைய விடுகின்றான். அறிவின் கட்டுப்பாட்டிற்குள் மனமும் உடலும் அடங்க மறுக்கின்றது. அடக்கிவைக்க மனிதனால் முடியவில்லை. முதலில் அவன் தன்னை உணரவேண்டும். மனதை அடக்கி ஆள தெரியவேண்டும். அறிவின் வலிமையால் தறிகெட்டு ஓட முயற்சிக்கும் மனதை தனது கட்டுப்பாட்டிற்குள் அடக்கி வைக்க புத்தியை பயன்படுத்த வேண்டும்."**

இவ்வாறு இந்தியாவில் மட்டுமன்றி தான் செல்லும் இடமெங்கும் ஆச்சிரமங்களையும் மையங்களையும் நிறுவி ஆன்மீகத்தினூடே சமூக, பொருளாதார, பண்பாட்டு பணிகளை புரிந்த சின்மயானந்த சுவாமிகள் **1993 ஆம் ஆண்டு ஆகஸ்ற் மாதம் 30 ஆம் திகதி சான்டியாகோவில்** (கலிபோர்ணியா) இறைவனடி சேர்ந்தார். இவரது சீடர்கள் அவ்விடத்திலே சுவாமிஜி மகாசமாதி அடைந்ததாக கருதுகின்றனர். சுவாமிகள் ஆரம்பித்த சின்மயா மிசன் இன்று உலகம் முழுதும் 350 மையங்களில் இயங்குகின்றது. இந்துப்பண்பாடு, கலாசாரம் மற்றும் வேதாந்தம் போன்றவற்றை மக்களிற்கு பரப்பிவருகின்றது. இலங்கையிலும் சின்மயாமிசன் கிளைகள் நிறுவப்பட்டு ஆன்மீகத்துடன் சமூக, பொருளாதார அபிவிருத்திப் பணிகளும் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை நூல்கள்

ஜனகன், (2004), "பூஜ்ய குருதேவ் சுவாமி சின்மயானந்தா", கங்கை புத்தக நிலையம்.
http://en.wikipedia.org/wiki/Chinmayananda
http://ta.wikipedia.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவழிபாடும் பாகுபாடு பார்க்கும் சமுதாயமும்

ம.கேசவன்
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

தீராத வினைகளை அடிவேரோடு களைபவரும் முழுமுதற்கடவுளுமாகிய எம்பெருமான் விநாயகரின் ஆசீர்வாதத்தை வேண்டியவாறு இக்கட்டுரையை எழுத ஆரம்பிக்கின்றேன்.
உடலை கோயிலாகவும், மனதினை அடியனாகவும், வாயை தூய்மையாகவும், இதயத்தினை இலிங்கமாகவும், அன்பினை பாலும் நெய்யுமாகவும் அபிஷேக நிவேதனம் செய்து ஈசனை வழிபடும் உன்னத சமயம் எங்கள் சைவசமயம். எமது சைவர்களில் ஒரு சிலர் மரபுரீதியாக பின்பற்றி வருகின்ற சில மூட நம்பிக்கைகளின் பிரகாரம் தவறான கொள்கைகளை சமயரீதியாகவும் கையாண்டு வருவது தற்காலகட்டத்திலும் தொடர்வது வேதனையுடன் உற்றுநோக்கப்படவேண்டியதொன்றாகும்.

பல்கலைக்கழக முதலாம்வருட நிறைவு விடுமுறையில் ஒருபகுதியை என் பிறப்பிடமாகிய வடபகுதியில் கழித்திருந்தேன். அங்கு நடந்த நெகிழ்வான சம்பவமொன்றை உங்கள்முன் பகிர்ந்துகொள்ளலாமென நினைக்கின்றேன்.

அரசமரக்கொப்புகள் கிளைவிட்டு நிழல் பரப்ப, வண்டுகள் தேனுண்ண ஆர்ப்பரிக்கின்ற தருணம் அப்போது அலர்ந்த பூக்களால் மாலை கட்டி விநாயாகப்பெருமானுக்கு அணிவித்து திருவருளை வேண்டி நிற்கும் பக்தர்கள் நிறைந்தவாறு காட்சியளித்தது அரசடி விநாயகர் எனப்படும் அச்சிற்றாலயம்.

அன்று கார்த்திகை விரதம் என்றபடியால் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுமென கோயில் வாசலில் எழுதப்பட்டிருந்தது.
ஒருசாரார் ஆலயத்தினுள்ளேயும் இன்னொரு சாரார் எல்லைக்கு வெளியேயும் நின்று வழிபாட்டிலீடுபட்டிருந்தனர். வெளியே என் நண்பனொருவனுமிருப்பதைக்கண்டு அவ்விடம் விரைந்தேன்.

"நண்பா..."என கட்டியணைத்தவாறு,
"இன்றைக்கு இங்க அன்னதானமாம்... வா உள்ளே சென்று சாப்பிட்டு வருவோம்..." என அவன் கையைப்பிடித்திழுக்க நழுவியது அவன் கை.
"இல்லை நண்பா... நான் வரவில்லை... நீ சென்று வா... நான் இங்கிருந்தே கும்பிடுறன்..." என்ற பதில் அவனிடமிருந்து வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்திலே குறிஞ்சிக்குமரனாலயமதனில் அன்னதானமென்றால் முதற்பந்தியில் உட்கார அடிபட்டு அமரும் என் நண்பன் ஏன் இங்கு இவ்வாறு பின்னடிக்கின்றான் என்ற கேள்வி என் மனதில் குடிகொள்ள,

ஏதும் ஆசௌசமோ என வினாவினேன்.

"இல்லை நண்பா... இது எவ்வித பாகுபாடுமின்றி சென்று வழிபடும் எங்கள் குறிஞ்சிக்குமாரனாலயமில்லை... இது ஊர்க்கோயில். இங்கு நான் உள்ளே செல்வது அவ்வளவாக அழகாக இருக்காது..." என்றான் சிறிய நெகிழ்வுடன்.

எனக்கும் என் நண்பன் கூறியதுவும் தெளிவாகப் புரியவில்லை.

என் நண்பன் மட்டுமா பின்னடிக்கின்றான்...?

இல்லை... இல்லை...

ஒரு சிறுமி... வயது 5 இருக்கும்...

"அம்மா... நான் அப்புசாமி கும்பிடப்போறன்..." என்று கோயிலுள்ளே நகர, தாய் அச்சிறுமியை பிடித்திழுத்தாள்.

"ஏனம்மா... விடுறாயில்லை... அப்புசாமி கும்பிடத்தானே உள்ளுக்குள்ள போகக்கேக்கிறன்... " என்றாள் அச்சிறுமி முகத்தில் அழுகையுடன்.

"கோயிலுக்குள் பெரியாட்கள் தான் போகலாம்... நாங்கள் போகக்கூடாது... போனால் அப்புசாமி கோபிக்கும்... இங்கிருந்தே கும்பிடு... " என்று சிறிய அதட்டலுடன் தாய் கூறினாள்.

"பெரியாட்கள் மட்டும்தான் கோயிலுக்குள்ள போகலாமென்டால் ஏன் நீங்களும் அம்மம்மாவும் போகாமல் நிக்கிறீங்கள்...? அங்க ஒரு அண்ணா உள்ளுக்குள்ள போறார் பாருங்கோ... அவர் உங்களை விட பெரியாளா...?" என்று சிறுமி அழுகையுடன் கேட்க,

"உனக்கு கதை கூடிப்போச்சு... வீட்ட வா போவம்..." என்று கூறியபடி அச்சிறுமியை இழுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் தாய்.

அப்போதுதான் புரிந்தது எனக்கு ஆலயங்களிலும் உயர்வு தாழ்வு பாகுபாடு காட்டும் சமுதாயம் இன்னமும் இருக்கின்றதென்பது.

பெரியவர் சிறியவர், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு மேற்குறிப்பிட்டது போன்ற ஒரு சில ஆலயங்களில் குறிப்பாக கிராமப்புறங்களில் அமைந்திருக்கும் சிற்றாலயங்களில் ஆலயத்தைச் சார்ந்தவர்களால் இன்றும் பின்பற்றப்பட்டு வருவது மிகுந்த வேதனைக்குரியது. ஆன்மாக்கள் இறைவனிடத்தே லயமடையும் இடங்கள் ஆலயங்கள். இறைவன் அருள் சுரக்கும் இடங்கள் ஆலயங்கள். இத்தகைய புனிதம் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் இவ்வாறான ஏற்றதாழ்வுகள் காட்டப்பட்டுவருவது இறைவனாலேயே பொறுக்கமுடியாததொன்றாகும்.

உண்மையை ஆராய்ந்தால் சாதி எனப்படும் விதை விதைக்கப்பட்டிருப்பது ஆலயங்களிலோ திருமணங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ இல்லை. பழங்காலத்தில் பின்பற்றப்பட்டுவந்த மூட நம்பிக்கைகளை இன்னமும் கொள்கைகளாகக்கொண்டு வாழும் மானிடரின் இதயத்திலே ஒருபகுதியில் ஆழமாக வேரூன்றி விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது.

இத்தகைய நிலைப்பாடுகளை உடனடியாக வேரோடு களைவதென்பது முற்றிலும் எதிர்பார்க்கப்படமுடியாததொன்றாகும் என்பது உண்மை. ஆனால் இத்தகைய தவறான கொள்கைகளை இனிவருகின்ற சந்ததியினருக்கும் கொண்டு செல்வதை முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது. மேற்படியான மூடநம்பிக்கைகளுக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய கடமை இளைஞர்களாகிய எம் கைகளிலேயே உள்ளதென்பதை எவரும் மறுப்பதற்கிடமில்லை.

எம் சைவசமய மரபில் வேதாகமங்கள் முதல் அனைத்து நூல்களும் சாஸ்திரங்களும் தொன்றுதொட்டு உணர்த்திவருவது இவ்வுலகைப்படைத்தவன் இறைவன். அண்டங்களுக்கேல்லாம் அதிபதி எம் இறைவன். "ஒன்றே குலம். ஒருவனே தேவன்" என்ற கருப்பொருளில் இறைவனால் படைக்கப்பட்ட பிறவிகள் யாவும் இறைவனின் குழந்தைகள். எனவே சாதிபேதமின்றி எவ்வித வேறுபாடுகளுமின்றி, நாம் யாவரும் இறைவனின் குழந்தைகள் என்ற கருப்பொருளை மனதுள் விதைத்து, பிற உயிர்களையும் தன்னுயிராகக் கருதி ஒருவர் முன்னேற்றத்தில் ஒருவர் துணை நின்று, சைவநெறி வழி நின்று இறைவழிபாட்டுடன்கூடிய உன்னத வாழ்வினை வாழ்ந்து இறையருள் பெற்று இறைதிருவடியை சேர்வோமாக.

**"பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்**
**அவ்வின்பத்தில் இருப்பதுதான் தெய்வம்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி விசாகமும் முருகப் பெருமானும்.

ஜெ.கபில்ராஜ்
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

வைகாசி விசாக நாள் :

வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் வரும் புனிதமான பௌர்ணமி நாளையே "வைகாசி பூர்ணிமா" என்று அழைக்கின்றனர். இப் பௌர்ணமி நாளில் நாம் முழுமையான சந்திரனை பொதுவாக காணமுடியும். இது இயற்கையின் அற்புதங்களில் ஒன்றாக கூட கருதமுடியும்.

இவ் வைகாசி விசாக தினம் " சைவ" மற்றும் " வைஷ்ணவ" மதத்தினருக்கு முக்கியமான நாளாகும். சைவர்கள் இந்நாளை முருகப்பெருமான் அவதரித்த நாள் எனவும், வைஷ்ணவர்கள் "பெரியாள்வார் ஜெயந்தி" எனவும் கருதுகின்றனர். சூரபத்மன், சிங்கமுகன், தாரகன் போன்ற அரக்கர்கள் தேவர்களை துன்புறுத்தி வந்த காலகட்டத்தில் அசுரர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்ட முருகப்பெருமான் அவதரித்த தினம் இத் திருநாளே. "விசாகம்" எனும் நட்சத்திரத்தில் பிறந்த பெருமையைக் கொண்டதினால் முருகப்பெருமான் "விசாகன்" எனும் பெயரையும் கொண்டுள்ளார்.

தன்னுடைய நெற்றிக் கண்ணிலிருந்து சிவபெருமானார் ஆறு திருப்பொறிகளை "வாயு"வும் "அக்கினி"யும் கொண்டு கங்கையில் பரப்ப அவை சரவணப் பொய்கையில் தாமரை மலர்களில் ஆறு குழந்தைகளாக தோன்ற அக்குழந்தைகளை கார்த்திகைப் பெண்கள் எடுக்க அக்குழந்தைகளை சக்தி தேவியர் ஒன்றாக அணைக்கவே ஆறு முகங்களையும் பன்னிரு கரங்களையும் கொண்ட ஒரே குழந்தையாக மாறின. இக்குழந்தையே முருகப்பெருமான் என்பது நாம் அறிந்ததே. இதனையே வைகாசி மாத பூர்ணிமாவில் தெய்வீகம் பொருந்திய "சண்முக அவதாரம்" என கூறப்படுகின்றது.

முருகப்பெருமானின் காட்சியின் அர்த்தங்கள் :

வேல் ஏந்திய முருகப்பெருமானார் வள்ளி மற்றும் தெய்வயானையருடனும் மயிலின் அருகே நின்றிருக்க மயில் தன் அலகில் ஒரு பாம்பை கவ்வி வைத்திருப்பது போன்ற காட்சி அமையப்பெற்றது நாம் அறிந்ததே. அக்காட்சிகள் ஒவ்வொன்றிற்கும் அர்த்தங்கள் அமைந்துள்ளதாக கருதப்படுகின்றது. மயில் அழகையும் செருக்கையும் குறிக்கின்றதாம். பாம்பு "தான்" எனும் அகம்பாவத்தை குறிக்கின்றதாம். "தான்" எனும் அகம்பாவத்தின் காரணம் "அறியாமை" என்பதே. அகம்பாவத்தை அடக்கி வெற்றி கொண்டு உண்மையைத் தேடி போக வேண்டும். இந்த தத்துவத்தையே பாம்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் அலகால் கவ்விக் கொண்டுள்ள மயில் உருவம் எடுத்துக்காட்டுகிறது. தீய எண்ணங்களையும் இயலாமையையும் அழித்து விடுவது வேல் என்பதினால் இது விவேகத்தை குறிக்கிறது. விடாமுயற்சி மற்றும் தூய்மையான அன்பு என்பவற்றை எடுத்துக்காட்டும் விதமாக வள்ளி அம்மையார் காட்சி தருவதாகவும், இறவாமை, சக்தி மற்றும் செயற்திறனை வெளிப்படுத்துபவராக தெய்வயானை அம்மையார் காட்சி தருவதாகவும் கருதப்படுகின்றது. எவ்வாறாயினும் இம்மூன்று சக்திகளும் ஒன்றினைந்து அகம்பாவத்தை அழிக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை.

எனவே வருடா வருடம் வைகாசி பௌர்ணமி நன்நாளிலும் முருகப்பெருமானை தியானித்து அவர் அதர்மங்களை அழிக்க வல்லவர் என்ற நம்பிக்கையோடு அவர் நல்லருளைப் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக.

"ஓம் சரவணபவ"

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜர் தத்துவம்

வி.ஆரபி,
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

இந்துக்களின் மும்மூர்த்திகளில் ஒருவராகவும் சைவர்களின் முழுமுதற்கடவுளாகவும் விளங்குபவர் சிவபெருமான். சிவனின் திருக்கோலங்களில் ஒன்றே நடராஜப்பெருமான். நடனக்கலைக்கு நாயகனாகத் திகழ்வதாலேயே சிவன் நடராஜர், நடேசன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். எம்பெருமான் ஈஸ்வரன் ஆடிய 108 தாண்டவத்திலே பிரபஞ்சத்தின் இயக்கத்தை விளக்கும் தாண்டவமாக பஞ்சகிருத்திய தாண்டவம் விளங்குகிறது. இத்தாண்டவத்தை ஈஸ்வரன் பூலோககைலாயம் என்றழைக்கப்படும் சிதம்பரத்தில் ஆடியதால் சிவனுக்கு அம்பலத்தரசன் எனும் பெயரும் உண்டு.

நடராஜர் திருக்கோலம் உணர்த்தும் தத்துவமானது பிரபஞ்சத்தின் அனைத்து இயக்கங்களும் அவரது தாண்டவம் மூலமே வியாபித்திருக்கிறது என்பதாகும். அத்துடன் இத்தாண்டவத்தின் நோக்கமானது எண்ணற்ற உயிர்களை மாயை எனும் தளையிலிருந்து விடுவிப்பதேயாகும்.

ஆனந்ததாண்டவம் ஆடும் சிற்சபேசனைச் சுற்றிக் காணப்படும் தீச்சுவாலைகள் கொண்ட திருவாசியானது ஞானவெளியைக் குறிக்கின்றது. அதில் காணப்படும் ஒவ்வொரு தீச்சுவாலையிலும் மூன்று சிறிய சுவாலைகள் காணப்படுகின்றன. அச்சிறிய சுவாலைகள் குறிப்பதவாது காலத்தின் தொடக்கம்,நடப்பு மற்றும் முடிவு என்பவற்றை ஆகும். தாண்டவம் ஆடினாலும் சிவனின் சாந்த சொரூபமான முகமானது எல்லையற்ற அழகும் தண்ணளித்திறனும் கொண்ட தலைமைப்பாட்டினைக் குறிக்கிறது. எம்பெருமானின் வலது காதில் காணப்படும் பாம்பு வடிவ வளையமும் இடது காதில் கனிவாய் குழையும் தோடு ஈசன் உமை ஒரு பாகன் என்பதையும் எடுத்தியம்புகிறது. மேலும் நெற்றிக்கண்ணானது இறைவன் முக்காலத்தையும் கடந்த ஞான வடிவானவன் என்பதை உணர்த்துகிறது. ஜடாமுடியில் காணப்படும் ஐந்தாம் பிறைச்சந்திரனான இறைவன் அழிவிற்கும் மட்டுமல்ல ஆக்கத்திற்கும் கர்த்தா என்பதையும் கங்கையானது வற்றா அருளுடையோன் என்பதையும் கூறுகிறது. ஈசன் தாண்டவமாடும் தளமாகக் காணப்படும் இரட்டைத் தாமரையானது மஹாம்புயபீடம் என்றழைக்கப்படும். இதிலிருந்துதான் அண்ட சராசரம் விரிவடைகின்றது.

பஞ்சகிருத்திய தாண்டவத்தில் சிவனின் அபிநயத் தோற்றமானது ஐந்தொழில்களையும் குறிக்கிறது. அதாவது உடுக்கை ஏந்திய கரமானது படைத்தலையும் (சிருஷ்டி) அபய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமானது காத்தலையும்(ஸ்திதி) தீச்சுடர் ஏந்திய கரமானது அழித்தலையும்(சம்ஹாரம்) தூக்கிய திருவடியானது அருளல்(அனுக்கிரகம்) ஆகிய முத்தி நிலையையும் முயலகன் ஊன்றிய திருவடியானது மறைத்தலையும்(திரோபாவம்) குறிப்பதோடு முயலகன் எனும் அசுரன் ஆணவமலத்தையும் குறிக்கின்றது.மேலும் பஞ்சாட்சஷர மந்திரமான "நமசிவாய" மந்திரத்தின் ஒவ்வொரு அட்சரங்களையும் இத்தாண்டவத்தின் ஒவ்வொரு அங்கங்கள் குறித்து நிற்கின்றன. அக்னி ஏந்திய கை "ந" வையும் ஊன்றிய திருவடி "ம" வையும் உடுக்கை ஏந்திய கை "சி யையும் தீச்சுடர் ஏந்திய கை "வா" வையும் அபயகரம் "ய" வையும் குறிக்கின்றன.

பிரபஞ்ச இயக்கவியல் தத்தவத்தில் நோக்குவோமானால் திருவாசியானது பிரபஞ்சத்தையும் தீச்சுடர்கள் அக்னி வெளியையும் உருவகிக்கின்றது. ஒட்டு மொத்த பிரபஞ்சத்தின் இயக்கமானது திருவாசிக்குள் அடங்கியுள்ளதாக கருதப்படுகிறது. அதாவது பிரபஞ்சமானது பஞ்சபூதங்களான நீர்,நிலம்,காற்று,நெருப்பு, மற்றும் ஆகாயத்தால் ஆனது. அதனை இத்திருவுருத்தில் காணப்படும் கங்கையானது நீரையும், மஹாம்புயபீடமான தளம் நிலத்தையும், அசைந்தாடும் சடை காற்றையும், கையில் ஏந்தியவண்ணம் இருக்கும் தீச்சுடர் நெருப்பையும் மற்றும் பின் பெருவெளியானது ஆகாயத்தையும் குறிக்கிறது.

சக்தியைப்பற்றி கருதினோமானால் சிவனின் சரிபாதி சக்தியாகிறது. பௌதீக இயக்கவியலில் பொறிமுறை சக்தியானது இயக்கசக்தி,அழுத்தசக்தி என இருவகைப்படுகிறது. சிவனின் தூக்கிய திருவடி இயக்கசக்தியையும், ஊன்றிய திருவடி அழுத்தசக்தியையும் குறிக்கிறது.கங்கை குறிக்கும் நீர்,அசையும் சடை குறிக்கும் காற்று, தீச்சுடர் குறிக்கும் நெருப்பு,என்பன பண்டைய காலத்தில் பயன்பட்ட இயற்கையின் மூன்று சக்திமுதல்களாகும். இப்பெரும் சிறப்புப்பெற்ற எம்பெருமானின் திருக்கோலத்தையே திருநாவுக்கரசு நாயனார் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும்" எனும் பதிகத்தில் மெய்யுருகப் பாடியுள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து கைலாயம் திருக்கேதீச்சரம்

தி.கேதீஸ்வரன்
மூன்றாம் வருடம்
இணைந்த சுகாதார விஞ்ஞான கற்கைகள் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஈழத்து சிவாலயங்களின் தலைமைத் தலமான திருக்கேதீஸ்வர திருத்தலம் வரலாற்று சிறப்புடையதாகவும் நாயன்மார்களால் பாடல்பெற்ற பெருமைக்குரியதாகவும் திகழ்ந்து மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களுடன் விளங்கிக்கொண்டிருக்கின்றது.ஈழ நாட்டின் வடபால் உள்ள மன்னாருக்கு அண்மையில் மன்னார்த் தீவினை பெருநிலப்பரப்புடன் இணைக்கும் பாலத்தின் மார்க்கமாக மன்னாரில் இருந்து தென்திசையாக சுமார் ஆறரை மைல் தூரத்திலும் வடமேல் கடலோரத்திலிருந்து சுமார் அரை மைல் தூரத்திற்கப்பாலும் இத்தலம் அமைந்துள்ளது.

ஆதியில் கேதுவினால் பூசிக்கபெற்ற சிவத்தலம் ஆகையால் திருக்கேதீச்சரம் என்ற சிறப்புப்பெயரை இத்தலம் பெற்றது. பின்னாளில் இத்திருக்கேதீஸ்வர மூர்த்தியை மகாதுவட்டா எனும் தேவதச்சன் பூசித்து திருப்பணி புரிந்ததனால் திருக்கேதீஸ்வரம் மகாதுவட்டபுரம் எனவும் பெயர் பெறலாயிற்று என்று கந்தபுராணம், தட்சிணகைலாய மான்மியம் முதலிய நூல்கள் கூறுகின்றன. மகாதுவட்டபுரமே பின்னாளில் மாதோட்டம் என விளங்கலாயிற்று என்பர். இச்சிவத்தலம் திருக்கோணேஸ்வரத்திற்கும் வெகு காலத்தால் முற்பட்டது. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலநாயனார் திருமந்திரத்தில் ஈழத்தை சிவபூமி எனக் குறிப்பிட்டு இருப்பதால் அக்காலத்திற்கும் முன்னரே இத்திருத்தலம் சிறப்புற்று இருந்திருத்தல் வேண்டும்.

அகழ்வாராய்ச்சியின் போது கிடைக்கப்பெற்ற மகாலிங்கத்தையும் நந்திச்சிலையையும் நோக்குமிடத்து அவற்றின் பெரிய தோற்றத்தைக்கொண்டு அன்றைய ஆலயத்தின் தோற்றம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய ஆலயங்களைப் போல இருந்திருக்க வேண்டுமென கருத இடமுண்டு. அத்துடன் சோழ மன்னர்கள் ஆதரவையும் அவர்கள் காலத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பட்ட பெருமையையும் இத்தலம் கொண்டிருப்பதால் நாம் ஊகிப்பதைவிட இத்தலத்தின் அமைப்பும் தோற்றமும் சிறப்புற்று இருந்திருத்தல் வேண்டும்.

முதலாம் இராஜராஜசோழனின் மகனான இராஜேந்திரசோழன் கி.பி 1028 ம் ஆண்டில் ஈழத்தை கைப்பற்றி ஆட்சி செய்த போது, திருக்கேதீச்சர ஆலயம் இராசராசேச்சுவரம் எனவும் பெயர் பெறலாயிற்று. இராஜேந்திரசோழன் ஆட்சியில் மாதோட்ட இராசராசபுரம் சுமார் பத்துச் சதுர மைல் பரப்புடையதாக இருந்தது என்று கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. அப்போது திருக்கேதீச்சர ஆலயத்தைச் சுற்றிப் பாதுகாப்பின் பொருட்டு நன்னீர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்நீர்கொண்ட இரண்டு அகழிகள் அமைந்திருந்தன என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

பௌத்த இலக்கியங்களை நோக்குமிடத்து, கி.மு 3ஆம் நூற்றாண்டிலிருந்தே மாதோட்டம், மகாதீர்த்தம் ஆகிய பெயர்களால் அழைக்கப்பப்பெற்றதாகத் தெரிகிறது. மகாதீர்த்தம் என்பது மிகப்புனிதம் வாய்ந்த ஒரு புண்ணிய ஷேத்திரம் என்று பொருள்படும். கதிர்காமக் கல்வெட்டு ஒன்றில் பௌத்தமடாலய பரிபாலனத்திற்குரிய சில விதிகளைக் குறிப்பிட்டு அவற்றை மீறி நடப்பவன் "மாதோட்டத்தில் பசுவைக்கொன்ற பாவத்தை அடைவானாக" எனக் கூறப்பட்டுள்ளது.

**மாதோட்டத் துறைமுகம்**

கி.மு 6ம் நூற்றாண்டில் கலிங்க நாட்டு அரசகுமாரனான விஜயன் என்பவன் தன் நண்பர்களுடன் இம் மாதோட்ட துறைமுகத்தினூடாகவே இலங்கையை அடைந்தானென்றும் அப்போது இத்துறைமுகம் மகாதித்தா எனப்பெயர் பெற்று விளங்கியது என்றும் மகாவம்சம் கூறுகின்றது. பாளி மொழியில் தித்தா என்பது துறைமுகம் ஆதலால் மகாதித்தா என்றால் பெரிய துறைமுகம் அல்லது பெருந்துறை என்று பொருள்படும். ஆகவே மாதோட்டநகர் மிகப்பெரிய துறைமுகமாகவும் கடல் வாணிபத்தளமாகவும் திகழ்ந்தது என்பது தெளிவாகின்றது. இதனை "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்", "வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்" என்ற சுந்தரர் தேவார வரிகள் எடுத்தியம்புகின்றன.

மாதோட்ட துறைமுகத்தில் கடல் வாணிபத்தின் போது பலவகையான பொருட்களை பெருந்தொகையாகக் கையாண்டதால் மகாசந்தை என்பது மாசந்தை எனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும். பின்னர் மாசந்தை என்பது மாந்தை என மருவியிருக்கக்கூடும். அக்கால தமிழ் வரலாற்று இலக்கியங்களில் கூட இப்பெயர்கள் பிரதிபலித்துள்ளமை இத்தலத்தின் புராதன சிறப்பிற்கு சான்றாக உள்ளது.

"நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை கொணர்ந்த பாடுயர் நன்னகர்"
(அகநானூறு)

"புன்னகச் சோலை புனற்றெங்கு சூழ் மாந்தை"
(முத்தொள்ளாயிரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு 3 ஆம் நூற்றாண்டின் முன்னரே மாதோட்டக் கடற்கரையில் பண்டமாற்று வியாபாரம் நடைபெற்றுவந்தது. கி.பி. 5ம் ஆம் நூற்றாண்டு வரை மாதோட்டம் உலகப் பிரச்சிபெற்ற வர்த்தகத் துறைமுகமாக விளங்கிற்று. அப்போது உரோமானியர், எகிப்தியர்,கிரேக்கர், சீனர், அரேபியர் முதலியோர் அங்குவந்து பண்டமாற்று வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

அக்காலத்தில் அரேபியக் கடல் வழியாகக் கப்பற் போக்குவரத்து இடம்பெற்றது. இம்மார்க்கத்தின் வழியாகவரும் கப்பல்களுக்குத் தென்மேற்குப் பருவக்காற்றால் பாதிப்பேதும் ஏற்படாமல் மாந்தைத் துறைமுகம் பாதுகாப்பளித்தது. இத்துறைமுகம், இராமரணையின் பவளக்கற்பாறைக்கும் மன்னார்த் தீவுக்கும் தெற்கே சில கல் தொலைவில் அமைந்திருந்தது. அதனால் தென்மேற்கு பருவக்காற்றின் கொடுமையிலிருந்து தப்புவதற்குக் கப்பல்கள் இத்துறைமுகத்தில் தஞ்சம் புகுந்தன.

மன்னார்த் தீவுக்கும் இலங்கைக் கரைக்கும் இடையில் ஆழமும் அகலமும் உடையதாய் சிறப்புடன் விளங்கிய கடலை சார்ந்திருந்த மாந்தைத் துறைமுகம் சரித்திரச் சுழற்சிக்கும், இயற்கையின் சீற்றத்திற்கும் ஆட்பட்டு இன்று மணற்குன்றுகளும் மணற்றிட்டுகளும் நிறைந்த ஓர் வெற்றிடமாய்க் காட்சி அளிக்கிறது.

மேலும் அரேபியர், மாதோட்டத்தில் வந்து இறங்கிப் பல மாதங்கள் தங்கி இருந்து வாணிபம் செய்து சென்றனர். அவர்கள் தங்கள் ஒட்டகங்களுக்கு உணவாக இடும் பொருட்டு பெருக்கு (Baob) என்ற மரத்தை இக்கடற்கரைகளில் மிகையாக வளர்த்தனர். இவ்வகை மரங்கள் இன்றும் மன்னார் பகுதியில் காணப்படுகின்ற போதும் அவை இலங்கையில் வேறு எந்தப் பகுதியிலும் காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**கடல் வாணிபம் குறையக்காரணம்**

கி.பி 6 ஆம் நூற்றாண்டு முதல் மாதோட்டக் கடல் வாணிபம் நாணயமாற்று நேர்ந்ததால் சற்றுக் குறைவடைந்து வரலாயிற்று. ஆனாலும் பண்டமாற்றும், நாணயமாற்றும் கி.பி 12 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெற்றே வந்தன. இக்காலப்பகுதியிலேயே திருக்கேதீச்சரம் என்னும் ஆலயத்தின் அருகில் திருவிராமீஸ்வரம் என்ற பெயருடைய ஒரு பெரிய ஆலயம் இருந்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இது குறித்த புதைபொருள் அகழ்வாராய்ச்சிகள் இன்னும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

கி.பி 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கடல் வாணிபம் அறவே இல்லாமல் போயிற்று. ஆனால் பல யாத்திரீகர்கள் மாதோட்டக்கேதீச்சரம் வருவதும் செல்வதுமாக இருந்தனர் என வரலாறு கூறுகிறது. மாதோட்டத்தில் கடல் வாணிபம் குறையக் குறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரமும் குறையலாயிற்று. இதனால் பலர் மாதோட்ட நகரைவிட்டு வெளியேறினர் என்பர். கப்பல் துறைமுகமும் மண் மேடிட்டு வரலாயிற்று. இதனால் கப்பல்கள் வந்துபோக வசதிகள் குறைந்தன.

**மாதோட்டக் கேதீச்சரம் மண்மூடல்**

கி.பி 1545 இல் திடீரென்று கடல் பொங்கி வந்து மாதோட்டத்தின் சில பகுதிகளை மூடியது. ஆனாலும் திருக்கேதீச்சர ஆலயத்தில் மட்டும் கி.பி 1585 வரை நித்திய பூசைகளுடன் இடையூறு இன்றி இடம்பெற்று வந்தன.கி.பி 1585 இல் திடீரென மதவெறியர்களான போர்த்துக்கேயர் திருக்கேதீச்சர ஆலயத்துள் நுழைந்து பொன்னாபரணம் முதலிய பல பெறுமதி வாய்ந்த பொருட்களைக் கொள்ளை கொண்டு, சிலைகளையும், விக்கிரகங்களையும் உடைத்துத் திருக்கோயில், மதில், கோபுரம் முதலியவற்றைப் பீரங்கியினால் தாக்கி நாசம் செய்தனர். மேலும் உடைத்த கோயிற் கருங்கற்களை எடுத்துச் சென்று மன்னார் பகுதியில் கோட்டை ஒன்றையும் கட்டிக்கொண்டனர். சில ஆண்டுகளுக்கெல்லாம் திருக்கேதீச்சரப் பகுதிகளில் மண்மாரி பெய்து மண்ணும் மூடியது, பின்னர் அங்கு காடாயிற்று.

போர்த்துக்கேயர் திருக்கேதீச்சரக் கோயிலுள் நுழைந்து கொள்ளையிட வருகின்றார்கள் என்ற செய்தியினைக் கோயிலார் சிலர் இரகசியமாக அறிந்து உடனே சில முக்கிய பொருட்களையும் சௌந்தரியமான கௌரியம்மன் சிலையினையும் பெயர்த்து எடுத்துக்கொண்டு ஊரைவிட்டு இரவோடிரவாக வெளியேறிச் சென்றதாகவும் அவர்கள் அநுராதபுரம் செல்லும் வழியில் இடையே "மடுமாதா கோயில்" என்ற எல்லையினைத் தாண்டிப்போகும் அடர்ந்த காட்டுவழியில் ஓரிடத்தில் ஒரு சிறு கிராமத்தில் சிறுகோயில் ஒன்றை சாமான்யமாக அமைத்து அதில் கௌரியம்மனைத் தாபித்து வழிபட்டனர் என்றும் பின்னர் அவ்வாலயமும் பகைவர்களால் அழிக்கப்பட்டதாகவும் ஒரு கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது.

மாதோட்டக்கேதீச்சரம் கடல்கொண்டு, பகைவரால் அழிவுற்று, மண்மாரி பெய்து எங்கும் மண் மூடியதைத் தொடர்ந்து கி.பி.1926 ஆம் ஆண்டிலும், கி.பி.1949 ஆம் ஆண்டிலும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் பூமியைப் ஆராய்ந்த போது சிற்சில இடங்களில் சிப்பிகள், சங்குகள், வளையல்கள், மட்பாண்டங்கள், பளிங்குப் பாண்டங்கள்,சிறுவர் விளையாடும் சிறுதேர்கள், பொம்மைகள், மனித எலும்புக்கூடுகள் முதலியன மண்ணுள் புதைந்து கிடந்ததைக் கண்டுபிடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இருள் செறிந்த காலம்

மாதோட்டத் திருக்கேதீச்சரம் கி.பி 16 ஆம் நூற்றாண்டிற்கு இடையே அழிவு கொண்டதிலிருந்து கி.பி 19 ஆம் நூற்றாண்டு இடைவரை சுமார் முன்னூறு ஆண்டுகள் அதன் திருப்பெயரையே இலங்கைச் சைவமக்களும் பிறமக்களும் கேளாது வாழ்ந்திருந்த காலத்தை இருள் செறிந்த காலம் என்றே சொல்லலாம்.

### நாவலர் பெருமான் நற்றொண்டு

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள் கி.பி 1872 ஆம் ஆண்டு இலங்கை மாதோட்டத்தின் ஒரு பகுதியில் "மறைந்து ஒரு மருந்து இருக்கிறது, ஒரு தேன் பொந்து இருக்கிறது, ஒரு திரவியம் இருக்கிறது" என்று திருக்கேதீச்சரத் திருத்தலத்தில் எழுந்தருளிய திருக்கேதீச்சரநாதனை இலங்கைச் சைவ மக்களுக்கு முதன்முதலாக நினைவூட்டிப் பிரசாரம் செய்து அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். இவ்வாறு திருக்கேதீச்சரத் தலத்து நினைவை மக்களுக்கு அறிவித்த பெருமை சைவம் தழைத்தோங்கத் தோன்றிய நாவலர்பெருமான் அவர்களுக்கே உரியதாகும்.

திருக்கேதீச்சரத் திருக்கோயில் மண்மூடி மேடிட்டு அழிந்து கிடந்த நிலப்பகுதி சுமார் நாற்பது ஏக்கர் வெற்று நிலத்தை விலைக்கு வாங்கிப் புதுக்கோயில் எடுப்பித்து பழையபடி நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற நாவலர் பெருமான் பெருமுயற்சி எடுத்தார். அக்காலத்திலிருந்த சைவமக்களின் உணர்ச்சிக் குறைவினாலும் தக்க உதவி கிடைக்காததினாலும் நாவலர் பெருமான் மிக வருந்தினார், பின்னர், சில ஆண்டுகளுக்கெல்லாம் நாவலர் பெருமான் திருக்கேதீச்சரநாதன் திருக்கோயில் நினைவாகவே இருந்து இறைவன் திருவடிநிழலை அடைந்தார்.

### நாவலர் பெருமான் கனவுவெற்றிபெறல்

மாதோட்டத் திருக்கேதீச்சரநாதர் ஆலயம் கடலால், பகைவரால், அழிந்து மண்மாரி பெய்து மண்மூடிய வெற்றிடம் சுமார் 40 ஏக்கர் நிலத்தை நாவலர் பெருமானின் அறிக்கை வெளிவந்தபின் 21 வருடங்கள் கழித்து, கி.பி.1893 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி இலங்கை வடமாகாண அரசபிரதிநிதி சேர். வில்லியம் துவைனம் (Sir William Twynam) துரை அவர்களின் முன்னிலையில் யாழ்ப்பாணம் அரசாங்கக் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பதாக அரசினர் விளம்பரம் செய்தனர்.

அச்சமயம் குறித்த காலத்தில் இலங்கையின் பல பாகத்திலுள்ள சைவர்கள் பலரும், கத்தோலிக்கக் குருமார்களும், பிறரும் நிலத்தை ஏலம் எடுக்க யாழ்பாணக் கச்சேரியில் வந்து கூடி இருந்தனர். சேர்.உவில்லியம் துவைனம் துரை அவர்கள் மேற்படி 40 ஏக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தை ஏலம்விட, கத்தோலிக்கக் குருமார்கள் 3050 ரூபாய்வரை ஏலம் கேட்டனர், உடனே சைவமக்கள் அனைவரும் ஒன்றுகூடி என்ன விலை வந்தாலும் அந்நிலத்தை விலைக்கு வாங்கியே தீருவது என்று உறுதி பூண்டனர். அதனை அறிந்த திருவாளர் ராம.அரு.பழனியப்பச்செட்டியார் அவர்கள் இலங்கைச் சைவமக்கள் சார்பாகத் தம்பேரில் 3100 ரூபாய்க்கு விஜய ஆண்டு கார்த்திகை மாதம் 29ஆம் திகதி (13-12-1893) புதன்கிழமை அவிட்டநன்னாளில் ஏலம் எடுத்தார்கள். இத்தொகையில் பெரும்பகுதியை யாழ்ப்பாண சைவமக்களே மேற்படி செட்டியார் அவர்களிடம் கொடுத்து உதவினர் என்பர்.

யாழ்பாண அரச பிரதிநிதி தமது மாகாண நிர்வாக ஆண்டறிக்கையில் திருக்கேதீச்சரத்தின் பண்டைய சிறப்புக்களைப் பற்றியும், நிலம் ஏலம் விடப்பெற்றதைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ஆகவே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களின் கனவு அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து 14 ஆண்டுகளுக்குப் பின் நனவாயிற்று.

**திருக்கேதீச்சரம் புனருத்தாரன வேலை**

சைவத்தொண்டுகளில் முன்னிலையில் நின்றுழைத்தவரும், சைவசீலருமான யாழ்பாணம் வண்ணார்பண்ணை சி.த.மு.பசுபதிச்செட்டியார் அவர்கள் யாழ்பாணத்திலிருந்து சிவாச்சாரியார்களையும், கல்தச்சர், சிற்பிகளையும், கொத்துவேலைசெய்யும் மேஸ்திரிகளையும், மண்வெட்டு வேலையாட்களையும், சிறுகூலியாட்களையும் அழைத்துக்கொண்டு போய் திருக்கேதீச்சரத்தில் புராதன கோயில் இருந்த திட்டமாக அறிந்து தரைமட்டமான கோயிலிருந்த இடத்தில் வாஸ்துசாந்தி, கிராமசாந்தி செய்து 1849 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல்காடுவெட்டி மேற்படி நிலத்தைச் சோதனை செய்து வரும்போது, ஜய ஆண்டு ஆனித் திங்கள் 1 ஆம் நாள் (13-06-1894) புதன்கிழையன்று பழைய கோயிலின் மூலப்பகுதி(கர்ப்பக்கிரகம்), அர்த்தமண்டபம், பலிபீடம் முதலியன கண்டுபிடிக்கப்பட்டன. அப்போது கோயில் நிலத்தில் அமைந்திருந்த சோழர் காலக் கிணறு ஒன்றைக் கண்டு பிடித்தனர். அத்துடன் சிவலிங்கம், நந்தி, விநாயகர் கற்சிலைகளும் சிவபூஜா பாத்திரங்களும் கிடைத்தன. ஆனால் அம்மன் சிலை ஒன்றும் கிடைக்கவில்லை சிவலிங்கம் பூமியிலிருந்து எடுக்கும்போது, வேலையாட்களுடைய கவனக்குறைவால் லிங்கம் ஓரிடத்தில் சிறிது பழுதடைய நேரிட்டது.

பின்னர் திரு. சி.த.மு.பசுபதிச்செட்டியார் அவர்கள் தமது பெருமுயற்சியினாலும் இலங்கைச் சைவ நன்மக்கள் பேருதவியினாலும் திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில் திருப்பணிக்கு 22,000 ரூபாய்க்கு மேல் சேகரித்தார். அதைக்கொண்டு செட்டியார் அவர்கள் முதலில் சுவாமிகோயில், அம்மன்கோயில், மடைப்பள்ளி முதலியவற்றை கட்டினார். ஈழத்துச் சைவப் பெருமக்களின் விருப்பத்திற்கு இணங்க காசி(வாரணாசி)யில் இருந்து மகிமை பொருந்திய சிவசாந்நித்தியம் வாய்ந்த சிவலிங்கம் ஒன்று கொண்டுவரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். தக்க சிற்பியால் கௌரியம்மையார் திருவுருவம் ஒன்று கற்சிலையில் அமைக்கச் செய்தார். முன்னர் மூலஸ்தானம் இருந்த இடத்திலேயே காசி லிங்கத்தையும், இடப்பக்கம் தெற்கு சந்நிதியாக அம்மனையும் எதிரில் மேற்குமுகமாக முன்னிருந்த இடத்திலே பூமியில் இருந்து எடுக்கப்பெற்ற நந்தியையும், பூமியிலிருந்து கிடைத்த சிவலிங்கம் (மகாலிங்கம்), விநாயார் இவற்றைப் பிரகாரத்தின் மேற்றிசையிலும் அமைத்துச் சோபகிருது ஆண்டு ஆனித் திங்கள் 14 ஆம் நாள் (28-06-1903) ஞாயிற்றுக்கிழமை வளர்பிறைச் சதுர்த்தசி நன்னாளில் மகா கும்பாபிஷேகம் செய்துவைத்தார்.

பின்னர் சிவாகம முறைப்படி சிவாச்சாரியர்களைக் கொண்டு நித்தியபூசை முதலியன நடைபெற ஆவன செய்தார். தொடர்ந்து சில திருப்பணிகளைச் செய்துமுடித்து கி.பி.1910 இல் ஒரு கும்பாபிஷேகமும் செய்துமுடிந்தார். தேவாரத் திருமுறைகளில் மறைந்து கிடந்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானால் வெளிக்கொணரப்பெற்ற, விலைமதிக்க முடியாத பெரும் புதையலென அகப்பட்ட "திருக்கேதீச்சரம்" என்னும் சிவஸ்தலம் மிகப் பெரிய ஆலயமாய் உருப்பெறுதல் வேண்டும் என முதலில் எண்ணியவர் யாழ்பாணத்து சிவச்செம்மல் பசுபதிச்செட்டியார் அவர்களே என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அதன்பிறகு திருக்கேதீச்சரம் மிகப் பிரபலமான திருத்தலமாக விளங்கியது. பல ஆண்டுகள் கழிந்தன. திருக்கோயில் காலப்போக்கில் திருப்பணி எதுவுமின்றிச் சிதைந்து வரலாயிற்று. அதனைக்கண்ட சைவப் பிரமுகர்கள் பலர் கொழும்பில் கூடி 1948 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19 ஆம் திகதி ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் என்று முன்னர் உருவாக்கப்பட்ட சமய அமைப்பு ஒன்றின் அனுசரணையுடன் திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரன சபையை நிறுவினர். அதைத்தொடர்ந்து ஆலய புனருத்தாரனம் இடம்பெற்று கி.பி 1952 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது.

அதன் பின்னர் மிக நீண்ட காலத்திற்கு ஆலயத்தில் எவ்வித இடையூறுகளுமின்றி நித்திய பூசைகள் கிரமமாக இடம்பெற்றன. இக்காலப்பகுதியில் ஆலயச் சுற்றாடலில் ஏராளமான கோவில் பணியாளர்களும் ஏனைய அடியார்களும் வாழ்ந்து வந்தனர் அப்போது ஆலயத்தை மையமாகக் கொண்ட கிராமப்பகுதியும் திருக்கேதீச்சரம் என்றே அழைக்கப்பட்டது. இக்காலப்பகுதியிலேயே திருக்கேதீச்சர கிராமசேவையாளர் பிரிவும் உருவாக்கப்பட்டது. இக் கிராம சேவையாளர் பிரிவு மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டதாக இயங்கிக்கொண்டிருக்கின்றது.

இக்காலப்பகுதியில் ஆலயச்சுற்றாடலில் ஏராளமான மடங்கள் இயங்கிக்கொண்டிருந்தன. அவை திருக்கேதீச்சர நாதரை வழிபட வரும் அன்பர்களுக்கு உணவும் உறைவிடமும் நல்கி அருளின. இம்மடங்களில் சிவராத்திரி மடம் மிக முக்கியமானது. இது மன்னார் வாழ் சைவ அரசாங்க உத்தியோகத்தர்களால் பரிபாலிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இக்காலப்பகுதியில் ஆலயச்சுற்றாடல் சமூகரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மிக வேகமாக வளர்ச்சியடையலாயிற்று ஆலய சுற்றாடலில் வாழ்ந்த மக்களின் நலன் கருதி பாடசாலை, மருத்துவமனை, கிராமியவங்கி முதலியன அமைக்கப்பட்டன. மக்களுக்கு முறையான குடிநீர் மின்சார வசதிகள் வழங்கப்பட்டன. இவ்வாறாக திருக்கேதீச்சர சுற்றாடலை ஒரு முழுமையான நகரமாக்குவதற்குரிய முயற்சிகள் பெருமளவில் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் 1990 ஆம் ஆண்டளவில் நாட்டில் இனப்பிரச்சனை உக்கிரமடைந்த காலத்தில் திருக்கேதீச்சர சுற்றாடலில் வாழ்ந்த மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட மீண்டுமொரு இருண்ட காலம் ஆரம்பமானது. இக்காலப்பகுதியில் ஆலயம் போதிய பராமரிப்பின்றி பாழ்படலாயிற்று. இக்காலப்பகுதியில் மன்னார் சைவ அரசாங்க உத்தியோகத்தர்களின் பெருமுயற்சியால் ஆலயத்தில் அவ்வப்போது சிரமதானப் பணிகளும் சில விசேட பூஜைகளும் இடம்பெற்றன.

பின்னர் 2000 ஆம் ஆண்டு இப்பகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதை தொடர்ந்து ஆலய புனருத்தாரன வேலைகள் இடம்பெற்று 2003 ஆம் ஆண்டில் (06.07.2003) மகா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. இம் மீள்குடியேற்ற புனருத்தாரன வேலைகளில் மன்னார் மாவட்ட இந்து அரசாங்க உத்தியோகத்தர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இதன் பின்னர் இன்றுவரை திருக்கேதீச்சர ஆலயத்தில் நித்திய பூஜைகளும் வருடாந்த உற்சவங்களும் சிறப்பாக எவ்வித தடைகளும் இன்றி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் ஆலயத்திற்கு புதிதாக இராஜகோபுரம் அமைக்கும் பணிகளும் ஆரம்பமாகவுள்ளன. இதற்கான செலவை முழுமையாக இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

**திருக்கோயில் அமைப்பு**

திருக்கேதீச்சரமானது, திருக்கேதாரம், காசி, காஞ்சி, திருவண்ணாமலை, சிதம்பரம், திருவாரூர் மற்றும் மதுரை போன்ற திருக்கோயில்களில் ஒன்று என்றும், அங்கே சிவபெருமான் சுயம்புலிங்க மூர்த்தியாக எழுந்தருளியுள்ளாரென்றும் நூல்கள் கூறுகின்றன. திருக்கோயில் கிழக்கு நோக்கிய ஐந்தடுக்கு நிலையினைக்கொண்ட இராசகோபுரத்தைக் கொண்டுள்ளது, கோபுரத்தின் இருபக்கங்களையும் ஒட்டித் தொடர்ந்து நான்கு பக்கமும் சுற்றிய திருமதில்கள் கருங்கல்லாலும் செங்கல்லாலும் செவ்வியமுறையில் அமைக்கப்பட்டுள்ளன.

சுவாமி சந்நிதி கிழக்கும், அம்பாள் சந்நிதி தெற்கும் நோக்கியுள்ளன. சுவாமி சந்நிதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசலில் இராசகோபுரம் மிளிர்கிறது. அம்பாள் சந்திதித் திருவாசலுக்கு எதிரேயுள்ள சாதாரண வாசலையொட்டி கோபுரம் அமைக்கப்பட்டிருக்கிறது. அம்பாள் கோபுரம் சிறந்த வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. அம்பாள் கோயில் திருப்பணியை நிறைவேற்றி வைத்த மலேசிய சைவத் தமிழ் அன்பர்களே இத்திருப்பணியையும் நிறைவேற்றி வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இராசகோபுர இடப்பக்கத்தில் பூசைக் காலங்களில் அடிக்கப்பெறும் பேரொலியுடன் கூடிய வெங்கலமணி உயரத் தூக்கிக் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் உட்புறத்தில் இராச கோபுரத்திற்கு இருமருங்கிலும் சூரிய சந்திரர்க்கு சந்நிதிகள் உள்ளன. நவக்கிரக மண்டபம், சண்டேசுவரர் கோயில் முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளன.

கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபங்களைச் சுற்றிச் செல்வது முதலாம் பிரகாரமாகவும், கோயிலுள் திருமதிலை ஒட்டிச் செல்வது இரண்டாம் பிரகாரமாகவும் உள்ளன, களஞ்சியம், மடைப்பள்ளி ஆகியன இரண்டாம் பிரகாரத்தில் உள்ளன. முதலாவது பிரகாரத்தின் தென்திசையில் பத்தி மண்டப வரிசையில் 72 நாயன்மார்கள், சேக்கிழார், சந்தானகுரவர் ஆகியோரைப் பிரதிஷ்டை செய்துள்ளனர். மேற்றிசைப் பிரகாரத்தில் விநாயகர், சோமஸ்கந்தர், மகாவிஷ்ணு, சுப்பிரமணியர் திருமூர்த்தங்கள் தனித்தனியே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளதையும், தென்பிரகாரத்தில் தென்முகமான வள்ளி, தெய்வானை சமேத ஆறுமுகர், ஸ்ரீ நடராசமூர்த்தி, ஆகிய மூர்த்தங்களையும், கீழ்த்திசை பிரகாரத்தில் கருவூல அறை, யாகசாலை, வைரவர் சந்நிதிகளையும், கண்டு தரிசிக்கலாம். சுவாமி சந்நிதிக்குக் கிழக்கே திருமண்டபத்தில் நேராகப் பலிபீடம், பூமியிலிருந்து எடுக்கப்பட்ட நந்தி ஆகியன உள்ளன.

கர்ப்பக்கிரகத்தில் உள்ள திருக்கேதீச்சரநாதர் தரிசனம் நித்திய ஆனந்தத்தை நல்கும், கர்ப்பக்கிரகக் கோயில் வெளிச்சுவரின் தென்திசையில் தட்சிணாமூர்த்தி, மேற்றிசையில் இலிங்கோற்பவர், வடதிசையில் துர்க்கா தேவி, கோமுகத்திற்குக் கீழ்பால் சண்டேசுவரர் மூர்த்திகளை வழிபடலாம். சுவாமி சந்நிதி, மகாமண்டபத்தின் கீழ்த்திசையில் வடப்பக்கம் தெற்குச் சந்நிதியாக ஸ்ரீ கௌரியம்மையார் எழுந்தருளியுள்ளார். இவை தவிர மகாமண்டபத்தில் விநாயகர், சுப்பிரமணியர், வேணுகோபாலர், இராஜராஜேஸ்வரி, பிரதோஷமூர்த்தி, சமயகுரவர், சண்டேசுவரர் உற்சவமூர்த்திகளாக உள்ளனர்.

ஏனைய சிவாலயங்களில் காணப்படாத ஒரு அர்ச்சனை நிகழ்ச்சியும் திருக்கேதீச்சரத்தில் மூலஸ்தான மூர்த்தியின் சந்நிதியில் தினந்தோறும் நிகழ்ந்து வருகிறது. காலை சந்தி பூசையின் பின்னர், திருக்கைலாயநாதரைப் போற்றுமுகமாக, திருநாவுக்கரச சுவாமிகளின் "போற்றித் திருத்தாண்டக" மந்திரங்கள் ஓதப்பெற்று, அர்ச்சனைகள் புரியப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூர்த்தியின் சிறப்புக்கள்**

இத்தலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள மூலஸ்தான சுயம்பு வடிவான சிவலிங்கப்பெருமானுக்கு ஈழக்கயிலாயநாதர் அல்லது தென்கயிலாயநாதர், கேதீச்சரநாதர், மகாதுவட்டாபுரநாதர், கௌரிநாதர் முதலிய பல திருநாமங்கள் வழங்குகின்றன. திருக்கையிலைச் சிகரங்களில் ஒன்று வாயுதேவனால் ஈழப்பகுதியில் வந்து வீழ்ந்ததனால் ஈழக் கயிலாயநாதர் அல்லது தென்கயிலாயநாதர் என்றும், நவக்கிரகங்களில் ஒன்றான கேதுபகவான் பூசித்த காரணத்தால் கேதீச்சரநாதர் என்றும், தேவ தச்சனாகிய மகாதுவட்டா பூசித்துத் திருப்பணி புரிந்த அமைத்த காரணத்தால் மகாதுவட்டாநாதர் என்றும் அன்னை இங்கு கௌரிஅம்மை என்ற பெயரை பெறுவதால் கௌரிநாதர் என்றும் இறைவனுக்கு பெயர்கள் ஏற்பட்டுள்ளன.

இராமேஸ்வரத்தையும் மன்னார் தீவுப் பகுதியையும் தொடர்புபடுத்தி நிற்கும் கடற்பாதை பண்டைய காலங்களில் "மத்யசேது" என்று அழைக்கப்பட்டது. அதன் காரணமாக, திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் திருநாமங்களில் ஒன்று "மத்ய சேது நிவாசர்"என வழங்குகின்றது. பண்டைக் காலத்தில் இவ் இறைவனை வழிபட்டோராகிய அகஸ்தியர் முதலிய பெரியோர் "மத்யசேது நிவாசய நம" என்ற மந்திரத்தையே கூடுதலாக பிரயோகித்திருக்கின்றனர்.

அன்றியும் இத்தலத்துப்பெருமானைச் சுந்தரர் தேவாரம் "மதயானையுரி போர்த்த மணவாளா" என்பதால் நித்திய மணவாளன் என்றும் ஆதியில் ஒருவகை நாகர் குலத்தார் பூசித்ததால் நாகநாதர் என்றும் அன்பர்களின் பிறவிப் பிணியை போக்கவல்ல மருந்தாக மாதோட்ட திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளிய காரணத்தினால் மாதோட்ட மருந்து என்றும் மாதோட்டம் திருப்பெருந்துறை ஆதலால் திருப்பெருந்துறையீசன் என்றும் திருக்கேதீச்சர நாதருக்கு திருப்பெயர்கள் உண்டாயிற்று.

இராஜேந்திரசோழன் கல்வெட்டு ஒன்றில் இராஜஇராஜேஸ்வரத்து மகாதேவர் என்றும் ஒரு பெயர் பெருமானுக்கு வழங்கப்படுகின்றது. ஆதியில் ஈழத்திலுள்ள திருக்கேதீச்சர பெருமான் திருக்கேதாரலிங்கம் போல சுயம்பு மூர்த்தியாவார், இவ்லிங்கத்தில் இறைவன் என்றும் பிரியாது சாந்நித்தியமாக எழுந்தருளி இருப்பார். "கேளல் வெண்மறுப்பு அணிந்த நீள் மார்பர் கேதீச்சரம் பிரியாரே" என்பது சம்பந்தர் தேவாரம்.

இக்கேதீச்சரநாதன் தம்மைவந்து வழிபடும் அன்பர்களின் முன்னைய கொடுவினைகளை போக்குவதுடன் அவர்கள் உடலிலுள்ள தீராத நோய்களையும் போக்கி ஆட்கொள்ளவல்லவர். "பாவம்வினை அறுப்பார் பயில் திருக்கேதீச்சரத்தானே" என்பதும் "அங்கத்துர நோய்கள் அடியார் மேல் ஒழித்தருளி" என்பதும் சுந்தரர் தேவாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலத்து இறைவனின் சாயரட்சை பூஜை அர்த்தயாம பூஜை ஆகியன மிக விசேடமாகும் அர்த்தயாம பூஜையின் போது திருமால், பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்கள் வந்து திருக்கேதீச்சர நாதரை தரிசித்து செல்வதாக ஐதீகம். இவ்விருகால பூசையின் தரிசனம் அசுவமேதயாக பயனைத்தரும் என்பர். இவ்வாலய உட்பிரகார மேற்றிசையில் எழுந்தருளியுள்ள புராதன மகாலிங்கத்திற்கு பாலாவி தீர்த்தம் கொண்டு வந்து அபிஷேகம் செய்பவர் பெரும்பயன் அடைவர்.

இங்கு அம்மையார் திருநாமம் கௌரிஅம்மையார் என்பதாகும். இவ்வம்மையார் சந்நிதி தரிசனம் மிகச்சிறப்பும் சக்தியும் வாய்ந்தது. எளிதில் அருள் கிடைப்பது பூர்வபுண்ணிய பலன் உள்ளவர்களுக்கே திருக்கேதீச்சர தலத்தில் ஷேத்திரவாசம் வாய்க்கிறது. அவர்கள் காலை, நன்பகல், மாலை ஆகிய மூவேளைகளிலும் பயபக்தி நிறைந்த உள்ளத்தோடு பெருமானைவழிபட்டு வருவாராயின் அவர்களது பாவங்கள் எல்லாம் நீங்கிவிடும். அவர்கள் பிறப்பில்லாத முக்திப்பெருவாழ்வை அடைவர்.

**தீர்த்த விசேடம்**

"பாலாவியின் கரைமேல் திடமாவுறைகின்றான் திருக்கேதீச்சரத்தானே" என்பது சுந்தரர் தேவாரமாகும். இத்திருக்கேதீச்சரத்தில் திகழும் புண்ணிய தீர்த்தம் பாலாவி தீர்த்தம் என்ற ஒன்றேயாகும். இதனை "மாதோட்டத்தர் மன்னு பாலாவியின் கரைமேல் கேதீச்சரம்" என்று சம்பந்தர் தேவாரம் கூறுவதால் பாலாவித் தீர்த்த மேன்மையை உணரக்கூடியதாய் உள்ளது.

இப்பாலாவித் தீரத்தம் மிக பழைமை வாய்ந்த சரித்திர பெருமையோடு கூடியது. இலங்கையின் வடமத்திய பகுதியில் பரந்த பள்ளத்தாக்குகளில் ஓடிய மல்வத்துஓயா பாலாவி என்ற பெயரோடு அக்காலத்தில் பேராறாய் வந்து மாதோட்டத்தில் கடலுடன் சங்கமித்ததென்றும் காலமாற்றத்தாலும் புதிதாக வெட்டப்பெற்ற கட்டுக்கரை பெருங்குளத்தாலும் அந்த பேராறு ஒடுங்கி திசைமாறிப் போனதென்றும் அவ்வாறு ஒடுங்கிப்போன ஆறே அருவியாறு என்ற பெயரோடு இன்று மன்னார் தீவிற்கு பலகல் தொலைவில் கடலுடன் சங்கமிக்கின்றது என்றும் இதனால் பாலாவித்தீர்த்தம் நீர் வரத்துக்குறைந்து சேறும் சுரியும் நிறைந்த பள்ளபூமியாக மாறியது என்றும் அந்தப்பள்ளபூமியை சரித்திர அடிப்படையிலும் பூகோள விஞ்ஞான அடிப்படையிலும் நிர்ணயித்து தற்கால பாலாவித் தீர்த்தம் வெட்டப்பட்தென்றும் திருக்கேதீச்சர தலத்தின் பழைய வரலாற்றை நன்கு அறிந்த பெரியோர் கூறுகின்றனர்.

இன்றைய பாலாவித்தீர்த்தம் திருக்கேதீச்சர ஆலயத்து அம்மன் சந்நிதிக்கு நேர் எதிரே தெற்கே சிறிது தூரத்தில் அமைந்துள்ளது. அது மிகநீண்டு அகன்று ஏரி போன்ற நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையினை உடையது பெரும்பாலும் வற்றாமல் தண்ணீர் நிறைந்து நிற்கும் ஜீவ தீர்த்தமாகும் இதனை "பலவினைக் குறும்புபோக்கும் பாலாவி" என்றும் "பரம்பரன் உருவாய் உற்றபாலாவி" என்றும் திருக்கேதீச்சர புராணம் புகழ்ந்து கூறுகின்றது.

இத்தலம் கி.பி 16ஆம் நூற்றாண்டின் இடையிலே சில பாகம் கடல்கொண்டும் சில பாகம் மண்மாரி பெய்தும் அழிந்த போது இங்குள்ள பாலாவி தீர்த்தம் தவிர மற்றைய பல சிவ தீர்த்தங்களும் அழிந்திருக்கக்கூடும் என்பர்.

இத்தகைய சிறப்புக்களையுடைய திருக்கேதீச்சர நாதரை தரிசித்து மனதார வழிபட்டு பிறப்பில்லா முக்திப் பெருவாழ்வும் அடைவோமாக.

விருது குன்றமா மேருவில் நாணரா
வா அனல் எரியம்பாய்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
உறைபதி எந்நாளும்
கருது கின்றஊர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை அடையாவே.

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹரே கிருஷ்ண இயக்கம் (ISKCON)

நா.வாமன்
உதவி விரிவுரையாளர்,
தமிழ்த் துறை (இந்துப் பண்பாடு),
பேராதனைப் பல்கலைக்கழகம்.

சர்வதேச ரீதியாக செயற்படும் இந்து சமய இயக்கங்களுள் அதி சக்தி வாய்ந்த இயக்கமாக விளங்குவது ஹரே கிருஷ்ண இயக்கமாகும். "கிருஷ்ண உணர்ச்சி பாவம் பற்றிய சர்வதேச சம்மேளனம்" (International Society for Krishna Consciousness) என்ற நிறுவன அமைப்பாக இது தொழிற்படுகின்றது. இதனை சுருக்கமாக ISKCON எனவும் அழைப்பர். இது பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் (1896-1977) என்பவரால் உருவாக்கப்பட்டது. வைஷ்ணவ சம்பிரதாயத்தில் உள்ள பிரிவுகள் பலவற்றிலே அதுவும் ஒன்று.

1961 ஆம் ஆண்டு நியூயோர்க் நகரிலே பிரபுபாதரால் இவ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. சிலர் அதனை ஒரு புதிய சமய இயக்கம் என்று வகைப்படுத்தினர். ஆயினும் அதன் அடிப்படைத் தத்துவங்கள் பகவத்கீதை, பாகவத புராணம் ஆகியவற்றை மூலமாகக் கொண்டவை. இந்த இயக்கத்தினுடைய கொள்கைகள் கௌடீய வைணவ மரபைப் பின்பற்றியனவாகும். பக்தியோகத்தை பரப்புவதற்கென்றே ISKCON உருவாக்கப்பட்டது. பக்தர்கள் தங்கள் எண்ணங்கள், செயற்பாடுகள் யாவற்றையும் ஆனந்தமயமான ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஒப்படைக்கவேண்டும் என்பது ஒரு பிரதான கோட்பாடாகும். இவ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கிருஷ்ணரையே சர்வ வல்லமை பொருந்திய கடவுளாகக் கொள்கின்றனர். பக்தி, ஞானம், மற்றும் துறவின் இலட்சணங்கள் பொருந்திய பல்வேறு வைஷ்ணவர்கள் இந்தியாவில் இருந்தபொழுதிலும் கிருஷ்ண பக்தியை உலகெங்கும் பிரசாரம் செய்தவராக பிரபுபாதர் திகழ்ந்தார்.

ISKCON உடைய குறிக்கோள்கள் 1966 ஆம் ஆண்டிலே இந்த இயக்கம் உருவாக்கப்பட்ட பொழுது பிரபுபாதரால் பின்வருமாறு வரையறுக்கப்பட்டது,

1. முறையாக ஆன்மீக ஞானத்தை பரந்த அடிப்படையிலே சமுதாயத்தில் ஏற்படுத்தி ஆன்மீக வாழ்க்கைக்கு வேண்டிய, பக்குவமடைவதற்கான கல்விப் போதனையினை வழங்குதல். அதன் மூலம் வாழ்க்கை பற்றிய விழுமியங்களின் முரண்பாடுகளை நீக்கி மனித சமுதாயத்திலே ஒற்றுமையினையும் அமைதியினையும் ஏற்படுத்துதல்.

2. பகவத்கீதை, பாகவத புராணம் ஆகியவை வெளிப்படுத்தும் கிருஷ்ண உணர்ச்சி பாவத்தை பிரசாரம் செய்தல்.

3. அங்கத்தவர்களுக்கும் சமுதாயத்திற்கும் கிருஷ்ண வழிபாட்டிற்குரிய ஒரு பரத்துவமான, பரிசுத்தமான சந்நிதானத்தை அமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இந்த இயக்கத்தவர்களிடையே பரஸ்பரம் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தி எல்லாவற்றிற்கும் மேலானவரான கிருஷ்ணருக்கு அண்மையில் அவர்களை கொண்டு வருவது. அதன் மூலம் மனித குலம் முழுவதும் கிருஷ்ண பரமாத்மாவின் இயல்பின் அம்சமானவை என்பதைப் புரிந்து கொள்ளச் செய்தல்.

5. ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவின் போதனைகளில் அடங்கிய இறைவனின் திருநாமங்களை கூட்டுப்பிரார்த்தனை வழியாக ஓதுவதன் மூலம் சங்கீர்த்தனமாக ஓதுவதை உற்சாகப்படுத்தல்.

6. ஒரு இயல்பான எளிமையான வாழ்க்கை முறையினை பின்பற்றுமாறு போதிப்பதற்கு அங்கத்தவர்களை ஒன்று கூட்டி அவர்களுக்குக் கல்வி அறிவூட்டுதல்.

7. முன்னால் சொல்லப்பட்ட இலக்குகளை அல்லது நோக்கங்களை அடைவதற்கு வேண்டிய சஞ்சிகைகள், நூல்கள் முதலானவற்றை வெளியிடுதல்.

தற்காலத்தில் ஹரே கிருஷ்ண இயக்கமானது சர்வதேச இயக்கமாக வளர்ச்சி பெற்றுள்ளது. 400 க்கும் மேற்பட்ட இடங்களிலே அதன் அலுவலகங்கள் இயங்குகின்றன. 60 க்கு மேற்பட்ட பண்ணைச் சமுதாயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சுயதேவை பூர்த்தி என்பதை அவை குறிக்கோளாகக் கொண்டவை. 50 கல்லூரிகளும் 90 வரையிலான உணவுச் சாலைகளும் அதனால் நடாத்தப்படுகின்றன. அண்மைக் காலத்தில் மிகக் கூடுதலான பக்தர்கள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் சேர்ந்துள்ளனர்.

கிருஷ்ணர் விஷ்ணுவினுடைய எட்டாவது அவதாரமாகச் சொல்லப்படுகின்ற பொழுதிலும் இந்துக்கள் சிலர் அவரை அவதாரி என்றும் எல்லா அவதாரங்களுக்கும் மூலமானவர் என்றும் கருதுவர். இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கிருஷ்ணரை எல்லாம்வல்ல இறைவனாகக் கொள்வர். அவர்களுடைய எண்ணத்தில் தெய்வீகத்தின் பரமபதமானவர் கிருஷ்ணர். அந்தக் கருத்தும் பிரபுபாதரால் உருவாக்கப்பட்டதாகும். ஹரே கிருஷ்ண இயக்கம் கௌடீய வைணவத்தைப் போல ஒருவனே தேவன் என்ற கொள்கையுடையது. அதன் சிந்தனைகள் பக்திவேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டவை.

**நிறுவன அமைப்பு**

இதன் நிறுவன கட்டமைப்பு பிரபுபாதரால் உருவாக்கப்பட்டது. அந்த இயக்கம் தோன்றி வளர்வதற்கு பெரும்பாலும் அவரே காரணமாக இருந்தார். 1970 இல் ஆளுனர் சபை ஒன்றை உருவாக்கினார். ஜீலை மாதம் 28 ஆம் திகதி 12 பேர் அடங்கிய சபை அவரால் நியமிக்கப்பட்டது. அவர்களின் கடமைகள் மேல்வருமாறு வரையறை செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கோயில் பரிபாலனத்தின் தராதரத்தை விருத்தி செய்தல்.
2. கிருஷ்ண உணர்ச்சி பாவத்தைப் பரவச் செய்தல்.
3. நூல்கள், வெளியீடுகளை வினியோகித்தல்.
4. புதிய நிலையங்களை ஏற்படுத்தல்.
5. பக்தர்களுக்கு கல்வி புகட்டுதல்.

காலப்போக்கில் இந்த நிருவாக அமைப்பானது 48 பேரை உள்ளடக்கிய சபையாக வளர்ச்சியடைந்துள்ளது. அங்கத்தவர் அனைவரும் இயக்கத்தில் உள்ள நீண்ட கால உறுப்பினராவர்.

**தர்மம் பற்றிய போதனைகள்**

தர்ம வாழ்க்கையைப் பின்பற்றுவதற்கு அத்தியாவசியம் என்று கருதப்பட்ட 4 விதிகளை பின்பற்ற வேண்டும் என்று பிரபுபாதர் அறிவுறுத்தினார். அவையாவன,

1. மச்ச மாமிசம் புசிக்காமை
2. முறைகேடான பாலுறவுகளைத் தவிர்த்தல்
3. சூதாட்டத்தை அறவே விலக்குதல்
4. மது வர்க்கங்களை முற்றாக ஒறுத்தல்

இவற்றுடன் புரிய வேண்டிய தர்மச் செயல்களாக தயை (கருணை) தபஸ் (புலனடக்கம்) ஸத்யம் (உண்மை) ஷௌசம் (மனத்திலும் உடலிலும் மாசிலாதிருத்தல்) என்பவற்றைக் குறிப்பிடுகின்றார்.

**வழிபாடு**

இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டு வழிபாட்டை மேற்கொள்வது ஒரு சிறப்பம்சமாகும். ஆலயங்களிலும் பொது இடங்களிலும் வழிபாடு செய்வர். அத்துடன் கிருஷ்ண உணர்ச்சி பாவத்தினை வீடுகளிலும் குடும்பத்தர் மத்தியிலும் அனுசரிப்பர். பொது இடங்களில் கிருஷ்ண மந்திரத்தை ஓதுவதன் மூலமும், நூல்களை எழுதி விநியோகிப்பதன் மூலமும் கிருஷ்ண உணர்ச்சி பாவத்தை பரப்புவதற்கு மிகுந்த முயற்சிகளை மேற்கொள்வர்.

ISKCON சமூகத்தவர்கள் ஹரே கிருஷ்ண மந்திரத்தை தியான மந்திரமாகக் கொள்வார்கள். அது மகாமந்திரம் எனப்படும்.

"ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே"

இதனை மனத்தூய்மையாக உச்சரிப்பதால் கிருஷ்ண பக்தி உருவாகும் என்பது இவ்வியக்கத்தினருடைய நம்பிக்கையாகும். இந்த மகாமந்திரத்தை ஜெபிப்பதற்கு மொழி விளங்க வேண்டுமென்பதோ, தீவிர மனோ சிந்தனையோ அல்லது விவேகமாக ஒழுங்குபடுத்தவேண்டும் என்னும் தேவையோ இல்லை. அது தானாகவே ஆன்மீகத்தளத்திலிருந்து வெளிவருவதால், எவருமே எவ்வித முன் தகைமை பெறாதவர்களுமே இந்த ஜெபித்தலில் ஈடுபட்டு பரவசத்தில் திழைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவு வழங்கும் திட்டம்**

இந்த இயக்கமானது உணவு வழங்கும் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்த திட்டத்தினுடைய அடிப்படை நோக்கம் உலகளாவிய ரீதியில் தாராளமாக ஆருத பட்சண உணவினை வழங்குதலாகும். ஒரு தேவாலயத்திலிருந்து 10 மைல் தூரம் வரை எவரும் பசியோடு போகக் கூடாது என்று 1974 இல் பிரபுபாதர் கட்டளையிட்டார். உலகலாவிய ரீதியில் இயங்கும் இத்திட்டத்திற்கு போல்ரேனர், முகுந்தகோசுவாமி ஆகிய இருவரும் பொறுப்பாக உள்ளனர். 60 க்கு மேற்பட்ட நாடுகளில் இத்திட்டம் செயற்படுகிறது. ஒவ்வொரு நாளும் 7 இலட்சம் பேருக்கு உணவு வழங்கப்படுகிறது.

**சமய இலக்கியங்கள்**

சுவாமி பிரபுபாதரின் சீரிய தொண்டுகளுள் மிகவும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது அவரது நூல்களாகும். அவை அதிகார பூர்வமானவையாகவும், ஆழ்ந்த புலமை உடையவையாகவும், தெளிவு உடையவையாகவும் விளங்குவதால், உலக அறிஞர்களுக்கிடையே உயர்வாக மதிக்கப்படுகின்றன. மேலும் அநேக கல்லூரிப் பாடத்திட்டங்களிலும் அவை மாதிரி பாடநூல்களாகவும் உபயோகிக்கப்படுகின்றன. அவரது நூல்கள் 80 ற்கும் மேற்பட்ட உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளன. 1972 இல் நிறுவப்பட்ட பக்தி வேதாந்த புத்தக நிறுவனம், சுவாமி பிரபுபாதரின் நூல்களை வெளியிடுவதற்காகவே நிறுவப்பட்டதாகும். பிரபுபாதரால் எழுதப்பட்ட நூல்களுள் ஸ்ரீமத் பாகவதம், பகவத்கீதை உண்மையுருவில், தன்னை அறியும் விஞ்ஞானம், கிருஷ்ணருக்கான வழியில், யோகத்தின் பூரணத்துவம், வேதம் வழங்கும் அறிவு, சவால், அமைதியான வாழ்வுக்கு வழி, உயிரிலிருந்து உயிர் தோன்றுகின்றது முதலானவை குறிப்பிடத்தக்கவை.

**உசாத்துணை**

1. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்.ச.,(2008), **பகவத்கீதை உண்மையுருவில்**, 1. பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

2. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்.ச.,(2006), **தன்னை அறியும் விஞ்ஞானம்**, அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம், சென்னை.

3. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர். ச., (1997), **ஸ்ரீமத் பாகவதம்**, பக்திவேதாந்த புத்தக நிறுவனம், சென்னை.

http://www.iskcon.com
http://www.krishnasd.com/
http://news.iskcon.com/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக்கிரடீஸின் ஒழுக்கவியல் சிந்தனைகள்

திரவியநாதன் திலீபன்
மூன்றாம் வருடம்
மெய்யியல் உளவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

உலகில் உயர்ந்த தத்துவங்களை உருவாக்கியதில் கிரேக்கத்திற்கு முக்கிய பங்குண்டு. பழம்பெரும் நாகரிகச் சிறப்பும், கலை அம்சங்களும், இலக்கியச் செழுமையும், அதிகாரப்பலமும் உடைய தொன்மைமிகு கிரேக்கமானது தலைசிறந்த சிந்தனையாளர்களையும், பேச்சாளர்களையும், விஞ்ஞானிகளையும் உலகிற்கு தந்தது. கிரேக்கம் தந்த பகுத்தறிவுச் சிந்தனையாளர்தான் சோக்கிரடிஸ். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தத்துவஞானியான சோக்கிரடீஸை நாம் ஏன் அறியவேண்டும்.

அவர் வாழ்ந்த விதம்
அவருடைய தியாகம்
அவர் விட்டுச்சென்ற புகழ்

எல்லாவற்றுக்கும் மேலாக அவரின் தத்துவ சிந்தனைகள் என்பவையாகும். சோக்கிரடீஸ் இறந்தாலும் கூட தமது சிந்தனை முத்துக்களால் வாழ்ந்து கொண்டிருக்கிறார். உலகில் பல்வேறு நாடுகளிலும் கௌதம புத்தரைப் போற்றுவது போல சோக்கிரடீஸையும் அதிவுயர் மனிதனாகக் கருதிப் போற்றுகின்றனர். இவர் ஒருவேளையில் இந்தியாவில் பிறந்திருந்தால் அம்மக்கள் கடவுளின் அவதாரமாகக் கருதியிருப்பார். மத்தியகிழக்கு நாடுகளில் பிறந்திருந்தால் அம்மக்கள் கடவுளால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியாகக் கருதியிருப்பார் எனக் கூறப்படுவதுமுண்டு. மக்களுடைய வாழ்விற்காக தன் வாழ்க்கையை தியாகம் செய்தவராவார்.

சோக்கிரடீஸ் இளமையில் இயற்கை சாஸ்திரம், பௌதீக சாஸ்திரம், வானசாஸ்திரம், பூகோள சாஸ்திரம் முதலிய துறைகளைப் பயின்று வந்தார் எனத்தெரிகிறது. ஆனால் பிற்காலத்தில் இவைகள் எல்லாவற்றையையும் துறந்து விட்டு மனிதனுடைய நல்வாழ்விற்கான முறைகள் என்ன? என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். இவைகளைப் பற்றித்தான் அறிஞர்களோடு உரையாடினார். இளைஞர்கள் மத்தியில் பிரசாரங்களை மேற்கொண்டார். இவ்வாறே சோக்கிரடீஸின் வாழ்நாளில் பிற்பகுதி கழிந்ததாகும்.

மெய்யியல் வரலாற்றில் பல வினாக்களை தொடுத்து மெய்யியல் விசாரணைகளை மேற்கொண்ட சோக்கிரடீஸ் மனிதனைப் பற்றிய தேடல்களை ஆரம்பித்திருந்தார். இவருடைய மெய்யியல் சிந்தனைகளில் ஒழுக்கவியல் சிந்தனைகளே மேலோங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. நற்பண்பு என்றால் என்ன? நல்லறிவு என்றால் என்ன? நல்லரசு என்றால் என்ன? போன்ற வினாக்களுக்கு அறிவு பூர்வமாக விடைகாண முற்பட்டவராவார். நேர்மை, கட்டுப்பாடு, வாய்மை, புலனடக்கம், தெளிவான சிந்தனை, நேர்மை, இன்மொழி பேசுதல் போன்ற பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தார்.

(The ultimate aim of Socrates philosophical method is always ethical Socrates believed that if one known what that good is one will always do what is good)

சோக்கிரடீஸின் நோக்கில் மனிதன் இயற்கையிலே பிராணியைப் போன்ற சுபாவம் உடையவன். ஆனால் பிராணியைப் போலல்லாது பகுத்தறிவால் மேம்பட்டவன். எனவே அவன் பகுத்தறிவின் துணைகொண்டு செய்யும் காரியங்கள் யாவும் ஒழுக்கவியல் சார்ந்ததாகவே அமையும் எனக் கூறினார்.

சோக்கிரடீஸின் சிந்தனைகளில் தனித்துவமானதும், மிக முக்கியமானதுமாக விளங்குவது "உன்னையே நீ அறிவாய்" என்பதாகும். ஒவ்வொருவரும் உலகத்தைப் பற்றி உணர்ந்து கொள்ள விரைய முன்னர் தன்னைத்தான் உணர்ந்து கொள்ள வேண்டும். தன்னைச் சரியாக உணர்ந்து கொள்பவனால்த்தான் தான் எடுத்துக் கொள்ளும் சகல விடயங்களையும் சரியான முறையில் அறிந்து கொள்ள முடியும். அதனால்த்தான் திருமூலர் போன்ற பேரறிஞர்கள்

"தன்னையறியத் தனக்கொரு கேடில்லை
தன்னயைறியாமல் தானே கெடுகின்றான்............

எனக் கூறியது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

மேலும் "தன்னனையறிதல்" என்பதனைத் தவறாகப் புரிந்து கொண்டவர்கள் தன் பெயரையும், குடும்பத்தையும், உறவையும், நண்பர்களையும் அறிந்திருக்கும் போது வேறென்ன அறிவதற்கு இருக்கிறது என்று எண்ணாமல் தன் பலம் என்ன? தன் பலவீனம் என்ன? தன் விருப்பங்கள் என்ன? எதன் மீது வெறுப்பு? ஏன் அந்த வெறுப்பு? அதற்கு என்ன செய்ய வேண்டும்? என் இலட்சியம் என்ன? அதனை அடைவதற்கு நான் என்னென்ன வழிகளை கடைப்பிடிக்க வேண்டும்? இவ்வாறாக அடுக்கடுக்காக ஆராயும் போது தன்னாற்றலை அறிந்து கொள்ளலாம், அளந்தும் கொள்ளலாம். எனவேதான் வெற்றியின் முதல்படி தன்னையறிதலாகும்.

சோக்கிடீஸின் ஒழுக்கவியல் சிந்தனைகளில் முக்கியமான மற்றொன்று "நற்பண்பே நற்பேறறிவு" என்பதாகும். அதாவது நல்ல அறிவானது நல்ல பண்புகளில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்றது எனக் கூறினார். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான இரகசியம் இதனை தெளிவாக தெரிந்து கொள்வதில்த்தான் இருக்கிறது. இதனாலேயே சோக்கிரடீஸ் தனக்கென்று தனித்துவமான முறையினைக் கையாண்டார்.

எந்தவொரு செயலுக்கும், எந்தவொரு எண்ணத்திற்கும் அடிப்படையாயுள்ள தத்துவம் என்ன? என்பதைத் தேடிச் சென்றார். உலகிலே விதந்து குறிப்பிடக் கூடிய பல அறிஞர்கள் காணப்படுகின்றார்கள் என்பதை அறிவோம். ஆனால் அவர்கள் எல்லோரிடமும் நற்பண்பு இருக்கின்றதா? என ஆராய்ந்து பார்த்தால் கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. எனவே சோக்கிரடீஸின் "நற்பண்பே நற்பேறறிவு" எவ்வகையில் பொருத்தப்பாடுடையதாக விளங்கும். இன்றைய மனிதர்களின் நிலையை ஆராய்ந்து பார்த்தால் அதிகமானவர்கள் நற்பண்பில்லாதவர்களாகவே மாறிவிட்டார்கள். குறிப்பாக இவர்களில் பாரம்பரிய விழுமியங்கள், மனிதாபிமானம், பொதுநலன் என்பன யாவும் மருவியே விட்டதெனலாம். இதற்கு எடுத்துக்காட்டாக யாழ்பாடி மக்களையும் குறிப்பிடலாம். "நெஞ்சு பொறுக்குதில்லை இந்த நிலை கெட்ட மனிதர்களை நினைத்து விட்டால்" என்ற பாரதியாரின் பாடலே நினைவிற்கு வருகிறது. எனவே இன்றைய யுகத்தில் சோக்கிரடீஸ் வாழ்ந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?.

(The ideas that those are certain virtues formed a common thread in Socrates teaching these virtues represented the most important qualities for a person to have foremost of which were the philosophical or intellectual virtue Socrates stressed that virtue was the most valuable of all possessions)

தத்துவஞானம் என்பது உண்மையை அறிவதும், உண்மைக்கு மாறான விடயத்தினை அழிப்பதுமாகும் எனப் போதித்தார். எல்லோரும் உண்மையானவர்களாக அத்தோடு மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக நடந்து கொள்ளவேண்டும் என்ற அவருடைய நேர்மையான எண்ணமே மரணத்தைக் கண்டு அவரை நகைக்க வைத்தது. தமக்கு ஆபத்து வந்த போதிலும் அவர் நேர்மையைக் கைவிட்டவரல்ல. அதனை சோக்கிரடீஸ் வாயிலாக கூறும்போது,

"மரணம் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை
நாம் இருக்கும் வரை மரணம் வரப்போவதில்லை
அது என்னவென்று நமக்குத் தெரியாது
அது வந்த போது நாம் இருக்கப் போவது இல்லை, பிறகு ஏன் கவலை"
என்பதாகும்.

மேலும் சோக்கிரடீஸ் மற்றவர்களின் குறைகளை ஆராய்ந்து பார்க்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவஞானியாக விளங்கவில்லை. உலகில் சிலரை எடுத்துக் கொண்டால் மற்றவர்களின் குறையைப் பற்றிக் கதைத்தே காலத்தைக் கழிப்பார்கள். இதன் மூலம் என்ன பயனை அனுபவிக்கின்றார்களோ தெரியவில்லை. இதுபற்றி மேலும் சோக்கிரடீஸ் குறிப்பிடுகையில், மனிதன் குறையுள்ளவன் மட்டுமல்ல. குறை காண்பவனும் ஆவான். பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன். தன் குறையைத் தானே காண்பவனே முழு மனிதனாவான் எனக் கூறினார்.

சோக்கிரடீஸ் தொடுக்கும் கேள்விகளுக்குப் பின்னால் முக்கியமான மூன்று உண்மைத் தத்துவங்கள் இருந்தன. அவை பின்வருமாறு,

1. நீ எதைச் செய்தாலும் அதாவது ஓர் உத்தியோகத்தில் சேர்ந்து கொள்ளப்போகிறியா, அல்லது திருமணம் செய்து கொள்ளப் போகிறியா அல்லது ஏதாவதொரு கொள்கையை கடைப்பிடித்து வாழப்போகிறியா எதுவானாலும் அதைப்பற்றி முதலில் நன்றாக, தீர்க்கமாக சிந்தனை செய்ய வேண்டும். இதனையே வள்ளுவப் பெருந்தகை,

"எண்ணித் துணிக கருமம் துணிந்த பின்
எண்ணுவதென்பது இழுக்கு"

என வலியுறுத்தினார்.

2. உண்மையிலே உண்மையைத் தேடுவதிலேயே நம்பிக்கை கொண்ட மனிதர்கள் உண்மையாகவும், தீவிரமாகவும் சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் வாழ்க்கையைப் பற்றி மட்டுமல்ல எதைப்பற்றியதானாலும் சரியான அபிப்பிராயம் கொள்வர் என்பது நிச்சயமாகும். இதனை தத்துவஞானி அரிஸ்ரோட்டில் தெளிவுபடுத்துகையில் மனிதர்கள் சிந்தனைத்திறன் கொண்டவர்களாக, பகுத்தறிவு ஆற்றலைப் பயன்படுத்துவோராக வாழ்வதைத்தான் உண்மையில் கடவுளும், வானவர்களும் விரும்புகின்றார்கள் எனக் கூறினார். இதனையே வள்ளுவர்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனக் கூறுவதன் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

3. அறிவைப் பொறுத்தமட்டில் அடக்கமாயிரு, உறுதியான கொள்கையுடையவனாக இரு. அகந்தை கொள்ளாதே. மற்றவர்களின் விமர்சனங்களை வரவேற்று அவற்றில் இருந்து ஏதேனும் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால் அதனைக் கற்றுக் கொள். மற்றவர்களுடைய குறைபாடுகளை எடுத்துக் காட்டுவாயானால் உன்னையும் நீ பரிசோதனை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக, உலகியல் பொருட்களிலும், போக்கிலும் வாழ்க்கை நடத்தைகளிலும், வேறுபாடுகளிலும் முரண்பாடுகள் நிறைந்திருப்பதாக காணலாம். இவ்வேறுபாடுகளை நீக்கி எல்லாவற்றுக்கும் அடிப்படையாக மாறா இருக்கும் பொதுமைத்தன்மையினை காண வேண்டும் என்பதே சோக்கிரடீஸின் சித்தாந்தமாகும். பொதுமைவாதம் பற்றிய சிந்தனையானது இந்தியாவின் மிகப்பழைய இலக்கியமாகக் கருதப்படும் உபநிடதங்களில் ஆழமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றதைக் காணலாம். இதனைப் பின்வரும் உபநிடத மகாவாக்கியமானது தெளிவுபடுத்துகின்றது.

"எவனொருவன் தன்னில் எல்லாவற்றையும்,
எல்லாவற்றில் தன்னையும் காணுகின்றானோ அவனே பிரமஞானி"

மேற்குறிப்பிட்ட பொதுமைத்தன்மையினை இலங்கையில் தற்போது நிலவுகின்ற அடிப்படைச் சித்தாந்தமான "எல்லோரும் ஒரு தாயின் பிள்ளைகள்" அத்துடன் "ஒரு தேசம், ஒரு நாடு" (One nation, One country) என்பதிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறாக பல ஒழுக்கவியல் சித்தாந்தங்களை எடுத்துரைத்த சோக்கிரடீஸ் மீதும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இதன் பின்னர் நஞ்சு கொடுத்து சாகடிக்கப்பட்டார். நஞ்சுக்கோப்பையை சோக்கிரடீஸிடம் நீட்டிய போதும் அதனை இன்முகத்தோடு வரவேற்ற ஞானியல்லவா அவர். "அன்பைப் பற்றியும், அறத்தைப் பற்றியும், நல்ல பண்புகளைப் பற்றியும் பேசித் தம்மைச் சார்ந்தவர்களை திருத்த முடியாதவன் இறப்பது நல்லது" என வலியுறுத்தினார். சோக்கிரடீஸ் இறந்தாலும் தமது சிந்தனைகளால் உலகில் பல பாகங்களிலும் உள்ள மக்களுடைய மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார், வாழ்ந்து கொண்டிருப்பார். என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை. எனவே உலகம் உள்ள வரை சோக்கிரடீஸினுடைய தத்துவசிந்தனைகளும் இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத காவியம் – திருக்கேதீச்சரம்

கி. பிரஷாந்
இரண்டாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

திருமூலர் இலங்கையைச் சிவபூமி எனக்குறிப்பிடுகிறார். அதற்கேற்றாற் போல், இலங்கையிலும் பல தொன்மை வாய்ந்த சிவத்தலங்கள் காணப்படுகின்றன. இவற்றுள், புராதன இலங்கையின் பஞ்ச ஈச்சரங்களாகக் குறிப்பிடப்படுவனவற்றுள் சிறப்பும் தொன்மையும் வாய்ந்தது திருக்கேதீஸ்வரமாகும். இது இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்தில், மன்னார்தீவை வடமாகாணப் பெருநிலப்பரப்புடன் இணைக்கும் பாலத்தின் மார்க்கமாக மன்னார் நகரிலிருந்து தென்திசையில் சுமார் 10 1/2 கிலோமீற்றர் தூரத்திலும், வடமேல் கடலோரத்திலிருந்து சுமார் 3/4 கீலோமீற்றர் தூரத்திலும் உள்ள பாலாவித் தீர்த்தக்கரையில் அமைந்துள்ளது.

ஆதியில் கேதுவினால் பூசிக்கப்பட்ட தலமாதலால் திருக்கேதீச்சரம் என்று பெயர்பெற்றது. பின்னாளில், இத்திருக்கேதீசுவர மூர்த்தியை மகாதுவட்டா எனும் தேவதச்சன் பூசித்து திருப்பணி புரிந்தமையால் இது மகாதுவட்டாபுரம் எனும் பெயர் பெறலாயிற்று என தட்சிண கைலாய மான்மியம், கந்தபுராணம் முதலிய நூல்கள் கூறுகின்றன. மகாதுவட்டாபுரம் என்பது பின்னாளில் மருவி மாதோட்டம் என்றாயிற்று. மகாதுவட்டா என்பவர் இராவணனின் முன்னோர்களில் ஒருவரென இராமாயணம் கூறுகிறது. இதன்படி திருக்குதீச்சரம் இராமாயண காலத்துக்கும் முற்பட்டதென்பதை நிறுவமுடியும்.

மேலும் இராவணனின் மனைவி மண்டோதரி, தீர்த்தயாத்திரை மேற்கொண்ட அருச்சுனன் ஆகியோர் இத்தலத்தை வழிப்பட்டனர் என தட்சிண கைலாய மான்மியம் கூறுகின்றது. இதன் மூலம் திருக்கேதீச்சரத்தின் பெருமையை அறியலாம். கி.மு. 6ம் நூற்றாண்டில் விஜயன் தன் தோழர்களுடன் மாதோட்டத் துறைமுகத்தை வந்தடைந்தான் எனவும், அவனுடன் வந்த உபதிஸ்ஸன் எனும் பிராமணன் திருக்கேச்சரத்திலே பூசை செய்தான் எனவும் மகாவம்சம் கூறுகின்றது. இதிலிருந்து மாதோட்டம் அக்காலத்தில் ஒரு பெரிய துறைமுகமாக விளங்கியுள்ளதென அறியலாம். மேலும், அங்கு அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட உரோம, சீன, அராபிய, பாரசீக நாணயங்களின் மூலம் பல்வேறு வெளிநாட்டினரும் மாதோட்டத்துடன் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தமையை உறுதிப்படுத்தலாம். உறத்தாழ 3800 ஆண்டுகளுக்கு முன்னரே மாந்தைத் துறைமுகம் காணப்பட்டதெனவும், அங்கிருந்து செம்பு ஏற்றுமதி செய்யப்பட்டதெனவும் இலங்கைத் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதோட்டத்தில் பெரிய கடல் வாணிபத் தளங்கள் இருந்தன எனவும், அவை "மாசந்தை" என அழைக்கப்பட்டதாகவும், அச்சொல்லே மருவி "மாந்தை" என்றாயிற்று எனவும் வரலாற்றியலாளர்கள் கருதுகின்றனர். மேலும் அக்காலத் தமிழ் இலக்கியங்களில் மாந்தை பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

*"நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்*
*பணிதிறை கொணர்ந்த பாடுயர் நன்னகர்" – அகநானூறு*

*"புன்னகச் சோலை புனற்றெங்கு மாந்தை" – முத்தொள்ளாயிரம்*

இன்றும், மாதோட்டத்துக்கு அருகில் மாந்தை எனும் ஊர் இருப்பது இதற்கான சான்றாகும்.

தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களான தேவாரமுதலிகளும் திருக்கேதீச்சரப் பெருமையைத் தமது பாடல்களில் குறிப்பட்டுள்ளனர். திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் திருக்கேதீச்சரம் மீது தேவார பதிகங்கள் பாடியுள்ளனர். மேலும் அப்பர் அருளிய திருத்தாண்டகத்திலும் திருக்கேதீச்சரம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அக்காலத்தே திருக்கேதீச்சரத் திருத்தலம் பிரசித்தி பெற்று விளங்கியது என்பதை அறியலாம்.

பிற்காலச் சோழர்களில், இலங்கையை கைப்பற்றிய இராஜராஜ சோழன் இலங்கையிலே கோயில்கள் பல கட்டியதோடு பல பழைய சிவாலயங்களையும் திருத்தினான். இவற்றுள் அக்காலத்தில் இராஜராஜேசுவர மகாதேவன் கோயில் என்றழைக்கப்பட்ட திருக்கேதீசுவரம் தென்னிந்தியாவின் இராமேசுவரம் கோயிலைப்போன்று ஏழு பிரகாரங்களைக் கொண்டு பிரம்மாண்டமான கோயிலாகக் காணப்பட்டது.

இவ்வாறு, புகழ்பெற்று விளங்கிய இவ்வாலயம் 16ம் நூற்றாண்டளவில் அழிவுறத்தொடங்கியது. கி.பி. 1545ல் ஏற்பட்ட கடற்பெருக்கால் மாதோட்டத்தின் சில பகுதிகள் நீரில் மூழ்கின. எனினும் ஆலயத்துக்கு சேதம் ஏற்படவில்லை. 1585ம் ஆண்டு வரை நித்திய புசைகளுடன் திருக்கேதீச்சரம் சிறப்புற்று விளங்கியது. கி.பி. 1585ல் திருக்கேச்சரத்தினுள் நுழைந்த போர்த்துக்கீசர் ஆலயத்தைக் கொள்ளையடித்ததுடன் கோயிலையும் இடித்தழித்தனர். இங்கிருந்த கற்களைக் கொண்டே மன்னார்க்கோட்டை நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

காலப்போக்கில் தென்மேற்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் ஆலய இடிபாடுகள் மண்ணுள் மறைந்தன. ஏறத்தாழ 300 ஆண்டுகள் திருக்கேதீச்சரம் பற்றி எந்த தகவலும் கிடைக்கப்பெறவில்லை. அழிந்துபோன திருக்கதீச்சர ஆலயத்தை மீளக்கட்டியெழுப்பக் கால்கோளிட்டவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1872ம் ஆண்டில் ஆறுமுகநாவலர் விடுத்த விஞ்ஞாபனத்தில், "மன்னார் நகருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே திருக்கேதீச்சரம் எனும் தேன்பொந்து உள்ளது. அதனைச் சென்றடையுங்கள்" என சைவ மக்களுக்கு திருக்கேதீச்சரம் பற்றிய நினைவை ஊட்டினார். எனினும் பிறமதத்தவரின் எதிர்ப்பினாலும் சைவ மக்களின் கவனக்குறைவாலும் ஆலயம் கவனிப்பாற்றுக் கிடந்தது. இந்தக் கவலையுடன் 1879ல் நாவலர் மறைந்தார்.

நாவலர் மறைந்து 14 ஆண்டுகளின் பின் மு.பசுபதிச்செட்டியார் போன்ற சைவப்பிரியர்களின் முயற்சியால் 1894ம் ஆண்டு பண்டைய கோவில் இருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டது. புதைபொருட்களாக இருந்த புராதனலிங்கம், கடவுள் சிலைகள், பெரிய செங்கற் சுவர் போன்றன கண்டுபிடிக்கப்பட்டன. திருக்கோணேசுவரம் இடிக்கப்பட முன் அதனை இடித்த போர்த்துக்கீசத் தளபதி அதன் வரைபடமொன்றை வரைந்து வைத்து விட்டே அதனை இடித்தான். எனினும், திருக்கேதீச்சரம் இடிக்கப்பட்ட போது அவ்வாறு நடைபெறவில்லை. இதனால் அது பற்றிய மேலதிக விவரங்கள் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

கண்டு பிடிக்கப்பட்ட திருக்கேதீச்சரத்தின் இடம் சுமார் 40 ஏக்கர் அளவினதாய் இருந்தது. சைவமக்கள் அவ்விடத்தைத் தம்மிடம் வழங்குமாறு அப்போதைய ஆள்பதியிடம் கோரிக்கை விடுத்தனர். எனினும் அரச காணிகளை விற்பதோ அல்லது தானமளிப்பதோ அன்றைய அரசின் கொள்கைகளில் ஒன்றாக இல்லாததால், அவ்விடத்தை ஏலம்விடுவதெனவும், அதனை ஏலம் மூலம் பெற்றுக் கொள்வதெனவும் முடிவானது. இதன்படி கொழும்பில் கடை நடாத்தும் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் 13/12/1893ல் 3100 ரூபாவுக்கு அக்காணியைக் கொள்வனவு செய்தனர்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த மு.பசுபதிச் செட்டியார் தலைமையில் திருக்கேதீச்சரம் புனருத்தாரணம் செய்யப்பட்டு 28/06/1903ல் மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. மேலும் திருப்பணிகள் செய்யப்பட்டு 1910ம் ஆண்டில் இன்னொரு கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. எனினும் காலப்போக்கில் ஆலயம் கவனிப்பாரற்று சிதைவுறத் தொடங்கியது. எனவே 1944ல் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் எனும் அமைப்பு கொழும்பில் ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் 28/10/1948ல் திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரனசபை எனும் சபை நிறுவப்பட்டது. இதன் மூலம் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மதுரை ஆதீனத்தின் உதவியுடன், 1952ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இன்னொரு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பல்வேறு புனருத்தாரனப் பணிகள், கும்பாபிஷேகங்கள் நடாத்தப்பட்டு திருக்கேதீச்சரம் புதுப்பொலிவு பெற்றது. 1976ம் ஆண்டு கும்பாபிஷேகத்தையடுத்து இவ்வாலயத்தில் திருவிழாக்கள் நடைபெறலாயின. 1983ம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட ஐந்து தேர்களும் வெள்ளோட்டமிடப்பட்டன.

இதன்பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் திருக்கேதீச்சர ஆலயம் மிகவும் பாதிக்கப்பட்டது. 1990 முதல் இக்கோயிலை இலங்கை ராணுவம் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. சமாதானப் பேச்சு வார்த்தையின் பின் 2003ம் ஆண்டு முதல் மீண்டும் திருவிழாக்கள் நடைபெறத் தொடங்கின. மீண்டும் போர் ஆரம்பித்ததால் கோவிலில் திருவிழாக்கள் நடைபெறவில்லை. போர் முடிவுக்கு வந்த பின், திருத்த வேலைகள் செய்யப்பட்டு 2010ம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இலங்கையின் சைவ சமயத்தின் தொன்மையைப் பறைசாற்றியவாறு இன்றும் நிலைத்து நிற்கிறது திருக்கேதீச்சரம்.

உசாத்துணை:


திருக்கேதீச்சர திருத்தல வரலாற்றும் தேவார திருப்பதிகங்களும் - 1990

சைவநெறி ஆண்டு - 10, கல்வி வெளியீட்டகம்

இணையத்தளங்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் அரவான் களப்பலிச் சடங்கு

பா.சுமன்
விடுகை வருடம்,
தமிழ்த்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 01. அறிமுகம்

தமிழர் சமய வரலாற்றில் இதிகாசங்கள், காப்பியங்கள் என்பவற்றில் தெய்வ நிலைக்கு ஏற்றிப் போற்றப்படும் பாத்திரங்களையும், அவற்றிலே இடம்பெறும் வீரபுருசர்களையும் மக்கள் தெய்வ அந்தஸ்து வழங்கி வழிபட்டு வந்துள்ளமையினை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக கண்ணகி, அனுமன், இராமர், திரௌபதை முதலான தெய்வ வழிபாடுகளைக் குறிப்பிட முடியும். அத்தகையதொரு நிலையில் மகாபாரதத்திலே மிகுந்த வீரனாகச் சிறப்பிக்கப்பட்டு, மகாபாரதப் போரிலே பாண்டவர்கள் வெற்றியீட்ட தன்னையே முதற்பலியாக ஈந்த "அரவான்" எனும் பாத்திரமும் இன்று தமிழகத்தில் தெய்வ அந்தஸ்தைப் பெற்று வழிபடப்படுகின்றது. அத்தகைய அரவானுக்கு ஈழத்திலே எடுக்கப்படும் ஒரு சடங்கு நிகழ்வு இங்கு விளக்கம் பெறுகிறது.

## 02. மகாபாரதத்தில் அரவான்

மகாபாரதத்தில் இடம்பெறும் துணைப் பாத்திரங்களில் ஒன்றாகிய அரவான், அர்ச்சுனனுக்கும் நாகன்னியாகிய உலூபிக்கும் பிறந்த குமாரன் ஆவான். இப்பாத்திரம் வடமொழி வியாசரின் பாரதத்தில் சிறப்புப் பெறவில்லை. அதற்கு மாறாக வில்லிபுத்தூராழ்வார் அரவான் எனும் பாத்திரம் தொடர்பில் அதிகம் பேசுகின்றார். அதில் அரவான் தொடர்பில் பின்வரும் விடயங்கள் பேசப்படுகின்றன.

அர்ச்சுனன் வில்லாற்றலால் திரௌபதையை அடைகிறான். தமது அன்னை குந்திதேவியின் வேண்டுகோளின்படி பாண்டவர் ஐவரும் திரௌபதையை மணந்து கொண்டனர். இந்திரப்பிரஸ்தம் என்ற நகரை அமைத்து பாண்டவர்கள் வாழ்ந்து வரும்பொழுது, ஒரு நாள் நாரத முனிவர் அவர்களைக் காண வந்தார். பாண்டவர்கள் ஐவரும் ஒவ்வொரு ஆண்டும் ஒருவர் மட்டும் திரௌபதையோடு கூடி வாழவேண்டும். அவ்வாறு ஒருவர் திரௌபதையோடு கூடி வாழும் போது மற்றவர் யாரேனும் அங்கு சென்றால், அவர் ஓராண்டு தீர்த்த யாத்திரை செல்ல வேண்டும் எனவும் கூறினார். தருமர், திரௌபதையுடன் கூடியிருக்கும் பொழுது அர்ச்சுனன் அங்கு சென்றுவிட்டான். அதனால் தீர்த்த யாத்திரை சென்றான். தீர்த்த யாத்திரை சென்ற அர்ச்சுனன் கங்கையில் நீராடிக் கொண்டிருக்கும் பொழுது உலூபி என்பவள் அங்கு வந்தாள். அருச்சுனன் அவளுடன் கூடியதன் விளைவாக அரவான் பிறந்தான்.

பாண்டவருக்கும் கௌரவருக்கும் போர் மூண்ட வேளையில் பாண்டவர்கள் வெற்றிபெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தேவதையாகிய காளிக்கு முதற்பலி இட வேண்டும் என்றொரு நிலை ஏற்படுகிறது. அதற்கு சகல இலட்சணங்களும் கூடிய ஆண்மகன் வேண்டும். அவ்விலக்கணங்கள் பொருந்தியவர்களில் ஒருவன் அரவான் மற்றையவர் விஷ்ணு என்கிறது வில்லிபாரதம். எனவே, போரில் வெற்றிபெற விஷ்ணு தன்னை களப்பலி கொடுக்குமாறு வேண்டுகிறார். அதுகேட்டு பாண்டவர்கள் வருந்துகிறார்கள். அவ்வேளை அரவான் தன்னை களப்பலியிடும்படி கூறுகின்றான். ஆயினும், இவர்களுக்கு முன்னமே துரியோதனன் பாரதப் போரில் வெற்றிபெறக் கருதி, அரவானிடம் அமாவாசையன்று துரியோதனனாகிய தனக்குக் களப்பலியாகத் தன்னைத் தரவேண்டும் என வேண்டியிருந்தான். அரவான் அதற்கு சம்மதம் தெரிவித்திருந்தான். இதனை அறிந்த கண்ணன், அமாவாசைக்கு முந்திய தினமாகிய சதுர்த்தி தினத்தன்று சூரிய சந்திரரை ஒன்று சேர்த்து அமாவாசையாக்கி பாண்டவர்களுக்காக அரவானைக் களப்பலி கொடுக்கச் செய்தான். அரவான் முறைப்படி காளியின் முன் தன் உறுப்புக்களைப் பலியாகக் கொடுத்தான். அவ்வேளை அரவான் தான் சில நாள் வரை உயிரோடு இருந்து போரை பார்க்க வேண்டும் என வரமும் கேட்டான். வரத்தையும் பெற்றுக் கொண்டான்.

எட்டாம் நாள் போரில் அலம்புசன் என்பவன் வீமன் மேல் சினந்து போர் செய்ய வந்தான். அரவான் அவன் முன் சென்றான். அரவானின் ஆற்றல் கண்டு அஞ்சிய அலம்புசன் பாம்புகளைக் கொன்றழிக்கும் கொடிய கோபமுடைய கருட வேடம் கொண்டு தாக்கினான். திகைத்து நின்ற அரவானை வாள் வீசிக் கொன்றான். அப்போது வருந்தி நின்ற பாண்டவர்களை நோக்கி கண்ணன், "அன்றே தன்னை களப்பலியாக அளித்தவன் இன்றுவரை உயிர் வாழ்ந்து இருந்ததற்கு மகிழ வேண்டிய நீங்கள் வருந்துதல் கூடாது." என்று கூறினான். இத்துடன் அரவான் கதையை வில்லிபுத்தூரார் முடிக்கிறார். இதுவே அரவான் தொடர்பில் வில்லிபாரதம் குறிக்கும் செய்திகள்.

வியாச பாரதத்திலோ அரவான் களப்பலியிடப்பட்ட செய்தி குறிக்கப்படவில்லை. அரவான் களப்பலி இடப்பட்ட செய்தி தமிழ் மரபிற்குள் எப்போது நுழைந்தது என்பதனை திட்டவட்டமமாகக் குறிப்பிட முடியாதுள்ளது. அதற்கு பெருந்தேவனாரின் பாரதம் கிடைக்கப்பெறாமையே காரணம். அதாவது, முதன் முதலில் அரவான் களப்பலியிடப்பட்ட செய்தியை வில்லிபுத்தூராழ்வார்தான் பதிவுசெய்துள்ளார் என்பதனை திட்டவட்டமாக குறிப்பிட முடியாதுள்ளது. வில்லிபாரதம் கூறிய அரவான் களப்பலி கதையை அடிப்படையாகக் கொண்டு பிற்பட்ட காலங்களில் பல நாடகங்களும், தெருக்கூத்துக்களும், அரவான் வழிபாடும் உருப்பெற்றன.

அவற்றில் "நல்லறவான் களப்பலி யாகம்", "அரவான் அலம்புஜன் சண்டை", வையாபுரிச் சித்தர் இயற்றிய "அரவான் களப்பலி இசை நாட்டிய நாடகம்" என்பன குறிப்பிடத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பாரதக் கதையில் இருந்து சில மாற்றங்களைக் கொண்டனவாகவும் விளங்குகின்றன.

### 03. தமிழகத்தில் அரவான் வழிபாடு

தமிழகத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் மகாபாரதக் காப்பியத்தின் பாத்திரங்களான திரௌபதையையும், பஞ்ச பாண்டவரையும் வழிபாடு செய்யும் வழக்கம் மக்களிடத்தில் பரவியுள்ளன. இவ்வாறே "மகாபாரதத்தில் வருகின்ற பாத்திரங்களான கூத்தாண்டவர் (அரவான்), பெரியாண்டவர் (துரியோதனன்), அபிமன்னன் போன்றோருக்குத் தனித் தனியாகக் கோயில் அமைத்தும் வழிபட்டு வருகின்றனர்." அத்தோடு குந்திதேவிக்கும் கோயில் அமைத்து வழிபடுகின்றனர். "தருமபுரி மாவட்டம் கோவலூரில் அமைந்திருக்கும் குந்தியம்மன் கோயில் பழமை வாய்ந்த கோயிலாகும்."

இங்கு அரவான், "கூத்தாண்டவர்" எனும் பெயரிலும், துரியோதனன், "பெரியாண்டவர்" எனும் பெயரிலும் வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அரவான், துரியோதனன், அபிமன்னன் ஆகியோரை இம்மக்கள் வழிபாடு செய்வதற்கு அடிப்படைக் காரணம், போரில் வீரமரணம் அடைந்தவர்களை மக்கள் போற்றி வழிபட்டு வந்தமையே ஆகும். போரில் வீரமரணம் அடைந்தவர்களை வழிபாடு செய்யும் மரபு சங்ககாலம் தொட்டு நிலவிவந்துள்ளது. போரில் இறந்துவிட்ட வீரர்களுக்கு "நடுகல்" என்று அழைக்கப்படும் கற்களை நட்டு வழிபடும் முறை குறித்து தொல்காப்பியம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. நடுகல் வழிபாடு குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களிலும் பதிவாகியுள்ளன. இன்றும் மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றுள்ள நாட்டார் தெய்வங்களில் பல போரில் வீரமடைந்தவர்களை வழிபாடு இயற்றும் முறைமையில் நின்றும் தோற்றம் பெற்றவையே.

கூத்தாண்டவர் என்ற பெயர் ஆரம்பத்தில் கூத்தாடிய சிவனுக்கு வழங்கி வந்தது. பின்னாட்களில் அப்பெயர் அரவானுக்குரிய சிறப்புப் பெயராக நிலைபெற்றுவிட்டது. "கூவத்"திற்கருகில் காணப்பட்ட அரவானை "ஆண்டவர்" எனப் பொதுவாக அழைத்து வந்தமையே "கூவத்தாண்டவர்" என அழைக்கும் வழக்கம் ஏற்படக் காரணமாயிற்று. "கூவம் என்பது நீரோட்டம் குறைந்து குட்டையாகத் தேங்கியிருக்கும் ஆற்றுப் பகுதியைக் குறிக்கும் சொல்லாகும். இச்சொல் சங்க நூல்களில் கூவல் என்றும் தூவல் என்றும் வழங்கிவந்துள்ளதோடு இக்காலத்துப் பொதுமக்கள் பேச்சிலும் வழங்கி வருகின்றது. தென்பெண்ணை ஆறு பாயும் தருமபுரி மாவட்டத்தில் "கூவம்" சில உள்ளன. கூவத்தின் கரையில் அரவான் கோயில்கள் உள்ளன. அரவானைப் பொதுமக்கள் ஆண்டவர் என்கின்றனர். எனவே, கூவத்து ஆண்டவர் கூத்தாண்டவர் ஆகிவிட்டது" என்கிறார் சு.இராசரத்தினம்.

ஆயினும், "ஒயிட்டு ஹார்டு தனது நூலில் கூத்தாடிகள் என்று வன்னியர்களின் ஒரு பிரிவினர் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அரவானை வழிபடுகின்றனர். இதனால் கூத்தாடிகள் ஆண்டவர், கூத்தாண்டவர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்" என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும், தற்காலத்தில் கூத்தாண்டவர் எனும் பெயரில் அரவான் வழிபாடு செய்யப்படுகின்றான் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அரவான் அல்லது கூத்தாண்டவர் என்ற தெய்வத்திற்குத் தனியான கோயில் அமைத்து வழிபடும் அதேவேளை திரௌபதையம்மன் வழிபாட்டோடும் இணைந்தும் அரவான் வழிபடப்படுகின்றான். "வடஆர்க்காடு, தென்னாற்காடு, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஆய்வு செய்த பேராசிரியர் அல்ப்ஹில்டபைடல் 32 கூத்தாண்டவர் கோயில்களைப் பார்த்ததாகக் குறிப்பிடுகின்றார்."

இவை தவிர்த்து திரௌபதையம்மன் வழிபாட்டோடு இணைந்த வகையில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, வீரநல்லூர், கிளாக்குளம், அரிகேச நல்லூர், பண்மொழி, விஸ்வநாதப்பேரி, சிவகிரி, ராஜபாளையம், சங்கரன் கோவில் போன்ற ஊர்களில் அரவான் வழிபாடு இடம்பெறுவதாக வே.கட்டளைகைலாசம் குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக திருநெல்வேலி மாவட்டம் வீரநல்லூர் கம்பளத்தம்மன் சன்னதி தெருவில் உள்ள திரௌபதி கோயிலில் நடைபெறும் அரவான் வழிபாட்டைக் குறிப்பிட முடியும். "இத் திரௌபதியம்மன் கோவிலில் அர்ச்சுனன் சிலையின் இடதுபுறம் திரௌபதி நிற்கிறாள். அவளது இடதுபுறும் மரத்தால் ஆன அரவான் சிலை ஒன்று உள்ளது. திரௌபதி பூசையோடு சேர்த்து அரவானுக்கும் பூசை செய்து வருகின்றனர். திரௌபதி அம்மன் கோவில் திருவிழா நடைபெறும் பொழுது அரவானுக்கும் சிறப்பாக பூசை நடைபெறுகின்றது."

திரௌபதையம்மன் வழிபாட்டோடு மட்டுமல்லாமல் மாரியம்மன், கங்கையம்மன் முதலான தெய்வங்களோடு இணைந்த வகையிலும் அரவான் வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு "வடஆர்க்காடு, தென்னாற்காடு, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஆய்வு செய்த பேராசிரியர் அல்ப்ஹில்டபைடல் மாரியம்மன், கங்கையம்மன் மற்றும் காளியம்மன் போன்ற கிராம தெய்வங்களின் வழிபாடுகளோடு இணைந்தும் கூத்தாண்டவர் வழிபாடு காணப்படுகிறது." எனக் குறிப்பது தக்க சான்றாகிறது.

மகாபாரதத்தின் அடியாகத் தோன்றிய அரவான் வழிபாடு தமிழகத்தில் மக்களிடத்தே செல்வாக்குப் பெற்ற வழிபாடாக விளங்கி வந்துள்ளது. இன்றைய நிலையில் திருநங்கைகள் அரவானை தமது தெய்வம் எனக் கொள்வதனையும், அரவான் வழிபாடு என்பது திருநங்கைகளுக்குரித்தான (அரவாணிகள்) வழிபாடு என்ற பொது நிலைப்பட்ட மனப்பாங்கு ஒன்று உருவாகி வளர்ந்து வருவதனையும் காணமுடிகிறது. மேற்படி நிலைமைக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியவை.

### 04. ஈழத்தில் அரவான் களப்பலிச் சடங்கு

தமிழகத்தைப் போன்று ஈழத்தில் தனித்த வகையில் அரவான் கோவில்கள் எதுவும் இல்லை. ஈழத்தில் மகாபாரத இதிகாசத்தின் பாத்திரமாகிய திரௌபதைக்கு மாத்திரமே எட்டு ஆலயங்கள் (இதுவரையிலான ஆய்வின் அடிப்படையில்) காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் அரவான் வழிபாடு திரௌபதையம்மன் ஆலயத்துடன் இணைந்த வகையிலும் காணப்படுகின்றது என்பது மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்தகைய வழிபாட்டு முறை கூட அரவானுக்கு ஈழத்தில் இல்லை. ஈழத்தில் நிலைபெற்றுள்ள திரௌபதையம்மன் ஆலயங்களில் பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தில் மாத்திரம் அரவான் என்ற பாத்திரத்துடன் தொடர்புடைய "அரவான் களப்பலிச் சடங்கு" எனும் ஒரு நிகழ்வு நிகழ்த்திக் காட்டப்படுகின்றது.

இந்நிகழ்வு இவ்வாலய வருடச் சடங்கின் பதினேழாவது நாள், அர்ச்சுனனின் தவநிலைச் சடங்கு நிறைவுபெற்றதும் (அதிகாலை வேளையில்) நிகழ்த்திக் காட்டப்படுகிறது. இச்சடங்கினை நிகழ்த்திக் காட்டுவதற்காக களிமண்ணினால் அரவானின் உருவம் ஒன்றினைச் செய்கின்றனர். அவ்வரவானின் உருவத்தின் சிரசுப் பகுதியில் பொலித்தீன் பையில் சிவப்பு நிற சாயம் வெளியில் தெரியாதபடி பொருத்தப்பட்டிருக்கிறது. அரவான் களப்பலிச் சடங்கு நிகழும் போது திரௌபதை (திரௌபதையாக வேடம் பூண்டவர்) அரவானின் சிரசை அறுத்து விடுகிறார். இரத்தம் வெளியே சிந்திக் கிடப்பது போன்று பொலித்தீனில் இருந்த சாயம் வெளிப்பட்டுத் தெரிகிறது. இதன் பின்பு திரௌபதை ஆலயத்திற்குள் வந்திருந்து,

'விநாயகரை முன்நிறுத்தி
என் மகனே அரவானே
நாககன்னி புத்திரனே
உன்சிரம் அறுக்க மனம் துணிந்தோம்
பாரதப்போர் வெல்ல வென்றால்
என் மகனே அரவானே
நாககன்னி புத்திரனே
எங்களுக்கு நீர் கையாளி ஆனீரோ
தந்தை சிரம் பிடிக்க
என்மகனே அரவானே
நாககன்னி புத்திரனே
பெற்ற பிள்ளையை நாம் கழுத்தறுத்தோம்
பாரதமும் என்னாலே
என் மகனே அரவானே
நாககன்னி புத்திரனே
அந்தப் படைப்போரும் என்னாலே......'

என்றவாறு அழுது புலம்புகிறார். இப்பாடல்கள் துரியோதனனின் கொடுமைகளையும், பாண்டவர்களின் நிலையையும், அரவானின் தியாகத்தையும் எடுத்துரைத்து, எப்படியும் பாரதப் போரில் வெல்வோம் என்றும், துரியோதனனை பழிவாங்குவோம் எனவும் குறிப்பதாய் அமைந்துள்ளன. இத்துடன் களப்பலிச் சடங்கு நிறைவுறுகிறது. இந்நிகழ்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவான் களப்பலிச் சடங்காக இங்கு நிகழ்த்திக் காட்டப்படுகிறது. இது ஒரு நிகழ்த்துதலாக இடம்பெறுகின்றதே தவிர, அரவானை தெய்வ நிலைக்கு ஏற்றி வழிபடும் மரபாக அமையவில்லை. பாரதக் கதையை நிகழ்த்திக்காட்டும் பாங்கில் ஒரு நிகழ்ச்சியாகவே இது பதிவாகிறது.

அரவானுக்கு களிமண்ணால் உருவம் செய்து வழிபடும் வழக்கம் தஞ்சாவூர் பகுதியில் இருப்பதாக வையாபுரிச்சித்தர் குறிப்பிடுகின்றார். ஆனால், இங்கு களிமண்ணால் உருவம் செய்யப்படுகின்ற போதிலும் அது வழிபடும் நிலையை அடையவில்லை. மகாபாரத இதிகாசப் பாத்திரங்களில் ஆரம்பத்தில் திரௌபதையே மக்களால் வழிபடப்பட்டுள்ளாள். அவ்வழிபாட்டில் அர்ச்சுனன் தவநிலை, வனவாசம், அரவான் களப்பலி முதலானவைகள் சடங்காசாரத்துடன் கூடிய நிகழ்த்துதல்களாக நிகழ்த்தப்பட்டுள்ளன. பிற்பட்ட காலத்தில் திரௌபதையம்மன் வழிபாட்டின் போதான சடங்காசார நிகழ்த்துதல் என்ற நிலையில் காணப்பட்ட அரவான் களப்பலியானது தனித்த வகையில் வளர்ந்து "அரவான் வழிபாடாக" தோற்றம் பெற்றிருக்க வேண்டும்

பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம் இந்திய உபகண்டத்தில் இருந்து வந்த தாதன் என்பவனால் இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்டது என்பதனை மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், தாதன் கல்வெட்டு என்பன குறிப்பிடுகின்றன. அங்கு இன்றளவும் அரவான் களப்பலி ஒரு சடங்கு நிகழ்வாகவே மேற்கொள்ளப்படுகிறது. அச்சடங்கு தனித்துப் பிரிந்த நிலையில் அரவான் வழிபாடாக மாற்றம் பெறவில்லை. எனவேதான், இந்திய உபகண்டத்திலிருந்து பாண்டிருப்புக்குக் கொண்டுவரப்பட்ட திரௌபதையம்மன் வழிபாடானது இன்றளவும் அதேநிலையில் பேணப்பட, இந்திய உபகண்டத்தில் அவ்வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டு அரவான் வழிபாடு, குந்தியம்மன் வழிபாடு, பெரியாண்டவர் (துரியோதனன்) வழிபாடு என்பன தனித்த வழிபாட்டம்சங்களாக வளர்ச்சியடைந்துள்ளன. இவ்வளர்நிலைக்கு திரௌபதையம்மன் வழிபாட்டிலும் மகாபாராத இதிகாசத்திலும் மக்கள் கொண்ட ஈடுபாடு காரணமாகலாம்.

தமிழகத்தில் அரவானுக்கு சிறப்புப் பூசைகளும் வழிபாடுகளும் இயற்றப்பட ஈழத்தில் அத்தகைய செயற்பாடுகள் எதையுமே கண்டுகொள்ள முடியவில்லை. ஈழத்தில் திரௌபதையம்மன் ஆலயங்களில் அரவான் பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாகக்கூட நிலைபெறவில்லை. ஈழத்தில் காணப்படும் திரௌபதையம்மன் ஆலயங்களில் நான்கு ஆலயங்களின் வரலாறுகள் இந்திய உபகண்டத்துடன் தொடர்புடையவை. இவ்வாறு இருக்கையில், அங்கு அரவானுக்கு அளிக்கப்படும் "அந்தஸ்து" அல்லது அரவான் வழிபாடு ஈழத்தில் சிறிதளவேனும் அளிக்கப்படாமைக்கு அல்லது ஈழத்தின் ஒரு பகுதியிலாவது அரவான் வழிபடப்படாமைக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துவெளி நாகரீகம்

T.டினுஷா
1ம் வருடம்,
பல்மருத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

சிந்து நதிக்கரையில் வசித்துவந்தவர்களை "சிந்துக்கள்" அல்லது "இந்துக்கள்" என பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர். அவர்கள் பின்பற்றிய சமயமே இந்துசமயம் என்று சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்திய நாட்டின் மதமே இந்து மதம் என்று கூறுவோரும் உண்டு. ஆனால் ஒரு நாட்டின் பெயராலோ ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. அதனால் இதன் உண்மைப்பொருளை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்துமதம் என்னும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும். இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம்து எனப்பிரிக்கலாம். ஹிம்-ஹிம்சையில், து-துக்கிப்பவன் எனப்பொருள்படும். ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அத்துயரத்தை தனக்கு ஏற்பட்ட துயரமாக கருதி அகற்ற முன்வர வேண்டும். அத்தகையவனே இந்து ஆவான். அப்பண்புமிக்க மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகும்.

இந்து மதம் என்பதற்கு "சனாதன தர்மம்" என வேறு ஒரு பெயரும் உண்டு. இதற்கு அழிவில்லாத அறம் என்பது பொருள். மேலும் இந்து சமய முறையே திருநெறி, அருள்நெறி, தவநெறி,! மெய்நெறி, சர்மார்க்கம் என்ற பல பெயர்களை கொண்டது. சமயம் என்பதற்கு "சமை" என்பது பகுதியாய் உடம்பை வளர்ப்பதற்கு உணவுப்பொருட்களை சமைப்பது போல் இறைவனை அடைவதற்கு பக்குவப்படுத்துவது இதன் பொருளாகும்.

இந்துசமயம் காலத்தால் மிகவும் தொன்மையானது. அது ஒரு காலத்தில் உலகமெங்கும் பரவி இருந்தது என்பதை தற்கால நவீன புதைபொருள் ஆராய்ச்சி முதலியவற்றால் அறியலாம். பிற சமயங்கள் கூறும் கொள்கைகள் பல நமது இந்து சமயத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன. ஆதலால் உலகில் உள்ள எல்லா மதங்களுக்கும் தாய்ச்சமயமாக இந்து சமயம் உள்ளது எனக்கூறலாம். சைவ சமயம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம். பிற சில முக்கிய சமயங்கள் போன்று இச்சமயத்தை ஒரு குறிப்பிட்டவர் தோற்றுவிக்கவில்லை. இந்து சமய எழுச்சிக்கு முதன்மையானவர்கள் நாயன்மார்களே. வேதங்கள், ஆகமங்கள் முதலானவையும் சிவபிரானின் சதாசிவக் கோலத்தினால் அருளப்பட்டவை என்பர். பதினெண் புராணங்களுள் பத்து புராணங்கள் சிவன் பற்றியவை. இலங்கை, இந்தியா, தென்கிழக்காசியா, ஐரோப்பா முதலான எல்லா நாடுகளிலும் சிவாலயங்கள் காணப்படுகின்றன.

மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழ்வாராய்ச்சிகளிலிருந்து ஆசியர் வருகைக்கு முன்பே ஒரு நாகரீகம் இந்திய துணைக்கண்டத்தில் இருந்ததென்பதற்கும் இது திராவிட நாகரீகம் என்பதற்கும் சான்றுகள் கிடைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் அடிப்படையில் ஆரியர் வருகைக்கு முன்பே தென்னிந்தியாவில் நிலவிய வரலாற்றுக்கு முற்பட்ட சமயமே சைவம் என கூறப்படுகின்றது.
பழம் பெருஞ் சமயமாகிய சைவத்தில் கடவுள் வழிபாட்டு பண்பும் பயனும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டுள்ளன. உயிராகிய ("பசு") நம் கடவுளின் ("பதி") இடையறாத உபகாரத்தால் தனது வினைப்பயனாகப் பிறந்து இறந்து பெறும் நீண்ட கால அனுபவத்தில் பாசத்தடையில் இருந்து நீங்கிப் பதியினை சார்ந்து விடுதலை பெறுவதற்கான நிலையில் உள்ளது. இந்த நிலையே "ஞானம்" எனப்படுகிறது. இந்த ஞானமே சைவ வழிபாட்டின் தனித்துவப் பண்பாகும். சிவாலயத்துக்கும் சிவனடியார்க்கும் தொண்டு செய்தலை சைவம் சிவத்தொண்டென அழைக்கிறது. இவ்வாறு செய்யும் தொண்டினால் பலன் பெற்று ஆத்மாவாகிய நாம் இறைவனை அடைகின்றோம் என நம்பப்படுகிறது.

பதியின் திருவடியை அடைவற்குரிய மார்க்கங்களை சைவ நாற்பாதங்கள் என்பர். சைவநன்னெறிகள், சைவநாற்படிகள், சிவபுண்ணியங்கள் என்றும் அழைப்பர். சைவநாற்பாதங்களாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகும். இவை முறையே தாச மார்க்கம் (அடிமை நெறி), சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் எனவும் பெயர் பெறும். சரியையானது புகழ் முதலிய உலக பயனை நோக்கி செய்யும் சிவ புண்ணிய அடிப்படையில் உபாயச்சரியை, பக்தி காரணமாக செய்யும் சிவ புண்ணியம் உண்மைச்சரியை எனவும் மேலும் இரண்டு வகைப்படும். சைவ நாற்பாதங்கள் நான்கும் ஒன்றுக்கொன்று தொடர்பாய் படி போல ஏற்றம் பெற்று செல்வன.

ஆன்மாக்கள் இறைவனது உருவத்திருமேனிகளைத் தமக்குப்புறத்தே வணங்கி சிவாலயத்திற்கும் சிவனடியார்களுக்கும் திருத்தொண்டு செய்தல் சரியை வழிபாடு, இறைவனது அருவுருவத் திருமேனியை அகத்தும் புறத்தும் பூசித்தல் கிரியை வழிபாடு, எம் பெருமானை அகத்தே பூசித்தல் யோகவழிபாடு, அது மனதை விடயங்களின் வழியிலேயே போகாவண்ணம் நிறுத்தி சிவனைத் தியானித்து, பின்பு தானும் தியானிப்போனாகி தியானப்பொருளாகிய சிவன் ஒன்று மாத்திரமே விளங்கப்பெற்று சமாதிநிலை அடைதலாகும். பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்து தெளிந்து நிஷ்டை கூடுதல் ஞானத்தின் வழிபாடாகும்.

இந்து சமயம் வேதங்களையும் தொடர்ந்து வந்து உபநிடதங்களையும் மற்றும் காலங்காலமாகப் பல்வேறு குருமார்களின் அறிவுரைகளையும் ஆதாரமாகக்கொண்ட ஆன்மீக அடிப்படையில் தங்கியுள்ளது. வேத தத்துவ ஞானப் பிரிவுகள், பக்தி இயக்கப் பிரிவுகள், மற்றும் தந்திர ஆகமப்பிரிவுகள் என்பவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் சிந்தனையோட்டங்கள் அனைத்தும் இந்துசமயம் என்கின்ற ஒரே சமுத்திரத்திலேயே சங்கமமாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை இரட்சிப்பீர் .........

இ. கோபிசங்கர்
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

*அளவற்ற அருளாளனே*
*நிகரற்ற அன்புடையோனே*
*கறையற்ற கருணையாளனே*
*உம் பெயரால் மன்றாடுகின்றோம் – எம்மை இரட்சிப்பீர்*

*தந்தைக்கு குருவானவனே*
*ஔவைக்கு ரசிகனானவனே*
*வள்ளிக்கு காதலனானவனே*
*உம் பெயரால் விசுவாசி ஆகுறோம் – எம்மை இரட்சிப்பீர்*

*முத்தமிழை ஆசீர்வதித்தவரே*
*இரு மணவாட்டிகளை மணந்தவரே*
*சாத்தான் சூரன்தனை வதைத்தவரே*
*உம் பெயரால் துதிக்கிறோம் – எம்மை இரட்சிப்பீர்*

*பிரம்மன் தலையில் ஆணவம் களைந்தவரே*
*அருணகிரி நாவில் தமிழாய் வந்தவரே*
*ஈசனின் கண்ணில் பொறியாய் உதித்தவரே*
*உம் பெயரால் அர்ச்சிக்கிறோம் எம்மை – எம்மை இரட்சிப்பீர்*

*எளியவர் எம்மீது இரக்கம் வைத்தீர்*
*எம்மையும் உம்முடன் சேர்த்துக் கொள்வீர்*
*எமக்கொரு புதுவாழ்வைக் கொடுத்திடுவீர்*
*உம்பெயரால் சக்தியவான் ஆகுறோம் – எம்மை இரட்சிப்பீர்*

*பதி..... பசு......பாசத்தின் பெயரால் .................*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே கடவுள்

இ.செந்தூரன்,
மூன்றாம் வருடம்
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.



ஆண்டவன் அருள்வேண்டி
ஆலயப்படி ஏறி
அகமகிழ்வு மனநிறைவு
அடைந்தது அக்காலம்
வரலாறு சொன்னதுண்டு
வாழ்ந்தவர்களும் அவ்வுண்மை-கண்டு
நெறிகளும் வழிகளும்
நிலைக்கவும் பாடுபட்டதுண்டு
தற்காலம் கலிகாலம்
தறிகெடுமோ? இவ்வுலகம்.
ஏராள துன்பம்
ஏனிந்த புவியவலம்?
மெய்யானம் உணராத
விஞ்ஞான வளர்ச்சி
மூடப்பழக்கம் என்றே
முத்திரை யிடப்படும்
சாத்திர சம்பிரதாயம்

ஞானிகள் சித்தர்கள்
ஞாலத்தின் உண்மைதனை
முன்னமே சொன்னபோதும்
புதிய கண்டுபிடிப்பென்று
பழையதிற்கு விருது
ம்........
இம்மை வாழ்வு
இன்பத்தில் திழைக்க
நம்மை சமயம்
நல்வழி ஆற்றும்
தோல்வி கவலை
தோன்றும் தருணம்
கடவுளை துதிக்கும்
காலம் ஆகும்
அன்பே கடவுள்
ஆகின்ற போதும்,
அதுவறியா மானிடம்
அவனியில் வாழ்ந்தென்னபயன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயிருக்க பயமேன் முருகா!

லக்ஷி குணரத்தினம்
இரண்டாம் வருடம்
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

*அழகென்ற சொல்லுக்கும்*
*அறிவென்ற சொல்லுக்கும்*
*அழியாக் காரணனே!*
*நிழல் தேடி வந்தோரை*
*வாழவைக்கும் வசந்தனே!*
*துன்பங்கள் வாழ்க்கையின்*
*துயரமாய் எழுகையில்*
*சரவணபவனாய் காட்சிதந்து*
*சஞ்சலங்கள் போக்குகையில்*
*நீயிருக்க பயமேன் முருகா!*

*வேலின் நடுவே–முருகா நீ*
*வெற்றிச்சிகரனான வேலாயுதனே!*
*குலம் காக்கும் கொள்கை*
*கொண்ட குமரகுருபரனே!*
*துதிப்போர்க்கு வல்வினை போக்கும்*
*துதிக்கையோனுக்கு இளையோனே!*
*தந்தைக்குத் தலைவனான*
*தணியா தணிகாசலனே!*
*நின் பாதம் சரணடைந்தால்*
*நீயிருக்க பயமேன் முருகா!*

*சமயாசாரங்கள் வளர்த்திட*
*சமயங்கள் தேடவில்லை*
*சந்ததிகள் தொழுதிட–நாம்*
*சமர் செய்யவில்லை*
*எங்கு கேட்டாலும்–எதிலும்*
*இயல்பாக வரும் தெய்வம்*
*குன்றினில் வீற்றிருக்கும்–எம்*
*குறிஞ்சிக் குமரன்*
*கேட்ட வரம் அருள்கையில்*
*நீயிருக்க பயமேன் முருகா!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதாவனத் திருக்கோயில்

ந.பிரசன்யா
மூன்றாம் வருடம்,
பொறியியற்பீடம்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

*நீலத் திருமேனிகொண்ட*

*ஸ்ரீராமன் நாயகியாம்-சீதை*

*அசோகவனம் தனிலே*

*சோகமனம் தரித்து*

*மன்னவன் வருவானெனத்*

*தவமிருந்து காத்திருக்க*

*வானரன் வான் பறந்து*

*திருவடிகள் வணங்கிய*

*பின் கர்வம் மேலேறி*

*சிரம் பத்தும் சிலிர்த்து நிற்கும்*

*கொடும் அரக்கன் தனைவதைத்து*

*காதலுடன் உனைச்சேர*

*மன்னவன் வரும் பொழுது*

*ஏன் கவலை என்றுரைத்து*

*ஏந்திழையின் துயர் துடைத்த*

*புண்ணிய நதிக் கரையில்*

*ஐந்நூறு தசாப்தம் சென்றபின்னும்*

*ஸ்ரீராமன் அருள் கொண்டு*

*அடியார்கள் இருள் போக்கும்*

*சீதையம்மன் கோயிலினை*

*சேவித்து ஃபேற அனைவரும் வந்திடுவீர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரன் பெருமை

B. காயத்திரி
1ம் வருடம்
கலைப்பிரிவு
பேராதனைப் பல்கலைக்கழகம்.

குறிஞ்சி எனும் மா மலையில்
குமரனின் புகழ் மாலை பூக்க
மாண்டவரும் மருள விழிக்கும்
மாத்தாண்டவ ஞான குமாரனின்
கருணை மழை காரையும் தோற்கடித்தது

ஏற்றத்தை ஏந்தி நிற்கும் வையகம்
ஏறாத ஞானத்தை வேண்டி நிற்க
வையம் புகழும் குறிஞ்சி குமரனின் – பாதத்தில்
பேரானந்த முக்தியை வேண்டின
பேதமை ஆத்மாக்கள்

சுட்டபழம் கேட்ட ஔவைக்கு
சுத்தானந்த நெறியை போதித்த
குமரா. தனியிடம் தேடி – உன்
குறிஞ்சிக்கு வந்தாயோ?

மும்மலமும் மூர்ச்சையாகி ஓடும்
மும்மூர்த்தி வடிவம் ஒருங்கே பெற்ற
முத்தமிழ் வித்தகனிடம் – அந்நியனே
வையத்திடம் கேள் குமரனின் கருணையை

என் கரமும் பாக்கியம் செய்ததால்
என் ஐயனே உன்னை தொழுகிறேன்
பேசாத தமிழையும் பேசச் செய்த
குன்றத்து குமாரனே முருகையா

உலகப்பற்றும் உண்மையில் கரைந்திடும்
உந்தன் கருணை எனும் மழையில்
குறிஞ்சிக் குமரா குன்றத்தில் உன் குலம் கூத்தாட
நீ மட்டும் குன்றின் முனையில் தனித்ததேன்.

மகாகவியும் உன்னை மன்றாடுகிறான்
மறையும் தமிழை காக்க
குமரகுபரனும் உன்னிடம் வேண்டுகிறான்
குலைந்து போகும் சமயத்தை காக்க

கலியுகம் களிப்போடு சரணடைய
விமோட்சணம் காணும் நாள் எதுவோ
வண்ண மயில் வாகனனே – குறிஞ்சிக் குமரா
நீ வரும் ஆண்டெதுவோ

உன் புகழ் பாடும் நாவும் உதவும் கரமும்
உறைந்து போகும் உதிரமும்
ஓயாது ஓடும் கால்களும் உயிர் வாழும் சுவாசமும்
உன் பாதம் சரணம். சரணம் ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக்குமரா.......

K. ஸ்ரீகாந்,
2ம் வருடம்,
கலைப்பீடம்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

குறிஞ்சிக்குமரா குன்றழகு முருகா
உள்ளக் கோயில் உறைந்திடும் அழகா
கருணையின் கடலாய் திகழ்ந்திடும் வேலா
ஆறிரு தோளா ஆறுமுகக் கந்தா
அடியவன் மனதில் அமர்ந்திடும் வடிவழகா
உனைதினம் போற்றி வருமே பக்தர் கோடி
செப்பிய வார்த்தையில் உந்தன் வதனமே
கவிபாடிய வரிகளில் உந்தன் பெருமையே
தமிழில் இசைபாட உலகில் தமிழ்வாழ
முருகு தமிழாக இசையில் நயமாகி வந்தாய்
சூர சங்காரம் உனது வீர சம்சாரம்
தினமொரு பாடல் உமக்காய் முருகா
தரிசனம் தருவாய் தரணியில் எமக்காய்
பேரறிவு கொண்ட கலைமாந்தர்
பேராதனையில் கல்விக் கடலாளர்
வென்றிடும் வனப்பு மிஞ்சிடும் குளிர்மை
சிறு குன்றினுள் அமர்ந்து எமையாளும்
குறிஞ்சிக்குமரா குறிஞ்சிக்குமரா
என்றும் நீயே அருள்புரிய வா.... வா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரந்தர வா வேலவா!!!

ரசிதா புவனேந்திரன்,
மூன்றாம் வருடம்,
கலைப் பீடம்.
பேராதனைப் பல்கலைக்கழகம்.

---

*கங்கையைச் சடையினில் கொண்டவன் புதல்வனே!*
*மங்கையை இருபுறம் கொண்ட வேல்முருகனே!*
*பங்கய வதனங்கள் கொண்ட வடிவேலனே!*
*செங்கைகள் பன்னிரண்டு கொண்ட சிவபாலனே!*

*ஆறுபடை வீடுதனில் அருளுகின்ற நாயகனே!*
*கூறுமடியார்கள் வினை தீர்க்கவல்ல கோமகனே!*
*ஏறுநடை போடுகின்ற எங்கள் தமிழ்க் காவலனே!*
*மாறுபடு சூரனை மயில் ஆக்கிக் கொண்ட வாகனனே!!*

*குன்றுதோறும் குடியிருக்கும் குமரவனே சண்முகா!*
*உன்றன் மன்றம் தேடி வந்தோம் மனமிரங்கு கதிரவா!*
*வென்றாய் நீ சூரனை வெற்றிவேல் முருகா!*
*என்றன் நெஞ்சிலுள்ள கறைகளைக் களையவா முருகா!!!*

*வள்ளி மணவாளனே தெய்வயானை மனநேசனே!*
*வெள்ளை உள்ளம் கொண்ட கதிர்வேலனே!*
*உள்ளத்தில் உள்ளவினை ஊழ்வினைகள் போக்கிடு*
*பள்ளத்தில் விழுந்த எம்மைப் பரிவுடனே காத்திடு*

*குற்றமற்ற குணநிதியே குறைகளற்ற சிந்தை தா*
*பற்றுப்பாசம் பற்றிடாது பாவிக்கரம் பற்ற வா*
*மாற்றமுறும் உலகிலென்றும் மாறிடாத கருணை தா*
*உற்றதுணை நீயெமக்கு என்றுமெமைக் காக்க வா*

*சரவணப் பொய்கைதனில் சங்கரனால் மலர்ந்தவா*
*பிரணவ மந்திரத்தைப் பிதாவினுக்கே உரைத்தவா*
*சரணடைந்தோம் உன்னிடத்தில் உன்னடியே கதியெனவே*
*வரந்தருவாய் வல்லவனே உன்விழியே சுடரெமக்கு........*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1952ம் ஆண்டு முதல் இன்று வரை இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள், தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1952/57 | பேராசிரியர் ரி.ஆர்.வீ.மூர்த்தி | |
| 1957/58 | பேராசிரியர் த.நடராஜா | திரு. ஏ.முத்துக்கிருஷ்ணன் |
| 1959/62 | | |
| 1962/63 | பேராசிரியர் த.நடராஜா | திரு. க.சிவஜோதி |
| 1963/64 | பேராசிரியர் த.நடராஜா | |
| 1964/65 | பேராசிரியர் த.நடராஜா | திரு. எஸ்.நவரட்ணராஜா |
| 1965/66 | பேராசிரியர் த.நடராஜா | திரு. மு.கனகரட்ணம் |
| 1966/67 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. து.அப்புலிங்கம் |
| 1967/68 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. கு.சண்முகநாதன் |
| 1968/69 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.கிருஷ்ணானந்தசிவம் |
| 1969/70 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. ந.சுகுமாரன் |
| 1970/71 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.ஜெயபாலன் |
| 1971/72 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| 1972/73 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. என்.சந்திரகாந்தன் |
| 1973/74 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. பா.பத்மநாதன் |
| 1974/75 | பேராசிரியர் பே.கணகசபாபதி | திரு. க.குமரேசன் |
| 1975/76 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| 1976/77 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. கு.கந்தசாமி |
| 1977/78 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | திரு. இ.கைலாசாதநாதன் |
| 1978/79 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. எஸ்.சிவனந்தன் |
| 1979/80 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. கு.சிவகணேசன் |
| 1980/81 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. பொ.யுசீலாந்தன் |
| 1981/82 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. ச.தயாபரன் |
| 1982/83 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| 1983/84 | பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியம் | திரு. சி.பாலகிருஷ்ணன் |
| 1984/85 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| 1985/86 | பேராசிரியர் த.யோகரட்ணம் | திரு. ஏ.விஜயரஞ்சன் |
| 1986/87 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |
| 1987/88 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. பீ.தயாபரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1952ம் ஆண்டு முதல் இன்று வரை
### இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்கள், தலைவர்கள்

| ஆண்டு | பெருந்தலைவர் | தலைவர் |
|---|---|---|
| 1988/89 | பேராசிரியர் சி.சிவயோகநாதன் | திரு. எஸ்.குகநேசன் |
| 1989/90 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. இ.சந்திரகுமார் |
| 1990/91 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. செ.இரவீந்திரநாதன் |
| 1991/92 | பேராசிரியர் து.விநாயகலிங்கம் | திரு. க.வல்லபவானாந்தன் |
| 1992/93 | பேராசிரியர் இ.சிவகணேசன் | திரு. தி.நவநீதன் |
| 1993/94 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கணேசநாதன் |
| 1994/95 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.நந்தகுமார் |
| 1995/96 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. பா.சஞ்சயன் |
| 1996/97 | கலாநிதி செ.திருச்செல்வம் | |
| 1997/98 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. உதயசீலன் |
| 1998/99 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.இராகவன் |
| 1999/00 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. நே.ராஜரூபன் |
| 2000/01 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. க.கருணாநிதி |
| 2001/02 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. இ.மயூரன் |
| 2002/03 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ச.சிவஜோதி |
| 2003/04 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. து.அரவிந்தன் |
| 2004/05 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. ப.தயாபரன் |
| 2005/06 | கலாநிதி செ.திருச்செல்வம் | திரு. நெ.நந்தகுமார் |
| 2006/07 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. சா.மோகனஜீவ் |
| 2007/08 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. சி.திவாகரன் |
| 2008/09 | வைத்திய கலாநிதி தி.ஆனந்தமூர்த்தி | திரு. செ.ஜெயசுதன் |
| 2009/10 | திரு.வ.தர்மதாசன் | திரு. ந.சிந்துஜன் |
| 2010/11 | திரு.வ.தர்மதாசன் | திரு. த.கோபிராம் |
| 2011/12 | திரு.சிவயோகலிங்கம் | திரு. ச.சசிக்குமார் |
| 2012/13 | திரு.சிவயோகலிங்கம் | திரு. கு.ஜெயமோகன் |
| 2013/14 | திரு.சிவயோகலிங்கம் | திரு. சி. வினோஜ் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012/2013 ம் ஆண்டு இந்து மாணவர்சங்க

## 56வது செயற்குழுவின் ஆண்டறிக்கை

எமது செயற்குழுவானது தம்மால் இயன்றளவு பங்களிப்புக்களை குறிஞ்சிக்குமரன் ஆலயத்தில் வழங்கியுள்ளது. அவ்வகையில் இவ்வாண்டறிக்கையை உங்கள் முன்சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகிறோம்.

*06.01.2012* எமது செயற்குழு தமது பணிகளைப் பொறுப்பேற்றுக்கொண்டது.

*15.01.2012* **தைப்பொங்கல்** வைபவம் சிறப்பாக நடைபெற்றது.

*29.01.2012* முதல் **அலங்காரஉற்சவம்** ஆரம்பமாகி தினமும் அபிஷேகபூஜை.

*06.02.2012* வரை வசந்தமண்டப பூஜை இடம்பெற்று எம்பெருமானின் திருவீதியுலாவும் இடம்பெற்றது.

*07.02.2012* **தைப்பூசத்திருவிழா**. காலை வள்ளி தேவசேனா சமேத குறிஞ்சிக்குமரனுக்கு அஷ்டோத்திரசத சங்காபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து மகேஸ்வரபூஜையும், மாலையில் வசந்தமண்டப பூஜையைதொடர்ந்து விநாயகப்பெருமான், அம்பாள் சகிதம் அழகியபூந்தண்டிகைடில் எம்பெருமான் திருவீதியுலாவும் இடம்பெற்றது.

*10.02.2012* **வைரவர் விஷேஷ அபிஷேகபூஜை** இடம்பெற்றது.

*20.02.2012* **மஹாசிவராத்திரி** நான்கு ஜாம விஷேஷ பூஜைகள் இடம்பெற்றன. மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் 55வது செயற்குழுவால் இந்துதருமம் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

*07.03.2012* காலை **நடேசர் அபிஷேகம்** இடம்பெற்றது. மாலை நடேசர் தரிசனம், **மாசிமக உற்சவவும்** இடம்பெற்றது.

*13.04.2012* **நந்தன வருஷப் பிறப்பு** விஷேஷ அபிஷேக பூஜை இடம்பெற்றது.

*22.04.2012* **சித்திரா பூரணை** விஷேஷ அபிஷேக பூஜை இடம்பெற்றது.

*18.07.2012* **ஆடி அமாவாசை** விஷேஷ அபிஷேக பூஜை இடம்பெற்றது. அடியார்களுக்கு அன்னதானம்வழங்கப்பட்டது.

*02.09.2012* காலை **மணவாளகோல தினநவோத்ரசகஸ்ர (1009) சங்காபிஷேகம்** இடம்பெற்றது. மாலை திருவூஞ்சல் இடம்பெற்று எம்பெருமானின் திருவீதியுலா இடம்பெற்றது.

*19.09.2012* **விநாயகசதுர்த்தி உற்சவம்**, விஷேஷ பூஜைகளைத் தொடர்ந்து விநாயகப் பெருமானின் திருவீதியுலாவும் இடம்பெற்றது.

*16.10.2012* முதல் **நவராத்திரி** விரத விஷேஷ பூஜை எட்டுநாட்கள் அம்பாளிற்கு விஷேஷ

*23.10.2012* வரை அபிஷேகம், வசந்தமண்டப பூஜை என்பன இடம்பெற்று தேவிதோத்திரங்கள் ஓதப்பட்டன.

*24.10.2012* **விஜயதசமி உற்சவம்**, காலை விஷேஷ பூஜையைத் தொடர்ந்து ஏடு தொடக்கல் நிகழ்வு இடம்பெற்றது. மாலை மானம்பூத் திருவிழா, அம்பாளின் திருவீதியுலா இடம்பெற்று, விஷேஷ அபிஷேகம், வசந்த மண்டப பூஜை என்பன இடம்பெற்றது.

*20.10.2012* **சிரமதானம்** இடம்பெற்றது.

*09.11.2012* **ஆலயபிரதமகுருகள் பா.நித்தியானந்தம்** அவர்களுக்கு சிறிய அளவிலான **பிரியாவிடை** இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *10.11.2012* | **புதிய குருக்கள் க.வரதராஜசர்மா** ஆலயபொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். |
| *13.11.2012* | **தீபாவளி** விஷேஷ அபிஷேக பூஜை இடம்பெற்றது. |
| *14.11.2012* முதல் *19.11.2012* வரை | **ஸ்கந்தஷஷ்டி விரத** ஆரம்பம். முருகப்பெருமாகனுக்கு விஷேஷ அபிஷேக பூஜையைத் தொடர்ந்து வசந்தமண்டப பூஜை இடம்பெற்றது. ஸ்கந்தஷஷ்டிக் கவசமும்ஓதப்பட்டது **கந்தபுராணபடிப்பும்** இடம்பெற்றது. ஆறாம் நாள் **சூரஷம்கார நிகழ்வும்** சிறப்பாக இடம்பெற்றது. |
| *20.12.2012* | **திருக்கல்யாணவைபவம்** இடம்பெற்றது. |
| *27.11.2012* | **திருக்கார்த்திகை உற்சவம்**, மாவிளக்கு ஏற்றப்பட்டு, ஆலயத்தின் சுற்றுப்புறங்களில் அகல் விளக்குகள் ஏற்றப்பட்டன. விஷேஷ அபிஷேகம், வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து சொக்கப்பானை எரிக்கப்பட்டது. |
| *28.11.2012* | **விஷ்ணுவாலய தீபம்** சிறப்பாக இடம்பெற்றது. |
| *18.12.2012* | **விநாயகஷஷ்டி உற்சவம்** இடம்பெற்றது. |
| *19.12.2012* முதல் *28.12.2012* வரை | **திருவெம்பாவை விஷேஷ பூஜை**, தினமும் சிவகாமசுந்தரி சமேத நடராஜபெருமானுக்கு விஷேஷ பூஜைகள் இடம்பெற்றன. திருப்பள்ளியெழுச்சி, **திருவெம்பாவை** பாடல்கள் ஓதப்பட்டன. பத்தாம் நாள் ஆருத்ராஅபிஷேகம், ஆருத்ராதரிசனம் இடம்பெற்றது. |

மேற்குறிப்பிட்ட விடயக்களுடன் பங்குனி உத்தரம், வைகாசிவிசாகம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், கார்த்திகை உற்சவங்கள், நடேசர் அபிஷேகங்கள் என்பன இடம் பெற்றன. மாதந்தோறும் இந்துமாணவர் சங்ககூட்டங்கள் நடைபெற்றன.

எமது செயற்குழு சிறப்பாக இயக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

செயலாளர்கள்,

வி.விஜிதரன் , வி.ஆரபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள் - 2012

### திருக் கார்த்திகை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைப் பூசம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி





## சிவராத்திரி கலை நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக் குழு

## செயற்குழு 2012 – 2013

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பேராசிரியர் திரு வை.நந்தகுமார் |
| பொதுச் செயலாளர் | - | திரு இரா.மகேஸ்வரன் |
| நிர்வாக செயலாளர் | - | கலாநிதி திரு த.சிவானந்தவேள் |
| பொருளாளர் | - | திரு வ.தர்மதாசன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | - | பேராசிரியர் திரு செ.சிவயோகனாதன் |
| | | கலாநிதி திரு வ.மகேஸ்வரன் |
| | | திரு ஏ.அரியரத்தினம் |
| | | திரு கே.நீலகண்டன் |
| | | திரு து.சிவசுப்பிரமணியம் |
| | | திரு நா.அகிலன் |
| | | திரு வே.சிவயோகலிங்கம் |
| | | கு.ஜெயமோகன் |
| | | இ.செந்தூரன் |
| | | வி.விஜிதரன் |
| | | வி.ஆரபி |
| | | தெ.திவ்வியராஜ் |
| | | சி.வினோஜ் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்

## செயற்குழு 2012 – 2013

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | - | திரு வே.சிவயோகலிங்கம் |
| பெரும்பொருளாளர் | - | கலாநிதி திரு த.சிவானந்தவேள் |
| கௌரவ கணக்காய்வாளர் | - | திரு நா.அகிலன் |
| தலைவர் | - | கு.ஜெயமோகன் |
| உப தலைவர் | - | இ.கோபிசங்கர் |
| இணைச் செயலாளர்கள் | - | வி.விஜிதரன் |
| | - | வி.ஆரபி |
| இளம் பொருளாளர் | - | இ.செந்தூரன் |
| இதழாசிரியர்கள் | - | க.தர்சன் |
| | - | லோ.தக்ஷாயினி |
| நூலகர் | - | அ.சிவதரன் |
| பண்டக முகாமையாளர் | - | சி.விக்னேஸ்வரன் |
| நிர்வாக அலுவலகர் | - | இ.ஹஜேந்தனன் |
| | - | க.ஜெய்றோஷன் |
| இணைப்பாளர் | - | தெ.திவ்வியராஜ் |
| செயற்குழு உறுப்பினர்கள் | - | தெ.ரிஷியந்தன்<br>அ.அன்ரனி யோன்சன்<br>ச.ரகுதரன்<br>கு.பகிதரன்<br>த.தனுஷன்<br>ச.கமலேஸ்வரன்<br>பே.மகிந்தன்<br>பா.கௌதனன்<br>சி.லக்சாயினி<br>இ.ரோகினி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்

செயற்குழு 2012 / 2013



நிற்பவர்கள் (இ.வ.) :சி.லக்சாயினி, இ.ரோகினி, க.ஜெய்றோசன், இ.ஹஜேந்தனன், இ.கோபிசங்கர், அ.அன்ரனி யோன்சன்,அ.சிவதரன், தெ.திவ்வியராஜ், சி.வினோச் சி.விக்னேஸ்வரன், ச.ரகுதரன், பா.கௌதனன், தெ.ரிஷியந்தன், ச.கமலேஸ்வரன், க.தர்ஷன், லோ.தக்ஷாயினி, வி.ஆரபி

இருப்பவர்கள் (இ.வ.) :இ.செந்தூரன், கு.ஜெயமோகன், கலாநிதி திரு.த.சிவானந்தவேள், பேராசிரியர் சாந்த.கே.கேனாயக்கே (பிரதி துணைவேந்தர்), திரு வே.சிவயோகலிங்கம், நா.அகிலன், வி.விஜிதரன்

படத்தில் இல்லாதிருப்போர் :கு.பகிதரன், த.தனுஷன், பே.மகிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக்குழு

2012 / 2013



இருப்பவர்கள் (இ.வ.): திரு. திலீபன் திரு. க.பாலதாசன், பேராசிரியர் திரு. வை.நந்தகுமார், கலாநிதி திரு. வ.மகேஸ்வரன், திரு. இரா.மகேஸ்வரன், பேராசிரியர் திரு செ.சிவயோகனாதன், வைத்திய கலாநிதி திருமதி. கோமதி மகேஸ்வரன், கலாநிதி திரு. த.சிவானந்தவேள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### தை



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

14 - தைப்பொங்கல்
15 - சதுர்த்தி விரதம்
18 - குறிஞ்சிக்குமரன் அலங்காரஉற்சவ ஆரம்பம்
21 - கார்த்திகை விரதம் 27 - தைப்பூசம்

### மாசி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | | | |

13 - சதுர்த்தி விரதம்
17 - கார்த்திகை விரதம்
24 - நடேசர் அபிஷேகம்
25 - மாசிமகம்

### பங்குனி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

10 - மஹாசிவராத்திரி
15 - சதுர்த்தி விரதம்
17 - கார்த்திகை விரதம்
26 - பங்குனி உத்தரம்

### சித்திரை



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

13 - கார்த்திகை விரதம்
14 - விஜய வருடபிறப்புசதுர்த்தி விரதம்
25 - சித்திரா பூரணை விரதம்

### வைகாசி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

02 - நடேசர் அபிஷேகம்
10 - கார்த்திகை விரதம்
13 - சதுர்த்தி விரதம்
24 - வைகாசி விசாகம்

### ஆனி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

06 - கார்த்திகை விரதம்
12 - சதுர்த்தி விரதம்

### ஆடி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

04 - கார்த்திகை விரதம்
12 - சதுர்த்தி விரதம்
14 - உதயம் நடேசர் ஆனி உத்தர தரிசனம்

### ஆவணி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

06 -ஆடி அமாவாசை விரதம் 09 -ஆடிப்பூரம்
10 -சதுர்த்தி விரதம் 19 -நடேசர் அபிஷேகம்
24 -குறிஞ்சிக்குமரன் மணவாளக்கோல தினம்
27 -கார்த்திகை விரதம் 16 -வரலஷ்மிவிரதம்
28 ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

### புரட்டாதி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

09 - விநாயக சதுர்த்தி விரதம்
18 - நடேசர் அபிஷேகம்
24 - கார்த்திகை விரதம்

### ஐப்பசி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

05 - நவராத்திரி விரத ஆரம்பம்
08 - சதுர்த்தி விரதம்
14 - விஜய தசமி (மானம் பூ), கேதார கௌரி விரத ஆரம்பம்
21 - கார்த்திகை விரதம்

### கார்த்திகை



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

02 - தீபாவளி
03 - கேதார கௌரி விரத முடிவு
04 - ஸ்கந்தஷஷ்டி விரத ஆரம்பம்
06 - சதுர்த்தி விரதம் 08 - சூரசம்ஹாரம்
17 - திருககார்த்திகை விரதம்
18 - விஷ்ணுவாலய தீபம்

### மார்கழி



| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

06 - சதுர்த்தி விரதம்
08 - விநாயகஷஷ்டி விரதம்
09 - திருவெம்பாவை ஆரம்பம்
15 - கார்த்திகை விரதம்
18 - உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம்

Tel:081-2388139 இந்து மாணவர் சங்கம்- பேராதனைப்பல்கலைக்கழகம் E-mail-hsu@pdn.ac.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இதழுக்கு

விளம்பரம் மூலம்

அனுசரணை புரிந்த

நல்லுள்ளங்கள்

*With Best Compliments From:*

# Krishna Stores

*Crop. Care & Pest Control Services*

*Lankem Agro Chemicals*
*Harcros Agro Chemicals*
*Hayleys Agro Chemicals*
*Hayleys Veterinary Product*
*Ceypetco Agro Chemicals*

Impoters Stockist

*Vegetable Seeds & Sprayers*

**CIC Fertilizer**

***163, Colombo Street, Kandy***

***Tel: 081 - 2234204***
***Fax: 081 - 2224522***

*With Best Compliments From:*

## சுமங்கலி புடைவையகம்



***16, A9 Road, Chavakachcheri***

*With Best Compliments From:*

## Hariharan's

Indian Pooja Items, Fancy Goods



***No. 11, Castle Lane, Kandy***

***Tel: 081 - 4939203***
***Mob: 077 - 3742395***

***E-mail: sathispathma98@mail.com***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# KAJAMUGAN HARDWARE

# கஜமுகன் ஹாட்வெயார்

கட்டடப்பொருட்கள், கம்பி வகைகள், சீமேந்து, PVCபைப் வகைகள், பெயின்ற் வகைகள், Mecson Mesh நெற் வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரே இடம்



**No. 147, 149, Stanley Road,**
**Jaffna.**

**Tel: 021 - 222 2833**




*With Best Compliments From:*

# NIRUTHIKA JEWELLERS





**177, Kasthuriar Road,**
**Jaffna.**

**Tel: 021 - 222 5678**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# கோபால்

போட்டோ,வீடியோ & பந்தல் சேவை

சகல விதமான நிகழ்வுகட்குமான போட்டோ,வீடியோ,பந்தல் சேவைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

மற்றும் அழைப்பிதழ்கள்,பிறேம்வகைகள்,சகலவிதமான அல்பங்கள், பனர்கள் என்பனவற்றை குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளலாம்

அடையாள அட்டைப்படங்கள் 10 நிமிடத்தில் வழங்கப்படும்

பழைய கண்டி வீதி,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி

Email-gobalpvp@gmail.com
T.P-0213208109,0772137194

*With Best Compliments From:*

# Sri Murugan Medical Store





Main Street, Point Pedro

Tel: 077 - 8581531



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



With Best Compliments From:
தலைமைச் செயலகம்
HEAD OFFICE
KARACHCHI NORTH MULTI-PURPOSE CO-OPERTIVE SOCIETY LTD
PARANTHAN.
Regd No:Pa/47 Of 10.02.1971
Our Best Services
1.Distributors
a.Ole marketing Pvt Ltd:(Pepsi Soft Drinks)-Kilinochchi district.
b.Unilever sri lanka Ltd-Mother Union-Northern Province.
c.Tokyo Cement Company (Lanka) PLC-Kilinochchi district
d.Ceylon petroleum Corporation-Dealer.
2.Consumer service.
3.Hotel Services.
4.Rice Mill.
5.Cooperative Rural Bank Service.
6.Social Service.
LANKA FUEL FILLING STATION-PARANTHAN
Umaiyalpuram
T.P.No:0243248302/Fax No:0212280037 Email:Karachchinorthmpcsltd@gmail.com

*With Best Compliments From:*

# Sri Haran Hardware

**182, Colombo Street,
Kandy.**

**Tel: 0094 81- 2223750 / 081 - 2232371
Fax: 081 - 2232371**



**E-mai: kiruba1822@yahoo.com**

---

*With Best Compliments From:*

# CHANDRA STORES

***Importers, Exporters & Wholesale Dealers***

***Authorised Distributors for Prima Ceylon Limited***

**207, Colombo Street, Kandy.
Tel: 081 - 2234332, 2232756, 2229175
Fax: 081 - 2229174
e-mail: chandraimports@yahoo.com**

***Branch:***
***60, New Moor Street, Colombo - 12***
***Tel: 011 - 2448420, 2343959, 2343960***
***Fax: 011 - 2436108***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# VIGNESWARAN STORES




**# 173, Colombo Street,**
**Kandy.**

**Tel: 081 - 2223014**

*With Best Compliments From:*

# Commercial Hardware Stores



**# 43, Colombo Street,**
**Kandy.**

**Tel: 081 - 2234323**
**Fax: 081 - 2223565**

*With Best Compliments From:*

# மந்திகை மருந்தகம்





**புலோலி தெற்கு,**
**புலோலி**

**Tel: 021 - 2263283**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# MURUGAN



# STORES







**36, Colombo Road,**
**Peradeniya**

**Tel: 081 - 2387057**
**0777 - 2533795**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

**SHARAN STORES**



211/5A, Colombo Street,
Kandy

Tel: 071 - 4996888

*With Best Compliments From:*

**கல்யாணி ஸ்டோர்ஸ்**



55, யட்டிநுவர வீதி,
கண்டி.

*With Best Compliments From:*

**SRI LEKAH JEWELLERS**

57, Yatinuwara Veediya,
Kandy.



Tel: 081 - 2229105,
Fax: 081 - 2202925
E-mail: srilekah@sltnet.lk

*With Best Compliments From:*



**Anoki Jewellers**

# 72, Yatinuwara Veediya,
Kandy.

Tel: 081 - 2232932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

## SUN TRADERS



**154, Colombo Street,**
**Kandy**

**Tel: 081 - 2225262**

*With Best Compliments From:*

## Sri Muthumari Stores



**150, Colombo Street,**
**Kandy.**

**Tel: 081 - 2234205**

*With Best Compliments From:*

## New Karunanithi Stores

*General Merchant Whole Sale & Retail*



**124, Colombo Street,**
**Kandy.**

**Tel: 081 - 4476626**
**075 - 6478140**

*With Best Compliments From:*

## Jayanthys

*Specialist in Wedding Sarees*



*Dealers in Gents, Ladies & Children's Readymade Garments*

**106, Colombo Street,**
**Kandy.**

**Tel: 081 - 2222464**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# SRI MURUGAN'S




**94, Colombo Street,
Kandy**

**Tel: 081 - 2223399**

*With Best Compliments From:*

# Central Essence Suppliers

*(Suppliers to Confectioners & Bakers)*

Importers & Distributors of
Quality Essences, Colours & Chemicals
for Food Confectionery & Baking

**76B, Kings Street,
Kandy**

**Tel: 081 - 2224187,
081 - 4933008**

*With Best Compliments From:*

# Mangalaa

*Jewellery*

**WESTERN UNION**

**MONEY TRANSFER**

**No. 68, Yatinuwara Street,
Kandy.**

**Tel: 081 - 2234064**

**E-mail:
mangalaa_kandy@sltnet.lk**

*With Best Compliments From:*

# Ganga Textiles

*Wholesale & Retail Dealers
in Textiles*

Specialist in High Quality
Sarees



**123, Kotugodella Veediya,
Kandy. 081-2222911, 4477334**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல கோடி நன்றிகள்

இந்து தருமம் 2012 இதழ் எந்தவிதமான இடையூறுகளும் இன்றி வெளிவர அருள்பாலித்த குறிஞ்சிக்குமரன் பாதம் பணிந்து

- இம்மலர் சிறப்புற வேண்டுமென ஆசியுரைகள் வழங்கிய அனைவருக்கும்
- தமது நல்லாக்கங்களை தந்து உதவிய விரிவுரையாளர்கள், சக நண்பர்கள் அனைவருக்கும்
- நல்லது இதுவென விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தக பெருமக்கள் அனைவருக்கும்
- நூல் தொடர்பாக இயன்றளவு எழுத்துப்பிழைகள் தீர்த்துதவிய விரிவுரையாளர் வே.சிவயோகலிங்கம் அவர்களுக்கும்
- அட்டைப்படம் படம் வரைந்த க.ஜெய்றோஷன், அ.சிவதரன் அவர்களுக்கும்
- அட்டைப்பட கவிதை வழங்கி உதவிய இ.கோபிசங்கர் அவர்களுக்கும்
- கணனி வடிவமைத்து உதவிய திரு. ந. மனோஜ், செனித் அச்சகத்தாருக்கும்
- இந்நூலை சிறப்புற அச்சிட்டு உதவிய ருச்சிர பதிப்பகத்தாருக்கும்
- ஏனைய நன்றி சொல்ல மறந்த பேருள்ளங்கள் அனைவருக்கும்

அனைவருக்கும் சிரம்தாழ்த்தி பணிவன்புடன் பலகோடி நன்றிகளை
உரித்தாக்கிக் கொள்கிறோம்



நன்றி

**"மேன்மைக் கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**இதழாசிரியர்கள்**

**க.தர்ஷன்** (பொறியியற் பீடம்)

**லோ.தக்ஷாயினி** (பொறியியற் பீடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org